விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

33°c - 25°c தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 90 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 12, புதன்கிழமை 24.02.2016

## சூரியன் உச்சம் கொடுப்பதால் குடாநாட்டில் வெப்பம் அதிகம்

யாழ்ப்பாணம், பெப். 24
சூரியன் மத்திய கோட்டில் உச்சம் கொடுப்பதால், யாழ்ப்பாணத்தில் சில தினங்களுக்கு வெப்பநிலை அதிகரித்துக் பக். 29

## மாணவி படுகொலைக்கு நீதி கோரி வடக்கில் நேற்று ஆர்ப்பாட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.24
வவுனியாவைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமையின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று வடக்கின் பல பாகங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.
வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மாணவர்கள், பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள் எனப் பல தரப்பினராலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டமும், பேரணியும் நடத்தப்பட்டது. பொது அமைப்புக்களால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கான மனு ஒன்று பக். 29

## கோப்பாய் கொள்ளை; சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 24
கோப்பாய்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற தொடர் கொள்ளையுடன் தொடர்புடைய பக். 28

முச்சந்தி முரளி



அடிக்கடி இப்பிடிச் சொல்லுறியள் ஆனா ஒண்டும் செய்யுறதைக் காணேல்லக் கண்டியளே.....

# வடக்கில் இன்று அடைப்பு

### வவுனியா மாணவியின் படுகொலைக்கு நீதிவேண்டி பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 24
வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாணவியின் சாவுக்கு நீதி வேண்டி வடக்கு மாகாணம் முழுவதிலும் இன்று அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்த அடைப்புப் போராட்டத்துக்குச் சகல தரப்பினரையும் ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் பலவும் இந்தப் போராட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளன.
சில அமைப்புக்கள் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன. யாழ். வணிகர் கழகம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இன்று இரண்டு மணி நேரம் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன. பக். 29

## மகசினிலுள்ள தமிழ்க் கைதிகள் நேற்று முதல் உணவு தவிர்ப்பு

கொழும்பு, பெப்.24
கொழும்பு, மகசின் சிறைச்சாலையின் 'ஜே' பிரிவில் உள்ள 14 ஆண் தமிழ் அரசியல் கைதிகளும், பெண்கள் பிரிவிலுள்ள ஒரு பெண் தமிழ் அரசியல் கைதியுமாக 15 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி நேற்றுக் காலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
இதில் பிரமசகாயம் உதயகுமார், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், நடேஸ் குகநாதன், மு.சிவநாதன், மா. நீதிநாதன், க.வேதநாயகம், ந.தர்மராஜா, சு.ஞானசீலன், பக். 29

## ஞானசார தேரர் நேற்று பிணையில் விடுவிப்பு



கொழும்பு, பெப். 24
பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு அச்சுறுத்தல் விடுத்த வழக்குத் தொடர்பில், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட ஞானசார தேரர் நேற்று ஹோமாகம நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.
இதன்போதே, ஞானசார தேரரை இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஒரு ஆள் பிணையில் விடுவிக்க, பக். 29

## செயல்முறைப் பரீட்சைக்கு இன்று தோற்றாதோருக்கு மாற்று ஏற்பாடு

### வடக்கு கல்விச் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 24
ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையின் சங்கீதம், நாடகமும் அரங்கியலும் மற்றும் நடனம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சை திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை நடைபெறும். எனினும் இன்றைய தினம் பரீட்சைக்குத் தோற்றமுடியாத மாணவர்களுக்குப் பிறிதொரு நாளில் குறித்த செயல்முறைப் பரீட்சை நடத்தப்படும். பக்.28

## போர்க்குற்றச்சாட்டுக்கு பதிலளிப்பது கட்டாயம்

### லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, பெப். 24
ஐ. நா. மனித உரிமைகள் சபையினால் முன்வைக்கப்படும் போர்க் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. மாறாக அதிலிருந்து நழுவி விட முடியாது.
இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல. பக். 29

## அடுத்த மூன்று ஆண்டுகளில் அதிக நிதியுதவி இலங்கைக்கு

### மைத்திரியிடம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் உறுதி



கொழும்பு, பெப்.24
இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகக் கடந்த ஆண்டுகளில் வழங்கிய உதவிகளையும் விட அதிகமான உதவிகளை எதிர்வரும் மூன்றாண்டுகளில் பக். 29

## அரசமைப்புச் சபை பிரேரணை; ஒத்திவைக்கப்பட்டது வாக்கெடுப்பு

### திருத்தங்களை உள்வாங்கும் நோக்கில்

கொழும்பு, பெப். 24
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக, நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்குரிய பிரேரணை மீதான வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
குறித்த பிரேரணை மீது இரண்டு நாள்கள் விவாதம் நடத்தப்பட்டு இன்று பக். 29

## வடக்கு வானில் விமானப்படை பயிற்சி செய்ய அரசு தடையாம்

### சொல்கிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, பெப்.24
இனவாதிகளுக்குப் பணிந்து, வடக்கு வான் பரப்பில் பயிற்சியில் ஈடுபடவேண்டாம் என விமானப் படைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச பக். 29




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்போறிக்காக அமைக்கப்பட்ட மலசல கூடங்களில் சில சேதம்

## கலந்துகொண்ட சாரணியர்களுக்கு அசௌகரியம்

யாழ்ப்பாணம்,பெப்.24
ஒன்பதாவது தேசிய ஜம்போறி நிகழ்வில் சாரணர்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட மலசலகூடங்கள் சில சேதமடைந்து முற்றாகப் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன என்றும், அதனால் சாரணர்கள் இடர்களைச் சந்திக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து யாழ். மாநகர சபையினரிடம் வினவியபோது அவ்வாறு தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும், அறிவிக்கப்படும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதிலளிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான சாரணர்கள் ஒன்று கூடியுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில் எண்ணிக்கை அளவில் குறைந்த கழிவறைகள் மற்றும் குளியல் அறைகளே காணப்படுகின்றன. இவற்றில் சில தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளன. அதனால் சாரணர்கள் அவசர தேவைக்களைப் பூர்த்தி செய்வதற்குச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.



கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகிய தேசிய ஜம்போறியில் சாரணர்களின் தேவைப்பாடுகளைப்பூர்த்திசெய்வதற்காக யாழ்.மாநகர சபையால் கழிவறைகள் மற்றும் குளியல் அறைகள் அமைக்கப்பட்டுக் குடிதண்ணீர் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் இந்த நிகழ்வுகள் நிறைவடையவுள்ள நிலையில் சாரணர்கள் பயன்படுத்தும் கழிவறைகள் சில மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குளியல் அறைக்கான நீரும் போதுமான அளவு இல்லை என்றும் அதனால் இடையூறுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான சாரணர்கள் கூடியுள்ள நிலையில் அவர்களுக்கான தேவைப்பாடுகளைச் சீர்செய்வது கடினமான செயற்பாடாகக் காணப்படினும், இவற்றை உரிய வகையில் முகாமை செய்து செயற்படுத்தி இருக்கலாம் என்று சாரணர் பயிற்சி ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

கூடாரம் அமைப்பதற்கான இடம் ஏற்புடையதாக இல்லை, திறமை வெளிப்பாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடும்போது அதிகம் இராணுவம் மற்றும் கடற்படையினர் உள்ளனர். இவர்கள் தமிழ் மொழி பேசுபவர்களாக இல்லாத நிலையில் தொடர்புகள் மிகவும் கடினமானதாகவும், நேரம் வீணடிக்கும் செயற்பாடாகவும் உள்ளது. சில பகுதிகளில் மட்டுமே தமிழ் மொழி பேசும் பயிற்சியாளர்கள் உள்ளதாகவும் தெரிவித்தனர். தமக்கான வசதிகள் போதிய அளவு சீரானதாக இல்லை என்றும் சில சாரணர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-ரி5)

# பல் கட்டுவதில் ஏற்பட்ட போட்டியால் வழக்கு

பல் கட்டுவதில் ஏற்பட்ட தொழிற் போட்டி நீதிமன்றம் வரை சென்றுள்ளது. சம்பந்தப்பட்ட இருவரையும் கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளது யாழ்.நீதிவான் நீதிமன்றம். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல் வைத்தியராகக் கடமை புரியும் பல் வைத்தியர் ஒருவர் தன்னிடம் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளிடம் போலிப் பல் வைத்தியர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும், அவர்களிடம்சிகிச்சைக்குச்செல்ல வேண்டாம் என்றும் தொடர்ச்சியாக எச்சரித்து வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைச் சூழலில் அமைந்துள்ள சில பல் வைத்திய சிகிச்சை நிலையங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அங்கு தராதரம் இல்லாதவர்கள் சிகிச்சை அளிக்கின்றனர் என்றும், அங்கு போக வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளார்.

இதனைக் கேள்வியுற்ற குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஒருவர் பல் வைத்தியருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

இதனை அடுத்து பல் வைத்தியரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த பற்சிகிச்சை நிறுவன உரிமையாளரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

அவர் நீதிமன்றத்தால் பிணையில் விடப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விளக்கத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இருவரது பிரச்சினைகளையும் கேட்டறிந்த நீதிவான் சட்டத்தின் பிரகாரம், சட்டத்தால் குறிக்கப்பட்டவாறு அவரவர் நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ய வேண்டும் எனவும் இருவரையும் எச்சரித்தார்.


அத்துடன் ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தால் உரிய நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நிவாரணத்தைப் பெறுமாறும் நீதிவான் அறிவுறுத்தி வழக்கை இணக்கப்படுத்தி வைத்தார்.

(ற-ஐ-103)

# மணற்காடு சவுக்குத் தோப்பில் தீ

## 3 ஏக்கருக்கும் அதிகமான பகுதி நாசம்

யாழ்ப்பாணம், பெப்.24
வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில் சவுக்குத் தோப்பு தீப்பிடித்துக் கொண்டதில் சுமார் மூன்று ஏக்கருக்கும் அதிகமான சவுக்குத் தோப்பு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.



பொலிஸார், தீயணைப்புப் படையினர், இராணுவத்தினரின் தீவிர போராட்டத்தின் பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில் சவுக்குக் காட்டுக்குள் திடீரென தீப்பற்றிக் கொண்டதில் மூன்று ஏக்கருக்கும் அதிகமான சவுக்குக்காடு தீயில் முற்றாக எரிந்து நாசமாகியது. பற்றிய தீ ஏனைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் குறித்த பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி கேணல் ஹத்துருசிங்க தலைமையிலான இராணுவத்தினரும் தீயணைப்புப்பிரிவினரும் நீண்ட நேரம் தீயுடன் போராடித் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்

தீ பரவியது தொடர்பில் பொதுமக்கள் காட்டிய அக்கறையீனமும், ஒத்துழைப்பின்மையும் காரணமாக மூன்று ஏக்கர் காடு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும், தீயணைப்புப் பிரிவினரும், இராணுவத்தினரும் இணைந்து தீயை அணைக்கப் போராடியபோதும் தீ குறித்துப் பொதுமக்கள் அக்கறையீனமாகச் செயற்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-109-101)

# அந்தரங்க உறுப்பை பெண்ணுக்கு காட்டியவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.24
வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்களைத் தாக்கியதுடன், சாரத்தைத் தூக்கி அந்தரங்க உறுப்பைக் காட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பனிப்புலம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. கைதானவர் அதே பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-4-107)

# கஞ்சா புகைத்த இளைஞனுக்கு ரூ.9,000 அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.24
கஞ்சா கலந்த சுருட்டைப் புகைத்த பொம்மைவெளியைச் சேர்ந்த இளைஞனுக்கு யாழ். நீதிமன்று 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ்.பொலிஸ் பிரிவில் வைத்து குறித்த இளைஞன் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிரான குற்றப் பத்திரத்துடன், பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். இளைஞர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவருக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ற-ஐ-4 -103)

# 60 கிலோ கஞ்சாவுடன் சிக்கியவருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.24
வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் 60 கிலோ கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்குப் பருத்தித்துறை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது என வடமராட்சிக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

பொலிகண்டி இன்பருட்டிப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரையே தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், தப்பியோடிய சந்தேக நபரைப் பிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சிக் கடல் பகுதி ஊடாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடத்தப்பட இருந்த கஞ்சாக் கடத்தல் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதில் 60 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. பொலிஸ் சுற்றிவளைப்பில் இன்பருட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், ஒருவர் தப்பிச்சென்றிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்றுமுன் தினம் பருத்தித்துறை பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதோடு, சந்தேக நபரைப் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியும் பொலிஸாரால் கோரப்புட்டது.

சந்தேக நபரை விசாரணைக்கு உட்படுத்திய நீதிவான் அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார் என உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

(ற-ஐ-109-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் கொள்ளை தொடர்பில் தகவல்களை வழங்குங்கள்

## கிளி. அரச அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி,பெப்.24
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மண் வளத்தைக் கொள்ளையிடுபவர்களைக் கட்டுப்படுத்த கிராம மக்கள் தகவல்களை வழங்கி உதவ வேண்டும் என மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் தற்போது இடம்பெற்று வரும் பெரும் மணல் கொள்ளை தொடர்பாக மக்களுடைய குற்றச்சாட்டுகளை அடுத்துக் கருத்துத் தெரிவித்துள்ள அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தின் மண் வளம் பல இடங்களிலும் கொள்ளையிடப்படுவது தொடர்பில் பலரும் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். இருப்பினும் சம்பவம் இடம்பெறும் இடங்களுக்கு அதிகாரிகள் பகல் வேளைகளில் செல்லும்போது அதனுடன் தொடர்புபட்டோர் தலைமறைவாகிவிடுகின்றனர்.

எனவே கிராம மக்கள் இவ்வாறு மணல் கொள்ளையில் ஈடுபடும் நேரம் தொடர்புடைய வாகன இலக்கங்கள் போன்றவற்றை எமக்கு வழங்கி உதவினால், விரைவில் நாம் மேற்கொள்ள எண்ணியுள்ள விசேட திட்டத்துக்கு உதவும்.

மாவட்டத்தில் இடம்பெறும் மணல் கொள்ளையைக் கட்டுப்படுத்த ஓர் விசேட திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அப்போது இதில் எத்தகையவர்கள் இடம்பெற்றிருந்தாலும் தராதரம் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ற-ஐ-10)

# பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்களுக்கு 3 வருட சம்பள நிலுவை

## வழங்குவதற்கு அனுமதி

கொழும்பு, பெப்.24
பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்களுக்கு 3 வருடங்களாக வழங்கப்படாத சம்பள நிலுவையை வழங்குவதற்கு அமைச்சரவை உபகுழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை உபகுழுக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசாவும், எம்.ஏ.சுமந்திரனும் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவே மேற்படி அங்கீகாரத்தை அமைச்சரவை உபகுழு வழங்கியுள்ளதாக, அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

மேலும், திக்கம் வடிசாலையை மீளவும் கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைத்துக்கொள்வதற்கும், அதனை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் புனரமைப்பதற்கும் அமைச்சரவை உபகுழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(த-வ-5)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
பழைய மாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்
**வருடாந்த பொதுக்கூட்டம் - 2016**
காலம் - 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி
இடம் - கல்லூரியின் சபாலிங்கம் அரங்கம்.
நிகழ்ச்சி நிரல்
- தேவாரம்
- அகவணக்கம்
- தலைமையுரை
- அதிபருரை
- சென்ற கூட்ட அறிக்கை
- செயலாளர் செயற்பாட்டறிக்கை
- பொருளாளர் கணக்கறிக்கை
- புதிய ஆட்சிக்குழு தெரிவு
- புதிய தலைவர் ஏற்புரை
- பிற விடயங்கள்
- நன்றியுரை
- கல்லூரிக் கீதம்

குறிப்பு:- கணக்கறிக்கையை சங்க அலுவலகத்தில் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
ப. நந்தகுமார் – செயலாளர்
(c/29513)(15,17,20)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**



**திரு. மா. ஆனந்தகுமார் (SLPS - 1)**
மல்லாகம் கனிஷ்டாவின் மாண்புறு புகழை மாநிலம் எங்கும் போற்றிட வைத்து தங்கம்மா அப்பாக்குட்டி என்றதன் பெயரதை மாற்றி தரணியெங்கும் தன் பெயர் நிலைத்திடச் செய்த எங்கள் முன்னாள் அதிபர் திரு. மா. ஆனந்தகுமார் (SLPS - 1) அவர்கள் பதவி உயர்வு பெற்று (17.02.2016) அன்று தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுக் கொண்டமையை இட்டு பெருமகிழ் வடைகின்றாம். மென்மேலும் பதவி உயர்வுகள் பல பெற்று பாரெங்கும் புகழ் பெற்றிட அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம் (695444)(15,17,21)
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம் (695440)(15,170.2

**அத்திபாரம் உடைத்தல்**
எமது சங்கத்துக்கு சொந்தமான காணியில் உள்ள உடைந்த கட்டட அத்திபாரம் உடைப்பதற்கு மண் அகழ்வு இயந்திரம் (JCB) வசதி உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:
யாழ் மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம்
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி இல:021 222 3814)
செயலாளர் - கா.பாஸ்கரன்
077 665 3323
(C/29510)(10.17.18.20)

**பணிப்பெண் தேவை**
இரண்டு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீட்டில் தங்கியிருந்து சமையல் உட்பட சகல பணிகளையும் செய் வதற்கு 22 வயதுக்குட்பட்ட பணிப்பெண் உடன் பணிக்குத் தேவை. (69550)
தொடர்பு: சிவசுப்பிரமணியம் (10.17.20)
கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு, புலோலி
021 226 0277

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
23.02.2016 | 1946 | நீலம்
வெற்றி இலக்கங்கள்
17 24 33 36
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 4,060,500/-

நிபத்த ஜய
439
2016.02.23
விஷேட வெற்றி இலக்கம்
1502
12,295,200/-
06 40 55 59 X
Tel: 011 4 824 824

**பாராட்டி வாழ்த்துகிறேன்**



40 ஆவது தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இக் கராத்தே போட்டியில் சிரேஸ்ட வயது பிரிவில் பதக்கங்களை சுவீகரித்த சென்செய்.பி.ஆர்.கபிரியேல், எஸ். விஜயராஜ், அன்ரோடினேஸ் மற்றும் சிவசந்திர போஸ் ஆகியோரை மனமார வாழ்த்துகின்றேன்.

ஜப்பானில் இடம்பெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் சிறப்பாக பங்கெடுத்தமை மற்றும் அன்ரோ டினேஸ் இந்தியா, மலேசியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் சிறந்த சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை சுவீகரித்ததோடு, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் போட்டிகளில் சிறப்பாக பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

★B.R.கபிரியேல் (றேமன் - காட்டா, குமித்தே தங்கம்)
★S.விஜயராஜ் (காட்டா வெள்ளி, குமித்தே தங்கம்)
★அன்ரோடினேஸ் (காட்டா வெள்ளி)
★M.சிவசந்திரபோஸ் (காட்டா, குமித்தே தங்கம்) (69547) (15,17,20)

வாழ்த்துபவர்
மோகன்மாஸ்ரர்
A.O.M.A

**தவறிவிட்டது**
கந்தரோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி இலங்கைநாதன் கோகிலாம்பிகை ஆகிய எனது கடவுச் சீட்டு, ஆளடையாள அட்டை, ஒரு தொகைப் பணம் ஆகியன கைப்பையுடன் (Purse) 20.02.2016 சனிக்கிழமை கந்தரோடை சுன்னாகத்துக்கிடையே தவறிவிட்டது.
விபரமறிந்தவர்கள் தகவல் தரவும்:-
077 44147 87 (C 29514) (10.17.20)

**வேலையாள்கள் தேவை**
எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. மாத வேதனமாக ரூபா 27000/= வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியுண்டு. ஆண்கள் மட்டும். வயது 18 தொடக்கம் 25 வரை. (69541) (14,18,20)
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
11 - A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3857

PEARSON edexcel
BTEC **HND**
**SOFTWARE ENGINEERING**
**BUSINESS MANAGEMENT**
மேலதிக விபரங்களுக்கு 071 777 5666
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்
பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்
**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

**மாணவரின் உள்ளத்திலிருந்து**
லந்துசா, யாழ்ப்பாணம்



சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவியாகிய நான் முகாமைத்துவ துறையில் பட்டதாரியாக வேண்டும் என்ற கனவை IIS இல் இணைந்ததன் மூலம் நனவாக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை இந் நிறுவனம் எனக்கு ஊட்டியுள்ளது. ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது நீண்ட கால அனுபவம், குறைவான கட்டணம், நம்பிக்கையான நிறுவனம் என்பவற்றின் அடிப்படையில் IIS எனது சரியான தெரிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிகாவா? ஆராய்வதற்கு குழு

யாழ்ப்பாணம், பெப்.24
இலங்கையில் சிகா வைரஸ் தொடர்பில் கண்காணிப்பதற்கென விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சிறிய தலை அமைப்புடனான குறைபாடுடன் குழந்தைகள் பிறக்கின்றனவா என்பது உள்ளிட்ட காரணிகள் குறித்தும் கண்காணிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் வைரஸ் நோயான 'சிகா' நுளம்புகளால் இந்தியா, இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கும் பரவலாம் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

டெங்கு மற்றும் சிக்கன்குனியாவுக்குக் காரணமான நுளம்புகளின் வாயிலாகக் கடந்த ஆண்டு பிரேஸிலில் தோன்றிய சிகா நோயானது 24 அமெரிக்கக் கண்ட நாடுகளிலும், ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள சில நாடுகளிலும் படுவேகமாகப் பரவி வருகின்றது.

ஆசியாக் கண்டத்துக்கும் வேகமாகப் பரவத் தொடங்கியுள்ள சிகா வைரஸ் தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

சிகா வைரஸ் கிருமிகள் மிக வீரியத்துடன் பரவி வருகின்றன என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவரான மார்கரெட் சான் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 40 லட்சம் மக்களை இந்த நோய் தாக்கக்கூடும் என மதிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் தொற்று நோய்த் துறை இயக்குநரான டாக்டர் மார் கோஸ் எஸ்பினல், நுளம்புகள் எங்கெல்லாம் உள்ளனவோ அங்கெல்லாம் சிகா நோய் செல்லக்கூடும். அது பரவும் வரை நாம் காத்திருக்கக் கூடாது என எச்சரித் துள்ளார்.

**"டெங்கு மற்றும் சிக்கன் குனியாவுக்குக் காரணமான நுளம்புகளின் வாயிலாக கடந்த ஆண்டு பிரேஸிலில் தோன்றிய சிகா நோயானது 24 அமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள சில நாடுகளிலும் படுவேகமாக பரவி வருகின்றது."**

இந்த நிலையில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, எமது நாட்டில் சிகா வைரஸ் பற்றிய கண்காணிப்பை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில், பிறந்த குழந்தைகளில் சிகா வைரசுக்கான பரிசோதனைகள் ஆரம்பித்துள்ளன.

சிறுதலைக் குறைபாடு தொடர்பிலும் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன. நாட்டில் சிகா வைரஸ் தொடர்பில் கண்காணிப்பதற்கு விசேட குழு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குழந்தை நல ஆலோசகர்கள், மரபுரிமை நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் என்போர் இந்தக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். சிறுதலைக் குறைபாடுடன் குழந்தைகள் பிறக்கின்றனவா? என்பதுடன் அது தொடர்பான காரணிகள் குறித்தும் கண்காணிக்கப்படவுள்ளன.

சிறுதலைக் குறைபாட்டுடன் பிறந்த குழந்தைகள், பிறந்தவுடன் இறந்த குழந்தைகள், பிறந்து 28 நாள்களுக்குட்பட்ட குழந்தைகளில் பரிசோதனைகள் இடம்பெறும்.

குழந்தைகள் நலத்தின் அனைத்து தரப்பு விசேட நிபுணராலும் பரிசோதிக்கப்படும். பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து பிறந்த குழந்தைகளில் இந்தப் பரிசோதனைகள் இடம்பெறும். சிறுதலைக் குறைபாட்டுடன் குழந்தை இருப்பின் 48 மணி நேரங்களுக்குள் 0112692745 , 0112690790 என்ற தொலைநகல் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் பி.ஜி.மகிபால அறிவித்துள்ளார். (ற-ஐ-4-ரி4)

தேவை
சமையல் ஆள் தேவை.
நிலாவரை சந்தி, புத்தூர். (69100)(14,18,20)
077 350 6499 , 077 9905439

பெயர்மாற்றம்
நகுலேஸ்வரா வீதி. கீரிமலை காங்கேசன் துறையைச் சேர்ந்த **இராசமணி சின்னத்தம்பி** ஆகிய நான் எனது பெயரை **இராசமலர் சின்னத்தம்பி** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(68532)(12.9.20) **இராசமலர் சின்னத்தம்பி**

வகுப்புக்கள்
பிரெஞ்சு மொழி தகுந்த முறையில் கற்பிக்கப்படும். (69534)(14,18,20)
50, சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம்.
077 069 0080

தோட்டக்காணி விற்பனைக்கு
உரும்பிராய் தெற்கில் 21 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (த. 29807)(12.19.20)
077 386 7458

Personal & Group Classes
- Grade 6 - O/L Classes
  *Maths, Science & English*
  (Tamil & English Medium)
- ICT,GIT & IT Classes (O/L & A/L)
- Scholarship classes
  *(Exam Paper Focus)* (69357)(14,18,20)

Contact :077 480 8591
077114 8894

SLEAS கருத்தரங்கு
CASE STUDY யும் ஒப்பீட்டுக் கல்வியும்
பேராசிரியர் மா. சின்னத்தம்பி
ஆரம்பம் 26.02.2016 வெள்ளி 3.00 pm
CAPS No. 52, பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி (Near Sampath Bank)
தொடர்புகளுக்கு: 077 3867 458


- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

சொலெக்ஸ் நீர் பம்பிகள்
உயர்ந்த . நம்பிக்கையான


ரூபா.8450/- முதல்...
0773 658869
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு
சொலெக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

Institution of Professional Development For Teachers
இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் தர போட்டிப்பரீட்சைக்கான விசேட செயலமர்வு

**காலம்:** 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மாலை 4.00
**இடம்:** யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி

- திறந்த ✱மட்டுப்படுத்தப்பட்ட ✱ சேவைமூப்பு அடிப்படையிலான அனைவருக்கும்
- **பேராசிரியர் மா.சின்னத்தம்பி-** விடய ஆய்வு கல்விமுகமைத்துவம்
- **கலாநிதி த.கலாமணி-** நுண்மதி, பொதுஅறிவு
- **கலாநிதி. பா. தனபாலன்-** ஒப்பிட்டுக் கல்வி, கிரகித்தல்.

ஒரே இடத்தில் ஒரே நாளில் விசேட வழிகாட்டல் சந்தேகங்கள் தீர்த்தல் மாதிரி வினாத்தாள்
" ஏற்கனவே பதிவு செய்தவர்களைத்தவிர பங்குபற்ற விரும்புபவர்கள் தொலைபேசியில் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்."

**கலாநிதி பா. தனபாலன் (பணிப்பாளர்)**
**ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்**
**தொலை பேசி- 077 068 1958**
**தலைமைச் செயலகம்**
**துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு**
**கோண்டாவில்.**
(69454)(12.18.20)

# ரோகித ராஜபக்சவின் காதல் தோல்விப் பாடல்!

கொழும்பு, பெப். 24
காதல் தோல்வியை உணர்த்தும் வகையிலான, "என்னை விட்டு இன்னொருவனுடன் சென்றாய்" என்ற வரிகளைக் கொண்டமைந்த பாடல் ஒன்றை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் ரோகித ராஜபக்ச எழுதிப் பாடி வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் ரோகித ராஜபக்ச "மங்முல வெலா" என்ற காணொலிப் பாடல் ஒன்றைப் பாடி வெளியிட்டுள்ளார்.

இந்தப் பாடலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளதோடு, பிள்ளைகளின் திறமை பெற்றோரின் மகிழ்ச்சிக்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"என்னை விட்டு இன்னொருவனுடன் சென்றாய்" என்ற வரிகளைக் கொண்ட இந்தப் பாடலைத் தானே எழுதிப் பாடியுள்ளார் ரோகித ராஜபக்ச. இந்தப் பாடலுக்கு பாசன் லியனகே இசையமைத்துள்ளார்.

இந்தப் பாடலின் வரிகள் அனைத்தும் காதல் தோல்வியின் வலியை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளன. "யுடியூப்" தளத்தில் வெளியிட்டு இரண்டே நாள்களில் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தப் பாடலைப் பார்வையிட்டுள்ளனர். (ற-ஐ-5)

# வழக்கு தொடர்வதற்கு பணமில்லை என விளம்பரம் செய்த தம்மாலோக தேரர்!

கொழும்பு, பெப்.24
சட்ட விரோதமான முறையில் யானைக்குட்டி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டை எதிர்கொண்டிருக்கும் உடுவே தம்மாலோக தேரர், வழக்குத் தொடர்வதற்கு சட்டத்தரணிக்குப் பணம்செலுத்த தன்னிடம் வசதி இல்லை எனத் தெரிவித்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளார்.

தனக்கு எதிரான வழக்கை எதிர்கொள்வதற்காக இந்த விளம்பரத்தைப் பிரசுரித்திருப்பதோடு மனமுவந்து உதவியாளர்கள் நன்கொடையாக பணம் வழங்குமாறும் அதில் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை வெளியாகும் சிங்களப் பத்திரிகையின் முழுப்பக்கத்திலும் அவர் தனது விளம்பரத்தை கறுப்பு, வெள்ளை நிறத்தில் பிரசுரித்துள்ளார்.

இவர் இந்த விளம்பரத்துக்காக 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவைச் செலுத்தியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்ற போதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

யானைக்குட்டி தொடர்பான வழக்கை முகம்கொடுப்பதற்காகத் தன்னிடம் 10 ரூபா கூட இல்லை என்று உடுவே தம்மாலோக தேரர் கூறியிருந்தார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் அரச விதைப் பண்ணை செயற்பாடுகள் மீள ஆரம்பிப்பு

கிளிநொச்சி, பெப்.24

30 ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த பரந்தன் அரச விதை விவசாயப் பண்ணையின் விதை உற்பத்திச் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விவசாயத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்குத் தேவையான தரமான விதை நெல் தேவையைக் கவனத்திற் கொண்டே இந்த விதை நெல் உற்பத்தி விவசாயப் பண்ணையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய ஆலோசகரான வருணகாரியவசம் தெரிவித்துள்ளார்.

72 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ள பரந்தன் அரச விவசாயப் பண்ணையில் செய்கை பண்ணப்பட்டிருந்த விதை நெல் விளைச்சல் அண்மையில் அறுவடை செய்யப்பட்டுள்ளது என்று வடமாகாணத்தின் விதைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் சதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த விதை உற்பத்தி விவசாயப் பண்ணையில் விவசாயத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நெல் இனங்களில் முன்னைய சந்ததியினரின் விதை நெல்லை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

> 72 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ள பரந்தன் அரச விவசாயப் பண்ணையில் செய்கை பண்ணப்பட்டிருந்த விதை நெல் விளைச்சல் அண்மையில் அறுவடை செய்யப்பட்டுள்ளது

நெல்லினங்கள் எதிர்வரும் நெற்செய்கைப் போகங்களின் போது வடமாகாண விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் பரந்தன் அரச விவசாயப்பண்ணையின் முகாமையாளரான எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார். (ற-ஐ-22)

## பூசணிக் கொடி அழிப்பு; ஒருவருக்கு மறியல்

விளைநிலத்தினுள் சென்று 2 ஆயிரத்துக்கு மேற் பட்ட பூசணிக் கொடிகள் பிடுங்கி அழிக்கப்பட்டுள்ளன. அதற்குக் காரணமானவர் என்று குற்றஞ்சாட்டப்படும் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் உள்ள விளைநிலத்தில் 2 ஆயிரம் பூசணிக் கொடிகள் விவசாயி ஒருவரால் பயிரிடப்பட்டு பூத்து காய் பிடிக்கும் பருவத்தில் காணப்பட்டன. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை, வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் பூசணி பயிரிடப் பட்ட காணி தனது எனக் கூறி பயிர்களை அப் புறப்படுத்துமாறு கூறியுள்ளார்.

அறுவடை முடிந்ததும் காணியை விடுவதாக விவசாயி கூறிய போலும் அன்று இரவு இனந்தெரியாதோரால் ஆயிரத்துக்கு மேற் பட்ட பூசணிக் கொடிகள்பிடுங்கிஅழிக்கப்பட்டன.

இது தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பயிர்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக நீதிமன்றில்அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் குறித்த சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவில்லை.

அதனையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுசெய்ததையடுத்து வெளிநாட்டிலிருந்து வந்த நபரைக் கைது செய்த பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். அதன்போதே குறித்த நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ-4-9)

# மயானங்களை புனித இடங்களாக மறு சீரமைப்பதற்கு நடவடிக்கை

## வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, பெப்.24

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில் உள்ள மயானங்கள் மரியாதைக்குரிய புனிதமான இடங்களாக மறு சீரமைப்பு செய்யப்படும். இதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு வசதியாக மயானங்களுக்கான மயான அபிவிருத்திச்சபைகள் நிறுவப்படுகின்றன என வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் யு. ஜெலீபன் அறிவித்துள்ளார்.

வலி.கிழக்கு பிரதேசத்தில் உள்ள மயானங்கள் கழிவுகள், குப்பைகள் கொட்டப்படும் இடங்களாகவும், இயல்பு நிலையில் மக்கள் நடமாட முடியாத இடங்களாகவும் இருந்து வருவதோடு , மயானங்களுக்கான காணிகள் தனியாரால் கையாளப்பட்டு வருகின்றன. மயானங்களுக்கானசொத்துக்கள் உடைமைகள்சேதப்படுத்தப்படுகின்றன என்று செய்யப்பட்டுவரும் முறைப்பாடுகளை அடுத்து வலி.கிழக்குப் பிரதேசசபை மயானங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மயான அபிவிருத்திச் சபைகளை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக மயான அபிவிருத்திச் சபைகளை நிறுவுவதற்கு சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-11)

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.24

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு உலக தரிசன நிறுவனத்தால் வழங்கப்பட்ட விளையாட்டு முற்றம், விசேட மேசைகள், கதிரைகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் உலக தரிசன நிறுவன செயற்றிட்ட அலுவலர்கள், வலிகாமம் வலயக் கல்விப் பணிமனை கல்வி அதிகாரிகள், வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினர், சங்கானை வலி.மேற்குப் பிரதேச செயலக அலுவலர்கள், வங்கி முகாமையாளர்கள், சங்கானை கோட்டக்கல்வி அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-ரி)

# பாடசாலை மாணவருக்கான வானிலை அவதான நிலையம்

சாவகச்சேரி, பெப்.24

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் கற்றல் வளத்தை மேம்படுத்தும் நோக்கில் வானிலை அவதான நிலையம் நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்படவுள்ள நிலயத்தின் செயற்பாடுகள், உடனுக்குடன் அவதானிக்கப்பட்டு அறிகுறிகள் காணப்படின் உடனடியாக அனைத்துப்பாடசாலைகளுக்கும் அலைபேசி குறுந்தகவல் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

மழை மற்றும் இயற்கை இடர் ஏற்படுவதற்கான அறிகுறிகள் நிலையத்தில்காணப்படின்உடனுக்குடன்மாணவர்களை உசார்படுத்துவதுடன் அதனை எதிர்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ள ஏதுவான நிலையில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

வேள்ட் விஷன் நிறுவனத்தினரின் கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பான றீ-வோஷ் திட்டத்தின் கீழ் வானிலை அவதான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொண்டு வானிலை அவதான நிலை யத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ற-ஐ-9)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சிவில் அலுவலர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் வீதியில் விழுந்து, புரண்டு படுகாயமுற்ற சிவில் பாதுகாப்புப் படை அலுவலர், 8 நாள்களாகச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்த விபத்து வள்ளிபுனத்தில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. முல்லைத்தீவு வள்ளிபுனம் முகாமில் கடமையாற்றும் சிவில் பாதுகாப்புப் படை அலுவலர் மற்றுமொருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

அதன்போதே வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டு, இருவரும் படுகாயமுற்ற நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

லியனகே ஆராய்சிகே லலித் பிரியந்தா என்பவர் உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுப் பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.

நீதிமன்றப் பணிப்புரைக்கு அமைவாக திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் விசாரணை மேற் கொண்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-4-86)

## முகம் மறைக்கும் தலைக்கவசம் அணிந்து சங்கிலிக் கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 24

மோட்டார்சைக்கிளில் சென்ற இருவர் ஆலயத்துக்குச் சென்ற வயோதிபப் பெண் அணிந்திருந்த 4 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்குப் பின்புறமாக நடந்துள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்தனர்.(ற-ஐ-4-107)


## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



கடந்த ஒன்பது வருடங்களாக எமது பாடசாலையில் அதிபராக இருந்து அளப்பெரும் சேவையாற்றி இன்று (24.02.2016) புதன்கிழமை ஓய்வு பெறும் எமது அதிபர்

உயர்திரு. சீவகாருணியம் சிவநேசன்

( Sp.Trd.Maths, SLPS -I )

அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

Congratulations

**சேவை விவரம்**

| | | |
|---|---|---|
| யா/நாகர் கோவில் ம.வி | - 1978.06.01 | - 1981.12.31 |
| பலாலி ஆசிரிய கலாசாலை | - 1982.01.01 | - 1983.12.31 |
| வ/பெரியதம்பனை அ.த.க பாடசாலை | - 1984.01.01 | - 1987.08.31 |
| கிளி/கனிஸ்ர ம.வி | - 1987.09.01 | - 1989.08.23 |
| கிளி/பரந்தன் இந்து ம.வி | - 1989.08.24 | - 1990.06.14 |
| யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி | - 1990.06.15 | - 1993.07.08 |
| | (1991.06.01 | இல் அதிபர் III ) |
| யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி. | - 1993.07.09 | - 2001.05.31 (உப அதிபர்) |
| யா/காந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை | - 2001.06.01 | - 2007.11.13 (அதிபர்) |
| யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை | - 2007.11.14 | - 2016.02.23 (அதிபர்) |

ஆசிரியர் நலன்புரி கழகம்.
பழைய மாணவர் சங்கம்
பாடசாலை அபிவிருத்திச் சபை.
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.

(69524)
(14,18,20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கிறோம்



எமது அரச முதியோர் இல்லத்தில்
உத்தியோகத்தராக கடமையாற்றும்
செ. இராசலட்சுமியின்
அன்புத் தாயார்
**இராசமணி செல்லக்கண்டு**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்**
**அரச முதியோர் இல்லம், கைதடி.**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சாந்தி கதிரவேற்பிள்ளை**
மண்ணில் 1968.01.26 — விண்ணில் 2009.02.11
(திதி:தைப்பிறைத் துதியை)
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன்
நல்வாழ்வுக்கு வழிகாட்டி
எமக்காகவே வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுடன்
என்றும் வாழ்கின்றோம்.
கணவர்- கதிரவேற்பிள்ளை
பிள்ளைகள் - விஷ்ணுகாந், கேமகாந், விமல்காந்.
(60746)(11,18) **இல.45, சோலை, வல்லவராயன் கட்டு.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.01.2016
திங்கட்கிழமை
சிவபதமடைந்த
அமரர்
**கணேசன் சிவபாக்கியம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (24.02.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து இக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**பெரியதோட்டம்,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.** (69450) (14,18,20) **குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 . 04 . 1947
மறைவு 25 . 01 . 2016

**அமரர் செபஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன் (குணம்)**



அப்பா!
எங்கள் குடும்பத்தின் தலைமகனே!
எம்மை விட்டுப் பிரிந்து
முப்பத்தொரு நாள்கள் ஆகிவிட்டாலும்
உங்கள் அன்புருவான திருமுகமும்
அன்பான பேச்சும் அறிவுரைகளும்
இப் பூமிதனில்........
எம் உயிர் உள்ளவரை எம் இதயத்தில் இருக்கும்
விழிநீர் சொரிந்து கண்ணீருடன் ஊைங்கிய
நெஞ்சத்தோடு வாழ்கின்றோம்! அப்பா!

**69,5 ஆம் குறுக்கு,**
**உதயபுரம், மணியந்தோட்டம்.** **குடும்பத்தினர்.**

# தண்டனை வழங்கப்படாமையாலேயே வன்கொடுமைகள் தொடர்கின்றன

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் முழு அடைப்புக்கு ஒத்துழைக்குமாறும் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப். 24

முன்னர் சில மாணவிகள் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அத்தகைய சம்பவங்களுக்கு உரிய தண்டனை இன்னும் வழங்கப்படாததாலேயே சிறுமிகள் சூறையாடப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று இலங்கை ஆசிரிய சங்கம் சாடியுள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது-

தமிழ்ப் பாரம்பரியத்தின் பண்பாட்டு விழுமியங்களைத் தொலைத்த நிலையில் ஊசலாடி நிற்கும் தமிழ்க் கலாசாரத்தை மீட்டெடுக்கவேண்டிய தேவை பொலிஸ் துறையினதும், சட்டத் துறையினதும் கையிலேயே உள்ளது. காலம் பிந்திய நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமனாகும் என்னும் கோட்பாட்டுக்கிணங்க இதுவரை கொலை செய்யப்பட்ட சிறுமிகளுக்கு நீதி வழங்கப்படாமையே இன்று வவுனியா மாணவியின் நிலைக்குக் காரணமாய் அமைந்துவிட்டது. இது தொடருமாக இருந்தால் பெண்கள் நிம்மதியாக வாழமுடியாத நிலையேற்படுவதுடன், வன்கொடுமைப் பட்டியல் நீண்டு கொண்டு செல்வதற்கே வழிவகுக்கும். வித்தியா கொலைக்கு சிறப்பு நீதிமன்றம் அமைத்து நீதி வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருந்தும் ஒருவருடமாகியும் தண்டனை வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதானது அரசின் மீதும் நீதித் துறையின் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது.

இந்த நிலையில் அடுத்து இந்த வருடத்தில் வவுனியா மாணவி இரையாக்கப்பட்டுள்ளாள். இத்தகைய சம்பவங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள முழுஅடைப்புக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ற-4)

# நல்லிணக்கத்தைக் காலால் இழுக்கக்கூடாது மகிந்த

## கங்காராம விகாரையின் விகாராதிபதி அறிவுரை

கொழும்பு, பெப்.24

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அரசு பயணிக்கின்றது. அதனை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலால் இழுக்க முயற்சி செய்யக்கூடாது. - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சக்கு நேரில் அறிவுரை வழங்கியுள்ளார் கொழும்பு கங்காராம விகாரையின் விகாரா திபதி கலகொட ஞானீஸ்வர தேரர்.



கொழும்பு, கங்காராம விகாரையின் நவம் பெரஹரா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச, அமைச்சர்களான சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர். ஞானீஸ்வர தேரர் இங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் நன்மை கருதிப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோர் தமக்கிடையிலான அரசியல் மோதலை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் சரியாக உள்ளது. எனினும், பத்திரிகையாளர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் அச்சுறுத்துகின்றார் என்று அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

நாட்டை ஆள்பவர்களுக்கு எதனையும்செய்ய உரிமை இருக்கின்றது. எனினும், பிரதமர் நிதானத்தை இழந்துவிடக்கூடாது. சரியான நேரத்தில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை, பிக்குகளுக்கு எதிராக சில சமயங்களில் அரசு செயற்படுவதும் உண்டு. ஆனால், அவற்றை நாம் கண்டு கொள்வதில்லை.

தற்போதைய அரசு நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்கின்றது. அதனை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலால் இழுக்கமுயற்சிசெய்யக்கூடாது.- என்று கூறியுள்ளார். (ற)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்
திருமதி **கனகாம்பரி சிவனேஸ்வரநாதனின்**
(யா/ இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தாயார்
திருமதி **நாகேஸ்வரி பத்மநாதன்**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.
**இசை ஆசிரியர்கழகம்**
**யாழ் கல்வி வலயம்** (69630)(2,18,20)

# கிராம அலுவலர் பதவிக்கு இனி வயதெல்லை நாற்பது

கொழும்பு,பெப்.24

கிராம அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கு எதிர்காலத்தில் இடம்பெறும் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளுக்கான வயதெல்லை 40 ஆக உயர்த்தப்படவுள்ளது.

கிராம அலுவலர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் போது இது வரையிலும் நிலவிய 35 வயது என்ற வயதெல்லை 40 ஆக உயர்த்தப்படுமெனவும், நிலவும் பதவி வெற்றிங்கள் தொடர்பாக ஆள்களைச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்படவிருப்பதாகவும் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகும் சந்தர்ப்பத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் ஆயிரத்து 200 வரையில் இருக்கக்கூடுமெனவும் தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-22)

# கம்மன்பிலவின் சகா கைது



கொழும்பு, பெப்.24

பொது எதிரணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் கட்சியின் முக்கிய பிரமுகரான பிக்கு ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் பௌத்த சாசன விவகாரங்களுக்கான செயலாளரான பியகம சுசீல தேரர் என்பவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாணவிக்கு நீதி கோரி நேற்றுத் திரண்டது வடக்கு



யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள்......



வவுனியா சைவ பிரகாச ஆரம்ப பாடசாலை



வவுனியா சைவப் பிரகாச மகா வித்தியாலயம்



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி



கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள்



வவுனியா விபுலானந்தாக் கல்லூரி



முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி



வவுனியா பொது அமைப்புக்கள்



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி கொலையைக் கண்டித்து நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம்

வவுனியா, பெப்.24
வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவியின் சாவுக்கு நீதி வேண்டி வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களால் நேற்று மாபெரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வீதிகளை மறித்து ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

காலை காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக வவுனியாவில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பஸ்களில் குறித்த இடத்துக்கு வந்திருந்தனர்.

அவர்களுடன் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், ஓட்டோச் சங்க உரிமையாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்திருந்தனர். அவர்கள் பேரணியாக வவுனியா மாவட்டச் செயலகம் நோக்கிச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வவுனியாமாவட்டச்செயலகத்தின் முன்பாக ஒன்றுகூடி மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்ட மக்கள், மாவட்ட செயலகத்தின் முன், வீதியில் அமர்ந்து வவுனியா சிறுமியின் சாவுக்கு நீதி வேண்டிக் கோசங்களை எழுப்பினர்.இதனால் போக்குவரத்துச் சிறிது நேரம் தடைப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் போது மாணவியின் சாவுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்று கோரும் மனு ஒன்றும் பொது அமைப்புக்களால் மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. குறித்த மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தன.

ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு வவுனியாவைச் சேர்ந்த ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்தது.

(ஐ-21,402)

> “வவனியாவைச் சேர்ந்த 13 வயது மாணவி வீட்டில் தனித்திருந்த போது இனந்தெரியாதோரால் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.”

## பெண்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்து கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,பெப்.24
'பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம்' என்ற தொனிப்பொருளுடன் வவுனியா மாணவியின் சாவுக்கு நீதி வேண்டி கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் கிளிநொச்சி பொதுச் சந்தை முன்பாக ஆரம்பமாகி ஏ-9 வழியூடாக பேரணியாகச் சென்று மாவட்டச் செயலகத்தை அடைந்தது.

புங்குடுதீவு மாணவியின் கொலையைத் தொடர்ந்து இலங்கையில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக இவ்வாறான பாலியல் ரீதியிலான கொல்லைகள் இடம் பெறக் கூடாது எனத் தெரிவித்த அரசு, தற்போது வவுனியா மாணவியின் கொலைக்கு என்ன பதில் கூறப் போகிறது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர்.



இவ்வாறான கொலை வன்புணர்வுகளுக்கு போதைப் பொருள் பாவனையும், ஆபாச இணையத் தளங்களும் பிரதான காரணங்களாக மாறியுள்ளன என்றும், ஆனால் இவற்றைக் கட்டுப் படுத்தும் அரசின் செயற்பாடு திருப்திகரமாக இல்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் இன்று பாலியல் வன்புணர்வுகளும், அதன் பின்னர் படுகொலையும் அதிகரித்த வண்ணம் உள்ளன என்றும், குறிப்பாக வடக்கு மாணவிகளின் பாலியல் வன்முறையின் பின்னரான கொலைகள், அதே போல் சம்பூர் 6 வயது சிறுவன், அத்துக்கிரிய 10 வயது சிறுவனின் படுகொலைகள், அன்னம்பிட்டி சிறுமியின் வன்புணர்வு என்று அதிகரித்துச் செல்கின்றன என்றும், இவை உடனடியாக நிறுத்தப்பட வேண் டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

'கண்மணியைக் கொன்ற கயவனே உன்னைக் கல்லெறிந்து கொல்வோம்', 'சிறுவர் துஷ்பிரயோகத்தை எதிர்ப்போம்', 'பள்ளிச் சிறுமியை பலியெடுத்தவனே உன் தலையில் இடி விழும்', 'பாலியல் வன்புணர்வுகொலைக் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டணையை நடைமுறைப்படுத்து', 'இருக்க வேண்டியவர்கள் இருந்திருந்தால் இது எல்லாம் நடக்குமா', 'வேண்டும் வேண் டும் பாடசாலை மாணவிகளுக்கு பாதுகாப்பு வேண்டும்', போன்ற வாசகங்களுடன் கூடிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டம்மேற்கொண்டவர்கள் பேரணியாக மாவட்டச் செயலகம் சென்று மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் ஜனாதிபதிக்கான மனுவைக் கையளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி பொது சந்தை வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-21,ரி3)

## தயவு தாட்சணியம் காட்டாது குற்றவாளிகளைத் தண்டிக்குக

### ஜனாதிபதிக்கான மனுவில் பொது அமைப்புக்கள் வலியுறுத்து

வவுனியா, பெப்.24
பண்பாட்டு கலாசார விழுமியங்களைச் சிறப்பாகக் கொண்டுள்ள எமது சமூகத்தில் காமு கர்கள் எள்ளளவும் மனிதபிமான மின்றி இவ்வாறு கட்டுக் கடங்காது மிலேச்சதனமாகச் செயற்பட்டு வருவதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதனால் சட்டம் ஒழுங்கு, சமூகத்தின் பாதுகாப்பு என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸார் மீது நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி நாட்டை நிர்வகிக்கும் நல்லாட்சி அரசிலும் ஐயப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

- இவ்வாறு வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புக்களால் வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட ஜனாதிபதிக்கான மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
இலங்கை மீது நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நிழற் போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு நாட்டில் நல்லாட்சி நிலவுவதாகக் கூறப்பட்டாலும், வடக்கில் பெண்களின் பாதுகாப்பு நாளுக்கு நாள் மோசமடைந்து செல்கின்றது.

குறிப்பாக பாடசாலை மாணவிகள் மிலேச்சத்தனமான முறையில் காமுகர்களால் கொலை செய்யப்படும் நிலையில், அதற்குரிய குற்றவாளிகளுக்கு தண்டனைகள் வழங்கப்படாத நிலைமை காணப் படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தி, புங்குடுதீவில் வித்தியா, கனகராயன்குளத்தில் சரண்யா, நெடுங்கேணியில் ஒரு சிறுமி தென்னிலங்கையில் சோயா, தற்போது வவுனியாச் சிறுமி எனத்தொடர்ந்து கொண்டிருக்கிறது; நாளை யாருக்கு இந்த அவலம் நிகழுமோ என்ற அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

அப்பாவிகளான பாடசாலை மாணவிகள் மீது பாலியல் குற்றம் புரிவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். மாணவிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பில் சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பானவர்கள் உடனடியாகச் செயற்பட்டுக் குற்றவாளிகளை உடனடியாகக் கண்டுபிடிக்கவேண்டும்.

பக்கச்சார்பின்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு எவ்வித தாமதமுமின்றிக் கடுமையான முறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் தாங்கள் கூடிய கவனம் செலுத்தி உரிய அதிகாரிகளுக்கு முறையான பணிப்புரைகளை விடுத்து, சட்டத்தை நடைமுறைப்படுத்தி அப்பாவி மாணவிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும். அதே நேரம் வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் எந்தப் பகுதியிலும் இவ்வாறான அசம்பாவிதங்கள் மீண்டும் நிகழாதிருப்பதைப் பொறுப்புள்ள அரசு என்ற வகையில் உறுதிப் படுத்துவதும் அவசியமாகின்றது.- என்றுள்ளது. (ற-ஐ-21,402)

## முல்லை. மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, பெப்.24
வவுனியா பாடசாலை மாணவியின் கொலைக்கு நீதி வேண்டி நேற்று முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். “நீதி நியாயங்களை இழந்து விட்டோம். ஆதலால் மலரும் மொட்டுக்களை இழக்கின்றோம்” எனத் தெரிவித்த மாணவர்கள், குற்றவாளிகள் உடன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்களால் குறித்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டு பாடசாலையின் முன்பாக இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பாடசாலை மாணவர்கள் “சிதைக்காதே, சிதைக்காதே எதிர்காலச் சிறுவர்களைச் சிதைக்காதே” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-ஐ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் பயிற்சிப் பட்டறையில் சர்வதேச இரவு கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.24
தேசிய சாரணர் பயிற்சிப் பட்டறையின், சர்வதேச இரவு நிகழ்வுகள் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த ஆண், பெண் சாரணர்களின் கலை நிகழ்வுகளுடனும், கண்கவர் காட்சிகளுடனும் கடற்படையினரின் ஒருங்கமைப்பில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றன.



ஒன்பதாவது தேசிய ஜம்போறி நிகழ்வுகள் முதல் முறையாக வடக்கு மாகாணத்தில் நடத்தப்படுகின்றது. இலங்கையின் 36 சாரணர் மாவட்டங்களைச் சேர்ந்த எட்டாயிரத்துக்கும் அதிகமான சாரணர்களும், பதினொரு வெளிநாடுகளைச் சேர்ந்த சாரணர் தலைமை அதிகாரிகள் மற்றும் 150க்கும் மேற்பட்ட சாரணர்களும் இதில் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வுகள், யாழ். மாநகரசபை மைதானம், கோட்டை மற்றும் கோட்டையைச் சூழவுள்ள பகுதி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 26ஆம் திகதி நிறைவடைய உள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையின் சிறப்பு நிகழ்வாக இரவு நேர கலை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதன் ஒருகட்டமாக நேற்று முன்தினம் இரவு வெளிநாட்டுச் சாரணர்களின் சர்வதேச இரவு கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

இரவு 8 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆயிரத்துக்கும் அதிகமான சாரணர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். ஆடல் பாடல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இலங்கைக் கடற்படையால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் கடற்படையினரின் இசைக் குழுவால் சிங்களப்பாடல்கள் இசைக்கப்பட்டதுடன், சிங்கள பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையிலான நடனங்களும் கடற்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.



தொடர்ந்து இந்தியா, பங்களாதேசம், மாலைதீவு, பாகிஸ்தான், ஓமான், மலேசியா, ஜப்பான் உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த சாரணர்கள் தத்தமது நாடுகளின் கலாசாரத்தை பறைசாற்றும் பாரம்பரிய நடனங்களை மேற்கொண்டனர். இவற்றில் இந்தியாவைச் சேர்ந்த ஆண், பெண் சாரணர்களின் கலை நிகழ்வுகள் அனைவரையும் வெகுவாக கவர்ந்ததுடன், கடற்படை பெண்கள் பிரிவினரால் வழங்கப்பட்ட வரவேற்புநடனமும் பெரும் வரவேற்பைப் பெற்றது.



சாரணியம் சார்ந்த நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், மாவட்டரீதியாக ஒன்று கூடிய சாரணர்களால் தனித்தனியாக தாம் பிரதிநிதித்துவப் படுத்திய நாடுகளின் கலாசார நடனங்கள் முன்வைக்கப்பட்டன.

முன்னதாக இலங்கையின் சாரணர் மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சாரணர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இவற்றில் கரகாட்டம், பொம்மல் ஆட்டம், அம்மன் நடனம், கோலாட்டம் என்பன தமிழ் சாரணர்களால் நிகழ்த்தப்பட்டன. இது போன்று சிங்கள சாரணர்களும் தம்முடைய மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தும் கலை நிகழ்வுகளை முன்வைத்தனர்.

கலை நிகழ்வில் வெளிநாடுகளைச் சேர்ந்த சார ணியத் தலைவர்கள் மற்றும் சாரணர்கள், இலங்கைச் சாரணிய சங்கத்தின் மூத்த பிரதிநிதிகள், சாரணிய மாவட்டப் பிரதிநிதிகள், சாரணர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ந-ஜ-ரி5)









# திடீரென முளைக்கும் விகாரைகளை தடுப்பதற்குச் சட்டங்கள் வேண்டும்

## திருமலை மாவட்ட பொது அமைப்புக்கள் தெரிவிப்பு

கொழும்பு,பெப். 24
பெரும்பான்மையின மக்கள் அவர்களுடன் தொடர்புபடாத இடங்களில் விகாரைகள் அமைப்பதைத் தடுக்கும் வகையில், கடுமையான சட்டம் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட பொது அமைப்புக்களின் சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரச்மைப்பு உருவாக்குவதற்கான பொது மக்கள் கருத்தறியும் அமர்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது. அதன் ஒரு கட்டமாக திருகோணமலை மாவட்டத்துக்கான அமர்வு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்து வழங்கிய மக்களால், வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு தொடர்பாகவும், மனித உரிமைகள் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக நீதி வழங்க பிராந்திய நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

பெரும்பான்மை இனமாக வாழும் பௌத்த-சிங்கள மக்கள் தம்முடன் சம்பந்தமில்லாத இடங்களில் விகாரைகள் அமைப்பதைத் தடுப்பதற்கான கடும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக வெளிப்படைத் தன்மை பேணப்படுமாறு இருக்க வேண்டும். ஓர் இனத்துக்குக் குறிப்பிட்ட நன்மையைப் பெற தீமையை ஏற்படுத்தாமல் இருக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

(ந-ஜ-5-40)

# சட்டவிரோத மின்சாரம்; இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.24
சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்ட உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு அபராதமும், இழப்பீடும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த இருவரையும் கோப்பாய் பொலிஸார் கைதுசெய்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இலங்கை மின்சார சபையுடன் பொலிஸார் இணைந்து நடத்திய சோதனையின்போதே இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் இருவரும் நீதிமன்றில் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, ஒவ்வொருவரையும் 10 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறும், இலங்கை மின்சார சபைக்கு இழப்பீடாக முறையே ரூபா 48 ஆயிரத்தையும், ரூபா 68 ஆயிரத்தையும் செலுத்துமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ந-ஜ-103)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்குத் தேவை தனியான ஒரு மாகாணம்

## வலியுறுத்துகின்றனர் முஸ்லிம் தலைவர்கள்

கொழும்பு,பெப்.24

முஸ்லிம்களுக்குத் தனியான மாகாணம் உருவாக்கப்பட வேண்டும். எமது இந்தக் கொள்கையில் மாற்றமில்லை. அதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பம் முதல் இன்று வரை செயற்பட்டு வருகின்றது. - இவ்வாறு அந்தக் கட்சியின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பசீர் சேகுதாவூத்தும் இவ்வாறான கருத்தை முன்வைத்துள்ளார்.

புதிய அரசமைப்பு மூலம் முஸ்லிம்களுக்கான தனி நிர்வாக அலகு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஹசன் அலி -

நாட்டில் தற்போதுள்ள ஒன்பதுமாகாணங்களில் ஒருமாகாணம் தமிழ் மாகாணமாகவும், ஏனையவைசிங்களமாகாணங்களாகவும் காணப்படுகின்றன.

புதிய அரசமைப்புத் தொடர்பிலான பரிந்துரைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் நீண்ட காலக் கோரிக்கையான தனி மாகாணக் கோரிக்கை யும் முன்வைக்கப்படும்.

நாட்டில் எமக்கான அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்காக தனியான மாகாணமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு.

தனியான மாகாணம் ஒன்றை உருவாக்குவதற்கு காணப்படும் மக்கள் சனத்தொகை மற்றும் புவியியல் அமைவுகளை கருத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

> நாட்டில் தற்போதுள்ள ஒன்பது மாகாணங்களில் ஒரு மாகாணம் தமிழ் மாகாணமாகவும், ஏனையவை சிங்கள மாகாணங்களாகவும் காணப்படுகிறன. புதிய அரசமைப்பு தொடர்பிலான பரிந்துரைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் நீண்டகாலக் கோரிக்கையான தனி மாகாணக் கோரிக்கையும் முன்வைக்கப்படும்.

புவியியல் சார் விடயத்தை கவனத்தில் கொண்டும், மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவும் இந்தியாவின் தனியான மாநிலமாக பாண்டிச்சேரி உருவாக்கப்பட்டது. எனவே எமது பரிந்துரைகளை உள் வாங்குவதற்கு அரசுக்கு உலகில் பல்வேறு முன்மாதிரிகள் காணப்படுகின்றன-என்றுகூறியுள்ளார்.

அதேவேளை இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பசீர் சேகுதாவூத் -

முஸ்லிம்களுக்கான தனியலகு பற்றிப் பேசாமல் அரசியல் தீர்வுத் திட்டப் பேச்சை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்ற அடிப்படையிலேயே இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இந்த அரசியல் கோரிக்கையை கட்சியின் அரசியல் அதியுயர் பீடத்துக்கு கொண்டு செல்வதற்கான முன்னோடி நடவடிக்கையாகவேதான் இப்போது இதனை முன்வைத்துள்ளேன். இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணமாக, நிலத்தொடர்பற்ற விதத்தில் முஸ்லிம்களின் தனியலகு அமைய வேண்டும் என்ற எங்களின் அரசியல் கோரிக்கையை மறக்கடிக்கச் செய்வது சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்ற நோக்கத்தைச் சிதைத்துவிடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு தொடர்ச்சியாக தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான கோரிக்கையை முன்னெடுத்துச் செல்கிறதோ அதேபோல நாங்களும் இந்தக் கோரிக் கையை வெளிப் படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ)

---

## கிராம அதிகாரிகளுக்கு சமாதான நீதிவான் பதவி

கொழும்பு, பெப்.24

நிரந்தர நியமனம் பெற்றுள்ள கிராம சேவை அதிகாரிகளுக்கு, சமாதான நீதிவான் பதவி வழங்குவதற்கு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராம சேவை அதிகாரியொருவர் பணியாற்றும் பகுதியில் உள்ள பிரதேச செயலக வலயத்துக்கு உட்பட்ட பகுதிக்கு உத்தியோகபூர்வ சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று நீதியமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளதுடன், அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் இருந்து அந்தப் பதவி செல்லுபடியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ)

---

# மாகாண அரசின் அனுமதியின்றி அதிகாரிகளுக்கு அழைப்பு

## கொழும்பு அரசு மீது முதலமைச்சர்கள் சீற்றம் அதிகாரிகளை அனுப்புவதில்லை எனத் தீர்மானம்

கொழும்பு, பெப்.24

மாகாண சபைகளின் அனுமதியின்றி மத்திய அரசின் சில அமைச்சுகள், மாகாண சபை அதிகாரிகளைக் கலந்துரையாடல் ஒன்றுக்காக நீர் கொழும்புக்கு அழைத்துள்ளன. அதனை வன்மையாகக் கண்டித்துள்ள மாகாண முதலமைச்சர்கள், அந்தக் கலந்துரையாடலுக்கு தங்களது அதிகாரிகளை அனுப்ப முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் கீழ் வரும் ஒருசில அமைச்சுகள், மாகாண சபையின் முன் அனுமதியைக் கோராமலேயே தங்கள் விருப்புக்கமைய சந்திப்புக்களையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்வதால் மாகாண சபையின் அன்றாடப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்று முதலமைச்சர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நாளை மறுதினம் நீர்கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு வருகை தருமாறு மாகாண சபைச் செயலாளர்கள், மாகாண அமைச்சின் ஆணையாளர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும், அந்தக் கூட்டத்துக்கு அனுப்புவதில்லை என முதலமைச்சர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தாங்கள் விரைவில் சந்தித்து விளக்கமளிக்கவுள்ளோம் என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (ற-ஐ)

---

## நாடு முழுவதும் 19 இரத்த தான நிலையங்கள்

கொழும்பு, பெப்.24

நாடு முழுவதும் புதிதாக 19 இரத்த தான நிலையங்கள் நிறுவப்பட உள்ளன என்று சுகாதர அமைச்சு தெரிவித் துள்ளது.

அதில் 13 நிலையங்களை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பு வடக்கு, குருணாகலை, பேராதனை ஆகிய போதனா வைத்தியசாலைகள், மாரவில, குளியாப்பிட்டிய, தங்காலை, பதவியா, தெஹியத்தகண்டி, கல்முனை ஆகிய ஆதார வைத்தியசாலைகள் மற்றும் மாவட்ட வைத்தியசாலைகள் சிலவற்றி லும் இந்த இரத்த தான நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (ற).

---

## சுங்க இறக்குமதி பிரிவு அதிகாரிகள் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, பெப்.24

இலங்கை சுங்கத் தலைமையகத்தின் இறக்குமதிப் பிரிவு அதிகாரிகள், தமது அலுவலக கடமைகளில் இருந்து விலகி பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய விசாரணைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட் டுள்ளது என்றும், இந்தப் புதிய பிரிவை தமது கடமைகளைக் கண்காணிப்புச் செய்யும் தரத்துக்கு அமைப்பதாயின், அது தொடர்பாக தமது சங்கத்துக்கு அறிவித்திருக்க வேண்டும் என்றும் சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிஷாந்த உடுவல தெரிவித்தார். (ற)

---

# ஐ.தே.கவுடன் இணைந்து செல்வது சாத்தியமில்லை

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, பெப்.24

பண்டாரநாயக்கவின் கொள்கைகளைப் பின்பற்றும் என்னால் ஒரு போதும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாது என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

அம்பாந்தோட்டை வீரவிலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கட்சி, கொள்கை என்ற அடிப்படையில் நாம் செயற்பட்டு வருகின்றோம். பண்டாரநாயக்கவின் கொள்கைகளைப் பின்பற்றிப் பாதுகாத்து வருபவன் நான். என்னால் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாது. - என்று மகிந்த அங்கு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அன்று நாம் துறைமுகத்தை நிர்மாணிக்கும்போது நீர்த் தடாகத்தை நிர்மாணிப்பதாகக் கிண்டல் செய்தார்கள். விமான நிலையம் உட்பட எமது அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் குரோதத்துடனேயே அவர்கள் நோக்கினர்.

எதிரிகள் குரோதம் கொள்ள வேண்டியது என்னுடனேயே. அந்த விடுத்து அபிவிருத்தித் திட்டங்களுடனும், நாட்டுடனும், எனது பிள்ளைகளுடனும் அவர்கள் குரோதம் கொள்கின்றனர். அரசியலுக்காக, நல்ல திட்டங்களைக் கைவிட முனையக்கூடாது. என்னோடு உள்ள குரோதத்துக்காக நாட்டின் அபிவிருத்தியைக் கைவிட்டு விட முடியாது. இவ்வாறு செய்வதினூடாக நாட்டின் அபிவிருத்தியே பாதிக்கப்படும்.

என்னைப் பழிவாங்குவதற்காக நான் செய்த அபிவிருத்தித் திட்டங்களைத் தாமதப்படுத்தி மீண்டும் ஒரு வருட காலத்தின் பின்பு அவர்கள் திறந்து வைக்கிறார்கள். அதனூடாக இவற்றை அவர்களின் திட்டங்களாக காட்ட முற்பட்டாலும் மக்கள் உண்மையை அறிவார்கள்.

இவை அனைத்தையும் நாம் மக்களுக்காகவே மேற்கொண்டோம். பட்டதாரிகள் தொழில் கேட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் போது அவர்களைத் தாக்குகிறார்கள். கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

பௌத்த மதகுருமார் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இராணுவ வீரர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். ஆனால்விடுதலைப் புலிகளை விடுதலை செய்கிறார்கள். இதுதான் இன்றைய நல்லாட்சி - என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும்

## ரன்முதுகல சங்கரத்ன தேரர் வலியுறுத்து

அம்பாறை, பெப்.24

சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டாலும், அது தமிழ் மக்களின் மனதிலுள்ள காயங்களை ஆற்றுப்படுத்தவில்லை. வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு சரியான அதிகாரங்களே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். - இவ்வாறு அம்பாறை மாவட்ட சர்வமத அமைப்பின் உபதலைவர் ரன்முதுகல சங்கரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படும் புதிய அரசமைப்பு மூலமாவது சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்களதலைமைகள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதையிட்டு பௌத்த மதத் தலைவன் என்ற வகையில் கவலையடைகின்றேன்- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம், தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் கல்முனை நகர அபிவிருத்தித் திட்டம் ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அவசரக் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த காலங்களில் தமிழ் பேசும் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின் விளைவை இந்த நாடு சந்தித்து விட்டது. அவ்வாறான கசப்பான சம்பவங்கள் இனியும் தொடர அனுமதிக்க முடியாது.

இந்தப் புதிய அரசு தமிழ் மக்களின் இன்னல்களுக்கு விரைவில் தீர்வு காண முன்வர வேண்டும். மக்களுக்குரிய அதிகாரங்களை நாட்டின் இறைமைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் வழங்க வேண்டும்.

> கடந்த காலங்களில் தமிழ் பேசும் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின் விளைவை இந்த நாடு சந்தித்து விட்டது. அவ்வாறான கசப்பான சம்பவங்கள் இனியும் தொடர அனுமதிக்க முடியாது.

இங்கு வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அது போன்று சிங்கள மக்களுக்கு தமிழ்மொழியைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பதற்கு மொழிப் பிரச்சினையும் ஒரு காரணமாகும். அரசு முதலில் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ச அரசிலும் சரி இன்றுள்ள நல்லாட்சி யிலும் சரி கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகள் போதியளவு முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்கள் அபிவிருத்தியின் பயனை அனுபவிக்க முடியாதுள்ளனர். அதிலும் தமிழ், சிங்களப் பகுதிகளில் வாழும் மக்களே அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளனர்.

வருகின்ற அரசுகள் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களின் அபிவிருத்திகளிலே கூடிய கவனமெடுக்கின்றன. அம்பாறை மாவட்டத்தின் தமிழ், சிங்களக் கிராமங்களின் அபிவிருத்தி பற்றி எவரும் சிந்திப்பதில்லை.

தற்போது கல்முனை நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் பேசப்படுகின்றது. கல்முனை என்பது மூவின மக்களும் செறிந்து வாழும் பிரதேசமாகும். இங்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்றபோது இங்குள்ள மதத்தலைவர்களின் ஆலோசனைகள் இன்றி எதனையும் தீர்மானிக்க முடியாது.

கல்முனையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவை முதலில் தீர்க்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (ற-ஐ)

# ஆசிய வங்கியுடன் இலங்கை பல ஒப்பந்தங்கள் கைச்சாத்து

கொழும்பு,பெப்.24

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கைக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை இலங்கைக்கு மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர் குறித்த பயணத்தின்போது இலங்கை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இடையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பல்வேறு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவுள்ளார் என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டகேஹிதோ நகாவோ ஆகியோர் இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளனர்.

அதேவேளை மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீயும் இலங்கைக்கு வந்துள்ளார்.

நியூஸிலாந்து பிரதமரின் இலங்கைப் பயணத்தின்போது ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் பலரை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ)

# நிவாரணங்களில் பாரபட்சம் என்று தொழிற் சங்கங்கள் மனுத் தாக்கல்

கொழும்பு,பெப்.24

வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட சில நிவாரணங்கள் குறிப்பிட்ட சில சாராருக்கு வழங்கப்படவில்லை. அது அவர்களின் அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும் என்று தெரிவித்து எட்டுத் தொழிற் சங்கங்கள் கூட்டாக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளன.

வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட சில நிவாரணங்களும், சலுகைகளும் தனியார்துறை ஊழியர்களுக்கும், வீட்டுப் பணிப் பெண்களுக்கும் வழங்கப்படவில்லை. அவற்றை உடனடியாக வழங்குமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என அந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திர சேவையாளர் சங்கம், சுதந்திர வர்த்தக வலய ஊழியர் சங்கம், உள்நாட்டு நிறுவன ஊழியர்கள் சங்கம், இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் நெஷனல் யூனியன் ஒவ் சீபெயார்ஸ் ஆகிய எட்டுத் தொழிற்சங்கங்களுமே இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (ற-ஐ)

# புலம்பெயர் தமிழரின் திருப்திக்கே கைதுகள்

## விமல் வீரவன்ச கண்டுபிடிப்பு

கொழும்பு,பெப்.24

புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தி நாட்டை இரண்டாகப் பிளவுப்படுத்தும் முயற்சியின் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக, இராணுவத்தினர் உட்பட புலனாய்வாளர்களின் கைது நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடளுமன்ற உறுப்பினர் விமல் விரவன்ச.

நாட்டைப் பிளவுபடுத்துவதன் மூலம் ஈழப் போரட்டத்துக்கு துணை நின்று செயற்படும் இந்த அரசை, நாட்டை நேசிக்கும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து வெகுவிரைவில் வீட்டுக்கு அனுப்புவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

'தாய் பூமியின் இறுதி நேரம்' என்ற தொனிப்பொருளில் தேசிய சுதந்திர முன்னணியால் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துவரப்படும் மக்கள் சந்திப்பின் இரண்டாவதுகட்ட நிகழ்வு, நேற்றுமுன்தினம் பாணந்துறையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு விசேட உரையொன்றை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ)

# வட மாகாணத்தின் பட்டதாரிகள் மலையகத்துக்குத் தேவையில்லை

## மத்திய மாகாண கல்வி அமைச்சின் மேற்பார்வை உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.24

மலையகத்தில் போதுமான அளவு பட்டதாரிகள் வேலையற்றுள்ளனர். அவர்களுக்கு ஆசிரியர் நியமனத்தை வழங்கி ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே பொருத்தமானதாக இருக்கும். வடக்கில் இருந்து ஆசிரியர்களை நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. - இவ்வாறு மத்திய மாகாண கல்வி அமைச்சின் மேற்பார்வை உறுப்பினரான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கு வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் பெரும் பங்காற்றினர். அந்தக் காலத்தில் ஆசிரியர் தொழிலைப் பெற்றுக் கொள்ளும் தகுதியைக் கொண்டவர்களாக மலையகத்தில் மிக மிக சொற்ப தொகையினரே இருந்தனர்.

ஆனால் தற்போது நிலமை அவ்வாறில்லை. பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான ஆசிரியர் தேவையை நிவர்த்தி செய்யத் தேவையான பட்டதாரிகள் மலையகத்திலேயே உள்ளனர். - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அவர்களுக்கு ஆசிரியர் நியமனத்தை வழங்காமல் வடக்கிலிருந்து ஆசிரியர்களை நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மலையகத்தில் பட்டதாரிகள் இல்லை என்ற மாயையைச் சிலர் பரப்பி வருகின்றனர். அதில் எவ்விதமான உண்மையும் கிடையாது. நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் மாகாண சபைக்கு வந்த போதும், கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு ஆர்வம் காட்டாமல் எதற்காக வடக்கிலிருந்து ஆசிரியர்களைக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

> மலையகத்தில் படித்தவர்களுக்கு அதிகளவில் கிடைக்கின்ற ஒரே தொழில் ஆசிரியர் தொழில் மட்டுமே. ஏற்கனவே இலங்கைத் தொழிலாளார் காங்கிரசினால் கோரப்பட்ட மூவாயிரம் உதவி ஆசிரியர் நியமனங்கள் இதுவரை முற்றாக வழங்கப்படவில்லை.

மலையகத்தில் படித்தவர்களுக்கு அதிகளவில் கிடைக்கின்ற ஒரே தொழில் ஆசிரியர் தொழில் மட்டுமே. ஏற்கனவே இலங்கைத் தொழிலாளார் காங்கிரசினால் கோரப்பட்ட மூவாயிரம் உதவி ஆசிரியர் நியமனங்கள் இதுவரை முற்றாக வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கு கல்வி ராஜாங்க அமைச்சர் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இது வரை பயிற்சி வழங்கு வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் தொடங்கவில்லை. ஆறாயிரம் ரூபா சம்பளத்தை அதிகரித்துக் கொடுக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. இதனால் பலர் தொழிலை விட்டு வெளியேறி வருகின்றனர்.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட காலத்திருந்து வரலாற்றில் இப்போதுதான் மலையக கல்வித் துறையில் பெரிய அரசியல் தலையீடுகள் நடைபெறுகின்றன.

ஆசிரியர் நியமனங்களை முறையாக மாகாண சபைகள் தான் வழங்க வேண்டும். அதற்கான நிதியைத் தான் மத்திய அரசு வழங்க வேண்டும். - என்று குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ)

# 40 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப்.24

அநுராதபுரம் - இக்கிரியா கொல்ல பகுதியில் இருந்து கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

40 கிலோ கிராம் எடையைக் கொண்ட சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. சந்தேகநபருடன் அதிசொகுசு வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் அநுராதபுரம் - யாழ்ப்பாணம் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் இவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள் கொழும்பு - நாரஹேன்பிட்டியிலுள்ள சுங்கத் திணைக்கள அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டன என்று கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசின் மேலோங்கித்தனம் மெல்லமெல்ல வெளிப்பாடு

தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கிய பின்னர் கலப்புத் திருமணங்களை நடத்துங்கள்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மேற்போந்த காத்திரமான கருத்தை முன்வைத்தார்.

அந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் புதிய ஆளுநரும், ஜனாதிபதியும் பிரசன்னமாகி இருந்தனர் என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

நாட்டில் கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டும் என்று, ஆளுநர் தெரிவித்திருந்த கருத்தை ஒட்டியே, முதலமைச்சரின் உபநிலை வெளிப்பாடு மேடையில் பிரதிபலித்தது எனலாம்.

அந்தக் கருத்தை உள்ளூர்ந்து பார்த்தால், அது தர்க்க ரீதியானது மட்டுமன்றி வரவேற்கத்தக்கதும் போலத் தோன்றும்.

அதேவேளை--

குறிப்பாக இறுதிப் போர் வேளையில், தமிழர் பிரதேசங்களில், தமிழ் மக்கள் வகைதொகை இன்றி அரச இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள்.

அவை முழுக்க முழுக்க இனச்சுத்திகரிப்பே. வேறு எந்த வகைக்குள்ளும் உள்ளடக்கப்பட முடியாதவை, இயலாதவை!

அது மட்டுமன்றி, தமிழர் பிரதேசங்களில் படையினரால், எங்கள் மகளிர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். அந்தக் கொடுமையும் மனித உரிமை மீறலுக்குள் அடக்கப்பட வேண்டியதே.

அந்தக் கொடிய வரலாறு, உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனத்தின் மீது நடத்தப்பட்ட இனச் சுத்திகரிப்பின் ஓர் அங்கம் எனக் கொள்ளத்தக்கது!

உரிமை மறுக்கப்பட்ட இனம் ஒன்றின்மீது, வன்முறை சார்ந்த வன்புணர்வும், கர்ப்பங்களும் இனச் சுத்திகரிப்பின் பிறழ்வு நிலைக்குள் அடக்கப்படுபவையே.

மொத்தத்தில், கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், கொழும்பு அரசுகளின் அதிகார வர்க்கத்தினர்--

அவர்களில் எவர் மாறி, மறுநிலையாளி வந்தாலும், அதிகாரம் செலுத்தினாலும், தமிழ் இனத்தவரை, அவர்தம் அடையாளத்தை அழித்துவிடும், அவர்களது பாரம்பரிய கலாசாரக் கட்டுக்கோப்புகளை மலினப்படுத்தும், அதனூடு பாதகமான மனித உரிமைகளைக் கடாசிவிடும் வன்மமே-போக்கே-உருத்துப் பருத்து மேலெழும் என்பது, அவ்வப்போது, உயர்த்தப்படுகிறது!

இது தமிழ் இனத்தின் அடையாளத்தை முற்றுமுழுதாக அழித்துவிடும் தன்மையே; இயல்பே. தம்மைத் தட்டிக் கேட்க எவருமிலர் என்ற மேலோங்கித்தனமே பெருக்கெடுக்கிறது.

# மயிலிட்டிக் காணி விடுவிப்பு தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை

## பிரதமர் வாக்கை மீறினாரா?

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்

வடக்கில் இப்போது அமைதி நிலவுவதுடன், துரிதகதியில் அபிவிருத்திகள் காணப்பட்டாலும், பாரதூரமான பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. இவைகளில் பெரும்பாலானவை ஜெனிவாத் தீர்மானம் தொடர்பானவையாகும். குறிப்பாக, இந்தத் தீர்மானம் காரணமாக தாங்கள் போர்க்குற்றம் தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள் என்ற பீதி பாதுகாப்புப் படைகள் தரப்பில் பலமாகத் தலைதூக்கி யுள்ளது. கட்டளைகளை ஏற்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் புரிந்து வெற்றியைத் தேடித் தந்த அதிகாரிகள், இப்போது கவலைக்குள்ளாகியுள்ளனர். அதுவும் வடக்கில் பாதுகாப்புப் படையினரின் பிடியில் இருக்கும் காணிகளை விடுவிக்கும்படி வடக்கிலுள்ள அரசியல்வாதிகள், அரசு தரப்பில் உள்ளவர்களும்கூட வற்புறுத்தல்களை மேற்கொண்டு வரும் நிலையில் ஆகும்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக இணையத்தளம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர வடக்குக்கு வந்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கின் பாதுகாப்புத்துறை கட்டளைத் தளபதிகள் மற்றும் கட்டளைப் பிரிவுகளின் தலைவர்களின் கூட்டமொன்றில் உரை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. பாதுகாப்புப் படையினரின் நலன்களை அரசு பாதுகாக்கும் என்பதை அவர்களுக்கு அமைச்சர் விளங்கப்படுத்தினார். கோப்பாயில் அமைந்துள்ள 51 ஆவது இராணுவப் பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரியும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்துள்ளவருமான மேஜர் ஜெனரல் சகிகலகே இந்த நிகழ்வில் கருத்து வெளியிடுகையில், ஜெனிவாத் தீர்மானத்தின் சரத்துக்களை செயற்படுத்துவதற்காக அரசு நியமித்துள்ள செயலணியில் இராணுவப் பிரதிநிதி ஒருவரும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று யோசனை முன்வைத்துள்ளார். அவ்வாறு செய்ய இயலாது என்று அமைச்சர் அந்த யோசனைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். இதையடுத்து கடும்சொல் பரிமாற்றங்கள் இடம்பெற்றதாகத் தெரிகின்றது. சில நாள்களின் பின்னர் மேஜர் ஜெனரல் சகிகலகே இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த விடயம் தொடர்பாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்தவும் இல்லை; மறுதலிக்கவும் இல்லை.

> இராணுவத்தின் எந்த ஓர் உறுப்பினர்மீதும் ஜெனிவா தீர்மானத்தில் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் கட்டளை சங்கிலித் தொடர் மற்றும் கட்டளைப் பொறுப்பு ஆகிய மிக முக்கிய பிரிவுகளில் தாங்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் தோன்றி உள்ளது.

இராணுவத்தின் எந்த ஓர் உறுப்பினர் மீதும் ஜெனிவா தீர்மானத்தில் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், கட்டளை சங்கிலித் தொடர் மற்றும் கட்டளைப் பொறுப்பு ஆகிய மிக முக்கிய பிரிவுகளில் தாங்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் தோன்றி உள்ளது. கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த மனித உரிமைகள் ஆணையாளர் ை சயித் அல் ஹுசேன் விடுத்திருந்த அதிகார பூர்வ அறிக்கையில் பொறுப்புக் கூறும் பொறிமுறையானது தனி மனிதர்களின் சர்வதேசக் குற்றங்கள் மற்றும் முழுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும். இது பற்றி ராஜதந்திர வட்டாரம் ஒன்று விளக்கம் தருகையில், அப்படி செய்தவர்கள் (கட்டளையிட்டவர்கள்) அரசியல்வாதிகள், அதிகாரிகள், இராணுவத் தலைவர்கள் முதலியோர் தான் இதில் சம்பந்தப்பட்டவர்கள்; கட்டளைகளை நிறைவேற்றிய நூற்றுக் கணக்கானவர் அல்ல என்பதைத் தெரிவித்திருந்தனர்.

அந்த வட்டாரங்கள் மேலும் தகவல் தருகையில், இராணுவத்திலுள்ள மீளாய்வுக் குழு வொன்றின் கருத்துப்படி, சில நடவடிக்கைகள் இராணுவ முக்கியத்துவம் குறித்த கடும் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டவை. அவைகளைப் போர்க்குற்றங்கள் என்றும் வர்ணிக் கப்படலாம். சம்பந்தப்பட்டவர்கள் அவைகளுக்காக குற்றச்சாட்டுக்களுக்குள் உள்ளடக்கப்படவும் கூடும். எனவே, இந்த விடயமானது தேசிய ரீதியில் அணுகப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட அவர்கள் அந்த செயற்பாட்டை மேற்கொண்டிருந்தாலும் இராணுவத் தலைவர்கள் பிரதானமாக குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக நேரலாம் என்று அவர்கள் அச்சம் கொண்டுள்ளார்கள். மறுபுறம் சுமார் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் நாட்டுக்கு எதிராகப் போர் புரிந்த குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள இராணுவத்தினர் விரும்புகின்ற அதேநேரம், பொதுமக்கள் எவரும் கொல்லப்பட்டிருந்தால் அது வேண்டுமென்றே செய்யப்பட்டவையல்ல




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து வரும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே வடக்கில் இப்போது இருந்து வரும் பிரதான பிரச்சினை களில் ஒன்று. 1996 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையின ரின் தலைமை யகத் தையும் உள்ளடக்கிய 11,629 ஏக்கருக்கும் அதிகமான பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

என்றும் தெரிவித்திருப்பதாக மீளாய்வுக் குழுவினர் குறிப்பிட்டுள்ளார்கள்.

இராணுவ உயர் மட்டத்தினருடன் ஜனாதி ஸ்ரீ மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நடத்தியிருந்த கலந்துரையாடல்களில், தவறு செய்தவர்களைக் கண்டு பிடிப்பதாகவே எந்த ஒரு விசாரணையும் இடம் பெறும். இராணுவ நிறுவனத்தின் மீது அல்லது அதில் தொழில் ரீதியில் செயற்படும் பெரும் எண்ணிக்கையானவர்கள் மீது அல்ல என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அதனால் விசாரணை ஒன்று ஓர் அமைப்பால் மேற்கொள்ளப்படும்போது தங்கள் தரப்பிலான நிலைப்பாட்டை முன்வைப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று விளங்கப்படுத்தியிருந்தார்கள்.

**காணிகள் விடுவிப்பு**

இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து வரும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே வடக்கில் இப்போது இருந்து வரும் பிரதான பிரச்சினைகளில் ஒன்று. 1996 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரின் தலைமையகத்தையும் உள்ளடக்கிய 11,629 ஏக்கருக்கும் அதிகமான பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் தொடர்ந்து கிளப்பப்பட்டு வரும் பிரச் சினைகளில் மயிலிட்டியில் காணிகளை விடுவிப்பது தொடர்பானதும் ஒன்று. இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களான பொதுமக்கள் இப்போதும் முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். 1990 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் மயிலிட்டியையும் மீன்பிடி இறங்குதுறையையும் சேர்த்து இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னர் 1987 ஓகஸ்ட் முதற் கொண்டு வலிகாமம் வடக்கு, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி தெற்கு ஆகிய பகுதிகள் மற்றும் பலாலியின் பொதுவான பகுதிகள் இலங்கை விமானப் படையின் கீழ் நிலைப்படுத்தப் பட்டன. விமானங்கள் இறங்கும்போது அல்லது ஏறும்போது துப்பாக்கிக் குண்டு தாக்குதலுக்குள்ளாகும் நிலையைத் தவிர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.

சுமார் 11,629 ஏக்கர் காணியில் இப்போது 6,985 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. 4,643 ஏக்கர் நிலம் இன்னமும் இராணுவத்தின் வசம் இருக்கின்றது.

கடந்த மாதம் இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் கூட்டமொன்றுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகித்தபோது, ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன், மயிலிட்டி மீன்பிடி துறையை யும் வேறு பிரதேசங்களையும் விடுவிக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

பலாலி விமானத்தின் ஓடுபாதையின் அருகில் அந்தத்துறை இருப்பதாகவும், விமானத்தளத்தைப் பிராந்திய விமானத் தளமாக விஸ்தரிப்பதற்கான திட்டம் இருப்பதாகவும், தெரிவித்திருந்த பிரதமர் காணிகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு பதிலாக உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார். இராணுவ நிறுவனங் களைத் தவிர அந்தப் பிரதேசத்தில் கோயில்கள், கே.கே.எஸ்.ரயில் நிலை யம், கைவிடப்பட்டிருக்கும் சிமெந்து ஆலை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்குரிய கட்டடங்கள் முதலியவை காணப்படுகின்றன.

**விஜயகலாவின் தேசியக் கொடி விவகாரம்**

அண்மையில் வடக்கிலுள்ள புலனாய்வாளர்கள் இலங்கை அரசுக்கு வழங்கிய தகவல் ஒன்றில், மயிலிட்டிக் காணிகளை வழங்க பிரதமர் மறுத்திருந்தாலும் ஜனாதிபதி தமது கோரிக்கைகளுக்கு இணங்கும் நிலையில் இருப்பதாக விஜயகலா தெரிவித்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார்கள். சாவகச்சேரியில் வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வருடாந்த நிகழ்வொன்றில் அவர் கலந்து கொண்டிருந்தார். அங்கு தேசியக்கொடியை ஏற்றி வைக்க மறுத்த அவர் அனேகமானவர்கள் இன்னமும் சிறைச்சாலைகளில் உழல்கையில் தாம் அவ்வாறு செய்யவிரும்பவில்லை என்று தெரிவித்திருந்ததாக புலனாய்வாளர்கள் தம் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், தாம் கொடியை ஏற்ற மறுத்தார் என்பதை விஜயகலா மகேஸ்வரன் முழுமையாக மறுத்துள்ளார். இப்பொழுதெல்லாம் முக்கிய நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகள் அழைக்கப்படும்போது காலம் தாழ்த்தி வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். தேசியக் கொடியை ஏற்றிவைத்து வீணான சர்ச்சைகளில் மாட்டிக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை.

மயிலிட்டிக் காணிவிடுவிப்புத் தொடர்பாக வலிகாமம் புனர்வாழ்வுக்குழுவின் தலைவர் ஏ.குணபாலசிங்கம் கூறுகையில்; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருக்கையில், யாழ்ப்பாணம் வந்தபோது இந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என்று வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் இப்போது அதனை மாற்றிக் கொண்டுள்ளார். இந்தக் காணிகளை மீளப் பெறுவதற்கு தமது குழு ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த விருப்பதாகவும் கூறினார். இப்பொழுது மீன் பிடிக்க மாத்திரம் அனுமதிக்கப்படுகின்றது. முன்பு ஐஸ் ஆலை ஒன்று இந்தப் பகுதியில் இருந்தது. அது இப்போது இயங்குவதில்லை.

## ஆசிரியப் பெருந்தகைகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஒரு குழந்தையின் முதல் பிரார்த்தனை மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். அந்த வகையில் பிதாவாகிய தந்தைக்கும், படைத்தவனாகிய தெய்வத்துக்கும், முன்னிற்பவர் குரு என்னும் ஆசிரியரே. ஒரு பிள்ளையின் கல்விக் கண்ணைத் திறந்து அப்பிள்ளையை ஒரு நாட்டின் நற்பிரசையாக உருவாக்க வேண்டிய கடமை, படைத்தவனுக்கு அடுத்து உங்களையே சாரும். அப்படியான பெரும்பேறும் சிறப்பும் பெற்ற உங்களில் சிலர் செய்வது நியாயமா? உங்களுக்கு மனச்சாட்சியே இல்லையா? நீங்கள் காணும் குழந்தைகள் அனைவரும் உங்கள் குழந்தைகள் அல்லவா? பெறாமலேயே எத்தனை தலைமுறைக்குத் தந்தையாகிறீர்கள்.

அப்பிடியிருக்க கல்வி கற்க வரும் பள்ளிக் குழந்தைகளிடம் உங்கள் பாதகக் குணத்தை ஏன் காட்டுகிறீர்கள்? சாத்தானின் ஏவல் காமுகனா நீங்கள்? முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். இன்று நீ ஒரு பிள்ளையைக் காவு கொண்டால், நாளை உன்னைப்போல் ஒருவன் உனது பிள்ளையைக் காவு கொள்வான் என்பதை மறவாதே.

என்ன செய்வது? என்ன நடக்கப்போகிறது எமது நாட்டில் நீதி தேவதை கண் திறக்கும் வரை? அன்று தீவகத்தில் வித்தியாவின் கொலைக்கு ஒரு முடிவு கிடைத்திருந்தால் இன்று தொடராது காமுகரின் களியாட்டம். கலை, கலாசாரம், பண்பாடு எனப் பெயர் பெற்ற யாழ்ப்பாண மண்ணுக்கு மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்களே வழி தவறி நடக்கின்றனர் என நினைக்கும் போது வெட்கம், வேதனை. அன்பானவர்களே, பெண் என்பவள் தெய்வத்துக்கு ஒப்பானவள், பூவுக்கு உவமையானவள், ஒவ்வொரு பெண்ணிலும் உன் தாயைப்பார். உன் சகோதரியைப் பார். நல்ல நண்பனாகத் தோள் கொடுக்கப்பார். ஒவ்வொரு பெண் குழந்தையிலும் சிற் பத்தை செதுக்கு. சிதைக்கும் எண்ணத்தைத் தயவு செய்து விட்டுவிடு.

"வேலியே பயிரை மேய்ந்த கதை இனியும் வேண்டாம்"

எஸ்.கல்கி, கொழும்புத்துறை.

## எப்போது உணர்வார்கள்?

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அச்சம் நிறைந்த சூழலில் தமது வாழ்நாள்களை நகர்த்திச் சென்றதை தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மிருகங்கள்கூட உணர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இப்போது தனிமனித சுதந்திரம் ஓரளவு முன்னேற்றமடைந்தமை ஆறுதலாகவுள்ள நிலையில் எமது மக்கள் இன்னமும் அந்த அச்சத்திலிருந்து நீங்கவில்லை என்பது மன வேதனையாகவுள்ளது.

சனசமூக நிலையங்களில் வருடா வருடம் நிர்வாகங்கள் மாற்றியமைக்கப்பட்டு புதிய சேவையாளர்களை உள்வாங்கி ஒரு கிராமத்தை முன்னேற்றிச் செல்வது விதிமுறையாகும். எமது ஊர் சனசமூக நிலையத்திலும் முன்னைய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட போது அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவர் எமது நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பேற்றார். யாப்பு விதிகளுக்கு அமைய அரசியல்கட்சிக்காரர் ஒருவர் பொறுப்பெடுக்க முடியாது. எனினும் கட்சி பேதமின்றி செயலாற்றுவேன் என உறுதியளித்திருந்தார்.

அவரது பணியும் உயர் ரகமானது என்பதை எமது மக்கள் உணர்வர். தற்போது கடந்த வருடம் முடிந்து 16 உம் வந்தாச்சு. தையும் கடந்தாச்சு. இன்னமும் புதிய நிர்வாகம் தெரிவதாகத் தெரியவில்லை.

இதை உணர்ந்த சில இளைஞர்கள் பொது மக்களிடம் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டனர். பொதுமக்களோ உண்மையை உணர்ந்தும் முன்னைய கால அச்ச உணர்விலிருந்து மீளாதுள்ளனர். பொதுப்பணிக்கு மக்கள் பின்வாங்குவது எமது கிராம முன்னேற்றத்துக்கு பெரும் பாதிப்பாக அமையும் என்பதை எப்போது உணர்வார்கள்?

சாந்தையூரன்

## எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொடுப்பனவு

70 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 2000 ரூபா சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்படுகின்றது. எந்தவிதமான வருமானமோ, மற்றவர்களது அரவணைப்போ இல்லாத முதியோருக்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்தக் கொடுப்பனவு ஓரளவு பயன்படுகின்றது. அவ்வாறு இருக்கின்ற நிலையில் 100 ரூபா வீதம் இரு மாதங் களுக்கான 200 ரூபாவை இந்த மாதக் கொடுப்பனவில் கழித்துவிட்டு 1,800 ரூபாவை மட்டுமே வழங்கினார்கள். இதற்கான காரணத்தைக் கேட்டபோது, சமூக சேவைத் திணைக்களம் முதியோர் நலன்புரி சேவை நிதியத்துக்கு அறவிடும்படி தமக்குச் சுற்றறிக்கை வந்துள்ளதாகக் கூறினர். வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள நிலையில் வழங்கப்படுகின்ற 2,000 ரூபாவில் மாதாந்தம் 100 ரூபாவை அறவிட்டு முதியோர் நலன்புரிச் சேவை நிதியத்துக்கு வழங்காமல், அந்த நிதியத்துக்கு மாற்று வழிகளில் நிதி திரட்ட முடியாதா? இந்தவிடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சமர்ப்பணம்.

இ.இராஜேந்திரா
சமாதான நீதிவான் (தீவு முழுவதும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் வளர்க்கும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

கி.கிருஷ்ணராஜா



பாடசாலை என்றால் இப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகவும், எடுத்துக்காட்டாகவும் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், இப்போது கோப்பாய்க் கோட்டத்தில் இருக்கும் பாடசாலைகளில் முன்னேறிவரும் பாடசாலையாக திகழ்கின்றது. விளையாட்டிலும், கல்வியிலும், என்றல்லாது அழிந்துவரும் கலாசார நாகரிகங்களையும் நன்றாகப் பராமரித்துப் போற்றும் பாடசாலையாகவும் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் திகழ்கிறது. 1952ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் தற்போதைய அதிபர் ச.சத்தியவரதன் ஆவார். இவர் பொறுப்பான சேவையை இந்தப்பாடசாலைக்கு ஆற்றி வருகின்றார். இவர் இந்தப் பாடசாலைக்கு வந்ததிலிருந்து அனைத்துத் துறைகளிலும் பாடசாலை முன்னேறி வருகின்றது. தற்போது இந்தப் பாடசாலை அண்ணளவாக 600 மாணவர்களுடன் தன் கல்விப் பணியில் சிறந்து விளங்குகின்றது. இந்தப் பாடசாலையில் தரம் 11 வரையுள்ள வகுப்புக்களும் கலைப்பிரிவுக்காக தரம் 12ம் இயங்குகின்றது. இந்தப் பாடசாலையின் முன்னாள் சுகாதார ஆசிரியராகச் செயற்பட்டவர் ந.கஜேந்திரன் ஆசிரியர் ஆவார். தற்போது அவர் சுகாதார ஆலோசகராகப் பொறுப்பேற்றுச் சென்றதால், இப்போது ஜெ.ஜெயகாந் ஆசிரியர் கடமையாற்றுகின்றார். இவரும் துடிப்பு மிக்க ஆசிரியராவார். கந்த சஷ்டி, நவராத்திரி போன்ற விரதங்களும், விசேட தினங்களும் பாடசாலை மாணவர்களால் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது. அது மட்டு மல்லாமல் கல்வி நடவடிக்கைகளுக்காக அலகுப்பரீட்சை, நாளாந்தப்பரீட்சைகளும் மற்றும் ஒவ்வொரு மாத இறுதி வாரத்தில் கவின்கலை மன்றம் எனும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்க்கும் மன்றத்தின் மூலம் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. பக்தி நிகழ்வுகள் எல்லாவற்றுக்கும் ஆண்களும் பெண்களும் கலாசார ஆடைகளுடன் வர வேண்டும் என்பது இந்தப் பாடசாலையின் சட்டதிட்டமாகும், அது மட்டுமல்லாமல் பாடசாலை நாள்களில் காலை நேரத்தின் போது ஆரம்பப் பிரிவு, இடைநிலைப்பிரிவு எனப் பிரித்து நற்சிந்தனை ஓதுதல் இடம்பெறுகின்றது. ஆங்கில மன்றம், இந்துமன்றம், கணித, விஞ்ஞான மன்றம் மற்றும் விளையாட்டு, அழகியல் போன்ற அனைத்துத் துறைசார் மன்றங்களும் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ப இப்பாடசாலையில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தவணைப் பரீட்சை முடிவில் நடைபெறும் பெற்றோர் சந்திப்பு, மாணவர் வருகை, காலைப் பிரார்த்தனை எல்லாம் இங்கு குறிப்பிட்ட நேர காலத்திற்குள் நடைபெறுகின்றன. நேர்த்தி, ஒழுங்கு, பண்பாடுகளும் இங்கு கடைக்கொள்ளப் படுகின்றன. இங்குமாணவர்கள் தவறு விடுகின்ற பட்சத்தில் ஒழுக்காற்றுக்குழு மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பாடசாலை அதிபரும் ஏனைய ஆசிரியர்களும் இந்தப் பாடசாலை மாணவர்களை நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல அயராது பாடுபடுகின்றனர்.

> ஒவ்வொரு மாத இறுதி வாரத்தில் கவின் கலை மன்றம் எனும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்க்கும் மன்றத்தின் மூலம் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. பக்தி நிகழ்வுகள் எல்லாவற்றுக்கும் ஆண்களும் பெண்களும் கலாசார ஆடைகளுடன் வர வேண்டும் என்பது இந்தப் பாடசாலையின் சட்ட திட்டமாகும்.


இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர் வளமே சிறுபிரச்சினை என்றாலும், அவற்றை நிவர்த்தி செய்து சகல விடயங்களிலும் முன்னேறிச் செல்கிறது நடராஜ இராமலிங்க வித்தியாலயம். இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் இன்னும் பலமுன்னேற்றமும் தரமான சாதனைகளும் புரிய வேண்டும்.


# வாஸ்து சாஸ்திரம்

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா,
ஆத்தியடி, புலோலி.

வாஸ்து என்பது சாஸ்திர முறைக்கமையக் கட்டக்கூடிய மனை எனக் கருதலாம். இது மனையடிச் சாஸ்திரத்தின் இதயம் போன்றது. நாம் வீடு கட்ட எண்ணும்போது மனையடிச் சாஸ்திர வல்லுநர்களை நாடுகின்றோம். ஒரு இடம் வடகிழக்கு (ஈசான்யம்) வடமேற்கு (வாயு) தென்கிழக்கு (அக்கினி), தென்மேற்கு (நிருருதி) என நான்கு மூலைகளாகப் பிரிக்கப்படும். தற்கால முறைப்படி கட்டப்படும் வீடுகள் வாஸ்து சாஸ்திரத்தைப் பின்பற்றினாலும், வசிப்பதற்கு வசதியுடன் இருக்கும் என்று சொல்லமுடியாது. இயன்றவரையில் உரிய விதிமுறைகளைப் பின்பற்றுவது நன்று. குறிப்பாக மனையறை, சமையல் அறை, தலைவாசல், வெளி வாசல், கிணறு என்பனவே முக்கியம். ஈசானிய மூலையில் கிணறு உத்தமம். குறித்த நிலத்தின் மண்ணை நீர் சேர்த்துப் பிசைந்து வைத்து விட்டு, மறுநாள் பார்க்க நுரைத்திருப்பின் அந்த நிலம் புதுமனைக்கு உகந்ததே. புதுமனையில் கட்டட வேலையை ஆரம்பிக்க, கிரகப்பிரவேசம் செய்ய நல்ல சகுனம் பார்ப்பதும் வழக்கம். மனையில் வீடு கட்ட ஆரம்பித்த பின், கிழக்கில் புற்று தோன்றினால் செல்வமே. கிழக்கு முக வாசல் மனை, வடக்கு முக வாசல் மனை, தென் முக வாசல் மனை, மேற்கு முக வாசல் என மனைகள் வகைப்படும்.

சில விதி முறைகள் அக்காலத்து மக்களுக்கேற்றபடி உள்ளது. இன்று மின்சார வசதி, வாயு அடுப்புகள், குளிர்சாதனவசதிகள், குழாய்க் கிணறுகள் போன்ற பலவசதிகள் உள்ளன. எனவே, இது நடைமுறைக்குச் சாத்தியமா? இல்லையா? எனச் சிந்தித்தல் முக்கியம். எனவே பழைய காலத்தில் உள்ள நிலைமைகள், விதிகள், சட்டங்களுக்கு அமைவாக வாஸ்து சாஸ்திரம் எழுதப்பட்டுள்ளது. இன்று மக்கள் தொகை, தொடர்மாடி வீடுகள், வீடுகள் கட்டப்படும் இடங்கள், கழிவுநீர்க் குழாய்கள் யாவும் வாஸ்துவுக்கு சவாலே. கிராமிய வாழ்வுக்கு வாஸ்து ஓரளவுக்குச் சரிவரினும் நகர, மாநகரப்பகுதிகளில் வாஸ்து சாஸ்திர முறைப்படி மனை அமைப்பது மிகவும் சிரமமே.





Noolaham Foundation.
aavanaham.org

# யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறையில் இடம்பெறும் செயன்முறைகளும் விளைவுகளும்

பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன்

(குறித்த தலையங்கத்தின் கீழ் கடந்த 20ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் காணப்படும் உள்நாட்டுக் கடல்நீரேரிகளைச் சூழ பெருமளவு பள்ளமான நிலங்கள் காணப்படுகின்றன. இப்பள்ளமான நிலங்கள் பெரும்பாலும் கரைசல் (solution activities) செயன்முறைகள் காரணமாக உருவாக்கப்பட்டவைகளே ஆகும். மழைக் காலங்களில் இப்பள்ளங்களில் வெள்ள நீர் தேங்கி விடுகின்றது. இப்பள்ளங்கள் சிறிய உடைவுக்கோடுகள் வழியே (fault lines) அமைந்துள்ளன. கரைசல் செயன்முறை மிக இலகுவாக உடைவுகள், மூட்டுக்கள் வழியே இடம் பெறுகின்றது. புத்தூர் கிழக்கு மேற்குப் பகுதிகளில் சிறப்பாகக் காணப்படும் பள்ளமான நிலங்கள் இந்தச் செயற்பாட்டால் ஏற்பட்டவையே எனலாம். ஏரித்தாழ்நிலமும் நீண்ட காலமாக ஏற்பட்ட வெளியுருவச் செயன்முறையால் எற்பட்டவையே.

யாழ்ப்பாணப்பிரதேசத்தில் வெளியரும்பிக் காணப்படும் பாறைப்பிரதேசங்களில் கரைசல் பள்ளங்களும் குகைகளும் காணப்படுகின்றன. தொண்டமனாற்றுப் பகுதிகளில், சின்ன மண்டபம், பெரிய மண்டபம் என்று அழைக்கப்படும் பகுதிகளில் இத்தகைய குகைகள் உருப்பெற்றுள்ளன.

மேலும் மழை நீர் மேற்பரப்புப் பள்ளங்கள் வாயிலாகக் கீழ் இறங்கி உப மேற்பரப்புப் பாறைப் பகுதிகளில் கரைசல் பள்ளங்களை குத்தாகவும் கிடையாகவும் ஏற்படுத்துகின்றது. கிடையான பள்ளங்கள் விரிவடையும் போது மேற்பரப்புப்பகுதி உடைந்து விழ அந்தப் பகுதியில் பெரிய பள்ளங்கள் ஏற்படுகின்றன.

இவ்வகையான பள்ளங்கள் (depression) ஏற்படும் செயற்பாடுகள் பற்றி கூறே என்னும் பெயருடைய புவிச்சாதவியலாளர் தனது "An Introduction of Geology of Ceylon" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். (Cooray .P.G. 1968:P:71) 1905 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் மானிப்பாய் என்னும் இடத்தில் உள்ள ஒரு கிராமத்தில் (நவாலி) சடுதியாக மேற்பரப்பில் ஒரு பள்ளம் தோன்றியதாகவும் அவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்பள்ளத்தில் காணப்படும் நீர்வற்றாத நிலையில் இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறைப்பகுதியில் சீமெந்துத் தொழிற்சாலைக்கு சுண்ணக்கல் அகழும் போது பெரிய துவாரங்களும் இயற்கைச்சுரங்க வழிகளும் காணப்பட்டன. இப்பள்ளங்களில் நீரும் சேறும் கலந்து காணப்பட்டன. இவை எல்லாம் சுண்ணாம்புக்கற்பாறையில் கரைசல் தொழிற்பாட்டால் ஏற்பட்ட பள்ளங்களும் குகைகளும் வாய்க்கால்களுமாகும். இந்தப் பிரதேசங்களில் இவை சர்வசாதாரண தரைக்கீழ் நிலவுருவங்களாகும்.

குரும்பசிட்டி என்னும் இடத்தில் காணப்படும் பேய்க் கிணறு, புன்னாலைக்கட்டுவன் பகுதியில் காணப்படும் கோயில் குளம், புத்தூர் என்னும் இடத்தில் காணப்படும் நிலாவரை (நில அறை) வற்றா நீர் கிணறு போன்றவை எல்லாம் மிக ஆழமான குத்தான குகைகள் ஆகும்.

மழைக் காலங்களில் நிலப்பகுதியில் காணப்படும் பள்ளங்கள், குகைகள் வாயிலாகப் பெருமளவு நீர் கீழ் இறங்குவதை இன்றும் காணமுடியும். அல்வாய் என்னும் இடத்தில் காணப்படும் மாயக்கை (மாயக் குகை) ஊடாக மழை நீர் உட்சென்று விடுகின்றது. கரவெட்டி என்னும் இடத்தில் அத்துளுக்குளத்திலும் நீர் மிக விரைவாகக் கீழ் உள்ள பாறைகளுக்குள் சென்றுவிடுகின்றது. இவற்றை விட கீரிமலை மாவிட்டபுரம் வீதிக்குத் தெற்காக உள்ள பகுதியில் நீர் கீழ் இறங்கும் விழுங்கு துழை காணப்படு கின்றது. 1986ஆம் ஆண்டு இப்பகுதியைப் பார்வையிட்ட போது இதற்குப் பெயர் வெளவால் புரை என்று சொல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் தரைக்கீழ் பாறைக்குகைகளுடன் தொடர்புபட்ட குகைகள் காணப்படுகின்றன. (மீசாலை - வேம்பிராய் வற்றாக் கிணறு, ஊரெழு வற்றாக்கிணறு போன்ற வற்றை உதாரணமாகக் கூறலாம்.

### நவக்கிரி கிராமத்தில் இடம்பெற்ற மண் படையில் காணப்படும் வெடிப்பு

மண்படையில் காணப்படும் வெடிப்பு, அதன் கீழ் காணப்படும் சுண்ணாம் புக் கற்பாறையில் ஏற்படக்கூடிய ஒரு தாக்கத்தின் காரணமாகவே ஏற்பட்டிருக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எமது அவதானத்தின் பொழுது மேற்படி வெடிப்பு (Crack) ஏறத்தாழ வட்டப்போக்காக அமைந்துள்ளது.

மண்படைக்குக் கீழ் சிறிய ஆழத்திலேயே சுண்ணாம்புப்பாறை காணப்படுகின்றது. இப்பாறைப் பகுதிகளில் சாதாரணமாக இடம்பெறும் நீர்த் தாக் கத்தின் காரணமாக பாறை அடுக்கு களில் குத்தாகவும் கிடையாகவும் அரித்தல் பள்ளம் காணப்பட்டிருக்க வேண்டும்.


நிலத்துக்குக்கீழ் பெரிய குகை (cave) ஒன்று இருந்து அதன் முகடு அல்லது மேற்படை உடைந்து இருந்தால் குகைக்குள் உடைந்த பகுதிகளும் மேல்மண் படையும் சடுதியாக விழுந்திருக்கும்.

நவக்கிரிப் பிரதேச செம்மண் சற்றுக் களித்தன்மையாகக் காய்ந்து இருப்பதால் வெடிப்பைத் துல்லியமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மணற்பாங்கான பிரதேசமாக இருப்பின் வெடிப்பைக் காண்பது சற்றுக் கடினமாக இருந்திருக்கும். நவக்கிரி பகுதியில் இடம் பெற்றமை போன்ற சம்பவங்கள் பல, எமது பகுதியில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. இது போன்ற நிகழ்வுகளை இந்தப் பிரதேசத்தில் எப் போதும் எதிர்பார்க்க முடியும்.

எனவே இவ்விடயத்தைத் தொடர்ச்சியான அவதானிப்புக் உட்படுத்தப்படவேண்டும். ஏதாவது மாற்றங்கள் ஏற்படுகின்றதா என்பதை ஆராய்தல் மிக அவசியம்.

மேற்படி நிகழ்வு இடம்பெற்ற இடத்திற்கு அண்மையிலேயே நிலாவரை கிணறு - நிலக்கிணறு அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதேசம் விவசாயம் செறிவாக இடம்பெறும் பகுதியாகும். அண்மைக்காலங்களில் அதிகமாக இயந்திரம் மூலம் பாறைகள் நீக்கப்படல் மற்றும் விவசாயம் மற்றும் வீட்டுத்தேவைக்காக தரைக்கீழ் நீர் எடுக்கப்படல் காரணமாக ஏற்கனவே பலவீனமான நிலையில் காணப்படும் பாறை அடுக்குகள் உடைந்து விடும் அபாயம் உண்டு. எனவே பொது மக்களுக்கு இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டியது அவசியமாகும். குழாய்க் கிணறுகள் அமைத்தல், பெரிய கட்டடங்கள் அமைத்தல், போன்றவற்றில் மிகக்கூடிய கவனம் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் எடுக்கப்படுதல் அவசியமானதாகும். அத்துடன் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களின் திட்டமிடல் செய்ல்முறையில் குறித்த நிலவியல் தொடர்பான விடயங்கள் ஆராயப்படுவதோடு அவைதொடர்பாக நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஆக்கபூர்வமான ஆலோசனை மற்றும் அறிவுறுத்தலுடன் முன்னெடுப்பது எதிர்காலப் பாதிப்புக்கள் இழப்புக்கள் போன்றவற்றைத் தணித்தல் மற்றும் குறைத்தலுடன் பேண்தகு அபிவிருத்தியையும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். அதுமட்டுமன்றி யாழ்ப்பாணப்பகுதியில் இதுவரை நிலவியல் (Geological Survey) அளவீடுகள் செய்யப்படவில்லை. பாறைகளின் தடிப்பம், வன்தன்மை, மென்தன்மை உடைவுகள் (Faults), குத்தசைவுகள், கிடைஅசைவுகள் (Vertical Movement, Horizontal Movement), போன்ற விடயங்கள் பற்றிய தெளிவான தகவல்கள் மேற்படி அளவீடுகள் மூலமே அறியப்படமுடியும். இதனால் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர். இது தொடர்பான விடயங்களில் அதிக சிரத்தையுடன் கருத்திலெடுத்து அளவீடுகளை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும்.



"நவக்கிரிப் பிரதேச செம்மண் சற்றுக் களித்தன்மையாகக் காய்ந்து இருப்பதால் வெடிப்பைத் துல்லியமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மணற்பாங்கான பிரதேசமாக இருப்பின் வெடிப்பைக் காண்பது சற்றுக் கடினமாக இருந்திருக்கும். நவக்கிரி பகுதியில் இடம் பெற்றமை போன்ற சம்பவங்கள் பல எமது பகுதியில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. இது போன்ற நிகழ்வுகளை இந்தப் பிரதேசத்தில் எப்போதும் எதிர்பார்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்குத் தயாரான நிலையில் 30 வருடம் பழைமையான இறைச்சி



இத்தாலி, பெப்.24
ரோமில் 30 வருடங்களுக்கு மேல் பழைமையான இறைச்சி பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கோஸ்டன்டா பகுதியில்உள்ளவிடுமுறை உணவு விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

5 தொன் இறைச்சி விற்பனைக்காக தயார்செய்யப்பட்டிருந்தமை அதிகாரிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. வரி ஏய்ப்புச் சோதனையின்போது இவை கண்டுபிடிக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆய்வுகூடப் பரிசோதனையில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இறைச்சி உறைநிலையில் பதப்படுத்தப்பட்டு இருந்ததாகத் தெரிய வந்துள்ளது. இந்த மாதம் விற்பனைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்ததும் தெரிய வந்துள்ளது. அத்துடன் ஆறு வருடங்களின் முன்பு தளர்வடைச் செய்யப்பட்டுள்ளதும், பின்பு மீண்டும் உறைவிக்கப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது.

இது, மனிதர்கள் உண்பதற்கு உகந்த மாமிசம் அல்ல. இவற்றை உண்பது உடல்நிலையை ஆபத்துக்குள்ளானதாக மாற்றும் என ஆய்வு செய்த வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவற்றை யாராவது உட்கொண்டிருந்தால் சாவு ஏற்படுவது நிச்சயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பழைய இறைச்சியைப் போலிப் பத்திரங்கள் மூலம் புதிது என நிரூபித்து விற்பனை செய்யும் நோக்கில் விற்பனைக்கான உரிமத்தைக் கடை உரிமையாளர் பெற்றிருந்தார் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (த-ரி4)




# பிஜியை கடும் ...

## 21 பேர் சா...



சுவா, பெப்.24
பிஜியில் கடும் சூறாவளி தாக்கியுள்ளது. இதனால் வயல் நிலங்கள், வீடுகள், மரங்கள் என்பன முழுமையாக அழிவடைந்துள்ளன. சில தினங்களுக்கு முன்பு சூறாவளித் தாக்கம் அங்கு ஏற்பட்டபோதிலும் கடும் சூறாவளிக்கான எச்சரிப்புத் தகவல்களை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டிருந்தது. இத்துடன் இடர் முகாமைத்துவத்தினரும், ஏனைய அதிகாரிகளும் மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வீசிய பலத்த சூறாவளிக் காற்றில் 21 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இறப்...
லாம் என அஞ்...
8 ஆயிரத்து 1...
களை விட்டு பா...
ளனர். மணித்...
காற்று வீசியது...
சத அலைகள்...
கின. கடலுக்கு மீ...
மற்போயுள்ள...
இந்த நிலையி...
முதலில் உயி...



தாய்வானில் தலை கீழ் வீடு அமைக்கப்பட்டுள்ளது. 2 மாத காலத்தில், 6...
தலைகீழாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. மலசலகூடம் உட்பட அனை...
போன்று உணர்வதாக சுற்றுலாப்பயணி ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யத் தாக்கிய சூறாவளி

## வு





ளது. இறப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க
எனை அஞ்சப்படுகிறது.
ஆயிரத்து 100க்கும் மேற்பட்ட பொது மக்கள் தமது வீடு
ள விட்டு பாதுகாப்பு விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்
ர். மணித்தியாலத்திற்கு 330 கிலோமீற்றர் வேகத்தில்
று வீசியது. கடற்கரையில் 12 மீற்றர் உயரத்துக்கு இராட்
அலைகள் மோதின. 5 புயல்கள் அடுத்தடுத்துத் தாக்
கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் 7 பேர் காணா
போயுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.
த நிலையில் மேலும் 4 பேர் காணாமற்போயுள்ளனர்.
லில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 என

அறிவிக்கப்பட்டபோதும், பின்னர் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்வடைந்துள்ளது. 5 மில்லியன் அமெரிக்க டொலரை அவசரகால இடர் முகாமைத்தவ நிதிக்கு ஒதுக்கியுள்ளதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் யூலி பிப் தெரிவித்தார்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், சுகாதார வசதியைப் பேணுவதும், உணவு, நீர் என்பவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் சவாலாக அமைந்துள்ளது. மீட்புப்பணி வீரர்கள் இடிபாடுகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் யூலி பிப் தெரிவித்துள்ளார்.

(து-ரி4)

# ஒபாமாவை சந்தித்த 106 வயது மூதாட்டி



வொஷிங்டன், பெப்.24


அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை 106 வயது மூதாட்டி ஒருவர் சந்தித்துள்ளார். வேர்ஜீனியா மெக்லாரின் என்ற அந்த மூதாட்டி தனது வாழ் நாளில் மிகவும் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் இது எனத் தெரிவித்தார். வெள்ளை மாளிகையில் ஆபிரிக்கப் பின்னணியில் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்தமை தமக்கு உற்சாகம் அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.


ஒபாமாவும் அவரது மனைவியும் அவரை வெள்ளை மாளிகையில் சந்தித்தனர். தனது இரு கைகளாலும் ஒபாமாவை அணைத்து அவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மிகவும் மகிழ்ச்சியில் அவர்களுடன் இணைந்து நடனம் ஆடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பான காணொலியை வெள்ளை மாளிகை வெளியிட்டது. வெளியிட்டுச் சில மணித்துளிகளில் உலகம் முழுவதும் சென்றடைந்துள்ளது. இவர் 2014 ஆம் ஆண்டு ஒபாமா வைச் சந்திப்பதற்காக சமூக வலைத்தளத்தில் தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். வெள்ளை மாளிகையில் கறுப்பின ஜனாதிபதியை சந்திக்க விரும்புகிறேன். உங்களுக்காகத் தினமும் நான் பிரார்த்திக்கிறேன் என தெரிவித்திருந்தார். இந்த வீடியோ வெள்ளை மாளிகை சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது. இதனை அடுத்து அவர் இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்.

வெள்ளை மாளிகையில் இம் மாதம் கறுப்பின வரலாறு கொண்டாடப்படுகிறது என வேர்ஜினா மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்தார். இதனை அடுத்து அவருக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 1909 ஆம் ஆண்டு தெற்கு கரோலினாவில் பிறந்த இவர், 1941 ஆம் ஆண்டு வொஷிங்டனுக்கு குடிபெயர்ந்தார். இவரது வாழ் நாளில் 18 ஜனாதிபதிகளின் பதவி ஏற்புக்களைக் கண்டுள்ளார்.

இதற்கு முன்னர், சிறுமி ஒருவர் ஒபாமாவின் பதவிக்காலம் முடிவடைகிறது என்ற கேள்விப்பட்டவுடன் வீரிட்டு அழ அரம்பித்தார். அவரது குழந்தைத்தனமான அழுகையை வீடியோ எடுத்த குடும்பத்தினர், சமூக வலைத்தளத்தில் பதிவேற்றினர். இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. இதனை அடுத்து ஒபாமா அந்தச் சிறுமிக்கு தனது சமூக வலைத்தளத்தில் இருந்து ஆறுதல் கூறியுள்ளார். ஒபாமாவின் பதவிக்காலம் முடிவடைவதை அடுத்து இவ்வாறான நெகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. (து-ரி4)





ாலத்தில், 600 ஆயிரம் டொலர் செலவில் இந்த வீடு அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப்பயணிகளைக் கவருவதற்காக இந்த முயற்சி செய்யப்பட்டுள்ளது. வீட்டின் அனைத்துப் பொருள்களும்
பட அனைத்துப் பொருள்களும் தலை கீழாகக் காணப்படுகின்றன. இந்த வீடு 3 ஆயிரத்து 500 சதுர அடி பரப்பைக் கொண்டது. இந்த வீட்டினுள் பிரவேசித்தவுடன், தாமொரு ஸ்பைடர் மான்
ர்.

(து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டிய அரங்கேற்றம்









வவுனியா, கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலின் அனுசரணையின் கீழ் இயங்கி வரும் அருளகம் சிறுவர் இல்லத்தை சேர்ந்தவர்களும், அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி மாணவிகளும், திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களின் மாணவிகளுமான செல்விகள் சுபாயினி இராமகவுண்டர், ரிஷிகா செல்வராசா, தனுனூா சசிகரன், பிரியதர்சினி குணசேகரன், தியாணுகா தியாகலிங்கம் ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் தமிழ்மணி கலாநிதி அகளங்கன் தலைமையில் இடம்பெற்றது .

மேற்படி அரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தி.விஸ்வரூபனும், சிறப்பு விருந்தினர்களாக கலைஞர் வேல் ஆனந்தன்(முதுநிலை ஆடற்கலை ஆற்றுகையாளர் மற்றும் வட கிழக்கு மாகாணத்தின் ஓய்வு பெற்ற உதவிகல்வி பணிப்பாளர்) திருமதி அருட்செல்வி கிருபைராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத்துறை யாழ். பல்கலைக்கழகம்), கலாநிதி சர்மிளா ரஞ்சித்குமார் (சிரேஷ்ட விரிவுரையாளர் , தலைவர் நடன நாடக அரங்கியற்றுறை, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைகழகம், மட்டகளப்பு) ஆகியோர் கலந்துகொண்டனர். மேற்படி நிகழ்வின் இறுதியில் மாணவிகள் ஐவரும் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மற்றும் ஆர்வலர்களின் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் பெற்றுகொண்டனர்.

# புனித பத்திரிசியார் கல்லூரியில் வீரமாமுனிவர் விழா







யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், பாடசாலை மட்டத்தில் உள்ள மாணவர்களின் தமிழியல்சார் அறிவை மேம்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கும் நிகழ்ச்சித்தொடர் வரிசையில், கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு வீரமாமுனிவர் விழாவைச் சிறப்புற முன்னெடுத்தது.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில், அதன் அதிபரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க உபதலைவர்களுள் ஒருவருமாகிய அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், வீரமாமுனிவரும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும் என்ற பொருளில், மன்னார் கலையருவி நிறுவன இயக்குநர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்மொழியில் ஆற்றல் பெறுவதற்குப் பெரிதும் துணை செய்வது எது? என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் தலைமையில் சொல்லாடுகளம் இடம்பெற்றது.

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களைப் பேச்சாளர்களாகக் கொண்ட இச்சொல்லாடுகளத்தில் எழுத்துப் பயிற்சியே என த.ரகுராம், ந. சஞ்சீவன் ஆகியோரும், கேள்விப் பயிற்சியே என பா.டிலக்ஷன், எஸ். ஜோன் எமில்ரன் ஆகியோரும், வாசிப்புப் பயிற்சியே என [illegible] கல்லூரியின் தமிழாசிரியர் இ.இ. வசீகரன் நன்றியுரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுப் பிரதேச கலாசார விழா





கடந்த 16ஆம் திகதி அன்று மடுப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிரதேச கலாசார விழாவில் மடுப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜன், மடு பிரதேச செயலர் F.C. சத்தியசோதி , பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் M.Y.S. தேசப்பிரிய, புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன் , மடுப் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி S. J. M. அனிதா ஆகியோர் கலந்து கொண்டனர். கலைநிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன.

# ஓவியத்துக்கும் மக்களுக்குமான நெருக்கம் உருவாக வேண்டும்



கூறுகிறார் ஓவியர்
தவ.தஜேந்திரன் (யோகி)

சிப.வேந்தன்

காலங்களைக் கண்முன்னே காட்டும் கலை ஓவியம். எந்தவிதமான சமரசங்களுக்கும் இடம்கொடாது காலங் கடந்துபோன எம் மூலங்களை எமக்கு அறிமுகப் படுத்திவிட்டுப்போக ஓவியங்களால் மட்டுமே முடியும். அந்த வரிசையில் இருபாலை என்ற அழகிய கிராமத்தில் தன் துரிகைகளால் காலத்தை வரைந்துகொண்டிருக்கும் இளம் ஓவியர் யோகியை பின்மாலைப்பொழுதொன்றில் சந்தித்து அவரது ஓவியப்ப யணம் பற்றி உரையாடிய போது....

இருபாலை கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையில்தான் படித்தேன். அப்போது நான் மூன்றாம் ஆண்டு படிச்சுக்கொண் டிருக்கும்போது ஆக்கம் என்ற பாடத்துக்கு விவேகானந்தன் என்ற ஆசிரியர், ஒரு பூச்சாடியைக் கீறிப்போட்டு அதைப் பார்த்துக் கீறிக்கொண்டு வந்து காட்டச் சொன்னார். அப்பதான் நான் முதன் முதலாகப் படம் கீற ஆரம்பித்தேன். அதை நான் வடிவாகக் கீறிக்கொண்டுபோய்க் காட்ட, உடனை அவர் எல்லாருக்கும் முன்னால என்னைக்கூப்பிட்டு விட்டு முதுகில தட்டிப் பாராட்டினவர். அதுதான் எனக்குப்படம்வரைகிறத்துக்குக்கிடைச்சமுதல் ஊக்குவிப்பு எண்டுசொல்ல லாம். அதுக்குப்பிறகு ஓவியத்தை ஒரு பாடமா எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். அப்போது எனக்கு பிரபாகரன் என்ற ஆசிரியர் நல்ல உந்துதலையும் நம்பிக்கையையும் தந்தார். தொடர்ந்து வந்த காலப்பகுதியிலை அவர் மூலமாய் வளர ஆரம்பிச்சன்.

பிறகு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி வந்தாப்பிறகு அது ஒரு வேற உலகம். பார்வைகள் விரிவடையத் தொடங்கிற்று. அங்கை நிறைய ஓவியக்கண்காட்சிகளைப் பார்த்து, நிறைய ஓவியர்களைச் சந்தித்து, அவர்களின் அநுபவங்களைப் பெற்றுக்கொண்டேன்.

நிறையத்தேடல், வாசிப்பு, படிப்பு என்று இருந்த காலத்தில ஆ.செ. இராசையாவின் தொடர்பு எனக்குக் கிடைத்தது. எனக்கு அவரது ஓவியத்தில்ஒரு அலாதிப்பிரியம். அவருடைய பாதிப்புக்கள் எனக்குள்ள வந்தது. அதே நேரம் எங்கடை பிரிவுக்கு இணைப்பாளராக கலா நிதி சனாதனன் வந்தார். அதுக்குப்பிறகு என்னுடைய ஓவியப் பய ணத்தின் அடுத்தகட்டம் ஆரம்பமாகியது.

அவர் ஓவியத்துறை சம்மந்தப்பட்டவர்களை வெளிநாடுகளிலும் கொழும் பிலும் இருந்து கூட்டிக்கொண்டு வந்து எங்களுக்குக் கற்றுக்கொள்ள வழி செய்து தந்தார். அதனால் நிறைய விடயங்களை அறிந்து கொள்ளக்கூடிய மாதிரி இருந்தது. அந்தக் காலப்பகுதியில் என் னாலை நிறைய முன்னேற்றமடையக்கூடியதாக இருந்தது.

படிச்சுக்கொண்டிருந்தபோதே வெளிமாவட்டங்களுக்கெல்லாம் போய் நிறைய ஓவியக் கண்காட்சிகளெல்லாம் செய்தனாங்கள். ஓராள் ஓவியக்கண்காட்சி, குழுவாக இணைந்து நிறையக் கண்காட்சி கள் செய்தனாங்கள். கொழும்பு, ஆப்கானிஸ்தான், யாழ்ப்பாணத் தில் என்று பல இடங்களில் ஓவியக்கண்காட்சிகள் செய்திருக்கிறன். பல்கலைக்கழகத்திலை இருந்து வெளியேறி இரண்டு வருசமா டெமோக் கிரட்டிஸ்ஸாய் இருந்தனான். இப்போது பல்கலைக்கழகத்தில் வருகை தரு விரிவுரையாளராக இருக்கிறன்.

தொடக்ககாலத்திலை ஓவியங்களை விருப்பப்பட்டும், மற்றவர்களின்ரை பாராட்டுகளுக்காகவும்தான் வரைஞ்சுகொண்டு வந்தனான். அந்தப் பாராட்டுகள்தான் எனக்கு நம்பிக்கையையும் துணிவையும் தந்தன. பின்னர் பல்கலைக்கழகம் வந்தாப்பிறகுதான் நவீனப்பிரக்ஞை எனக்கு வந்தது. ஒரு முழுமையான ஓவியனாக உருவாகிறதுக்கான சிந்தனை முறையும், வெளிப்பாட்டு முறையிலும் மாற்றங்கள் வரத் தொடங்கின. திறமையான துறைசார் வல்லுனர்கள், நல்ல மனிதர் களுடைய தொடர்புகள் மூலமாகவும், என்ரை வெளிப்பாட்டுத்திறனிலை மாற்றங்கள் வந்தன. கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் எண்டு எல்லோரிடமும் உரையாடி அவையிட்டை இருந்து எனக்குத் தேவையான விடயங்களைப் பெற்றுக்கொண்டேன். இதில் நிறையப்பேரைச் சொல்லலாம். அகிலன்சேர், கவிஞர் தானா. விஸ்ணு, நிலாந்தன் சேர் இப்பிடி நிறையப்பேரைச் சொல்லலாம். இவர்கள் வரிசையில் பேராசிரியர் ஜெகத் வீரசிங்கவும் என்னிலை பாதிப்பை ஏற்படுத்தியவர்.

என்ரை குடும்பத்தில் எவருக்குமே இந்தத்துறையோடு தொடர்பில்லை. நான்தான் முதன்முதலாக இதில் காலூன்றினனான். ஆனால் வீட் டில் எனக்கு நல்ல விதமான ஆதரவு தந்தவர்கள். நான் இதைத் தான் படிக்கப்போறன் எண்டு முடிவெடுத்தாப்பிறகு எந்தவித மறுப்பு மின்றி அனுமதி தந்தவை இப்ப நான் நல்லபடியாய்ப் படிச்சு இந்தத் துறை யில பட்டம் வாங்கினாலும் ஜீவனோபாயத்துக்கான ஒரு நிரந்தரத் தீர்வை தேடுறதுதான் பிரச்சினையா இருந்தாலும் நான் எனக்கான சரியான திருப்தியான பாதையைக் கண்டுபிடித்து விட்டேன் என்பதில் திருப்தியடையிறன். இந்த விடயத்திலை நான் தோல்வி அடையவில்லை என்பது குடும்பத்திலை எல்லோருக்கும் நன்றாகப் புரிஞ்சிருக்கு.

நான் வரைஞ்ச ஓவியங்கள் கண்காட்சிகளிலை நல்ல விலைக்கு வாங்கப்பட்டிருக்கு. அவையெல்லாம் எனக்கு நம்பிக்கையையும் திருப்தி யையும் தந்திருக்கு. இதிலை வெற்றியடையலாம் என்று எனக்கு முழு நம்பிக் கையைத் தந்திருக்கு. ஓவியம் வரையுறதுதிலை இப்ப விற்பனை, பாராட்டு, பெயர்வாங்க வேணும் என்பதைத் தாண்டித் தனிமனித விடுதலைக்கானது என்பதில் தான் எனக்கு உடன்பாடு. இதப்போலதான் கவிதைகளும் என்னு டைய கவிதைப்படைப்புக்களும் தனிமனித விடுதலைக்கான ஓர் வடிவம்தான். சிலவேளை வேறை தொழில் செய்யவேண்டி வந்தாலும் ஓவியனான என்னையோ, கவிஞனான, என்னையோ அது எந்தவிதத்திலையும் பாதிக்காது என்பது என் நம்பிக்கை.

படைப்பு மனநிலை எப்பவரும், எந்தக் கணத்தில வரும் என்று சொல்ல ஏலாது. திடீரெண்டு பற்றிவிட்டுப்போய்விடும். படைப்பாளி அதுக்கான மனநிலை யோட இருக்கவேணும். அப்பிடி இருந்தால் அது உடனே தொற்றிக் கொண்டு விடும். கற்பூரம்போல ஒரு படைப்பாளி இருக்கவேணும். உள்ளுக்குள்ளை படைப்பு எத்தனம் தோன்றி புலக்காட்சி புலப்படிமமாகி படைப்பாக வடிவெடுக்கும். எனக்குக் கவிதை என்பது உள்ளுணர்வு சம்பந்தப்பட்டது. ஓவியம் திறமை சம்பந்தப்பட்டது. ஓவியத்தை நான் முறையாய்ப் படிச்சிருக்கிறன். அதைப் படிச்சதுக்கேற்ப கோட்பாட்டு ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் அணுகமுடியும். ஆனா கவிதை அப்படி இல்லை. அது ஒரு தியானம். ஒரு ஏகாந்த வெளிக்குள்ளை சஞ்சரிக்கிற உணர்வு தோன்றும். முதலில் ஒரு சொல் வரும். பிறகு பந்தியாகும். இப்படியாக வளர்ந்துகொண்டு போகும். ஓவியம் வரைந்துகொண்டு போகும்போதுதான் உள்ளுணர்வு உந்தப்படும். தியானத்தின் நீட்சியாகவே கவிதையும் ஓவியமும் இருக்குதென்பது என்ரை நம்பிக்கை. நவீன ஓவியம் மரபார்ந்த ஓவியம் எண்ட உரையாடல்முறை முடிஞ்சுபோச்சு. அதை இப்பயும் கதைச்சுக்கொண்டிருக்கிறது, ஆரோக்கியமா இருக்காது. ஒரு காலம் வரும்போது அதுக்கான பாடுபொருளும் இசமும் வரும். ஆக இது ஒரு காலத்தின்ரை தேடல்.

நவீன ஓவியம் எண்டது முடிஞ்சு போச்சுது. இப்ப சமகால ஓவியம் எண்ட சொற் பதம்தான் இருக்குது. சமகாலம் தான் வெளிப்பாட்டுமுறையா இருக்குது. ஒருவருக்கு இந்த ஓவியங்கள் புரியவில்லையெண்டால் இவர் இதுக்கு நெருக்கமாகவில்லை எண்டுதான் சொல்லலாம். சில ஓவியங்களைப் புரிந்துகொள்ள பிரதேசம் சார்ந்த அறிவும் இருக்க வேணும்.





இங்கை ஓவியங்களின் பார்வை விரி வடையாததுக்கு போரும் ஒரு கார ணம் எண்டு சொல்லலாம். ஓவியக் கண்காட்சிகளோ அதுக்கான முன் னெடுப்புக்களோ இங்கை நடைபெற இல்லை. இவைகள் தொடர்ந்து நடைபெறும்போது அது எல்லாருக் கும் பரிச்சயப்படும். அதுபற்றிய அறிவு விரிவடையும். பிறகு அதுக்கான தேடல்களும் ஆரம்பிக்கும். இப்ப பல்கலைக்கழகத்திலை அதை ஒரு பாடமாகக்கொண்டுவந்து அது வெற்றி யடைஞ்சிருக்கு. ஆனாலும் நிறையப் பேர் இதைப் பட்டம் பெறுவதற்காகத் தான் தெரிவுசெய்து படிக்கினமே தவிர, சுயவிருப்போட, அதிலை முழு ஈடுபாட்டோட படிக்கிறதில்லை. ஏனென்டா இதில ஒரு தொழில் கவர்ச்சி இல்லை என்பதுதான் கார ணம். இங்கையும் ஓவியத்துறை யில் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய வெற் றியடைஞ்ச முன்மாதிரிகள் எவரு மில்லை. ஆக இதுக்காக யாராவது சாதிச்சு நிரூபிச்சுக்காட்ட வேண்டிய தேவை இருக்கு. மக்கள் ஈர்ப்புமிக்க ஓவியர் எவரும் இங்கே இல்லை. முதலிலை ஓவியத்துக்கும் மக்களுக்கு மான நெருக்கத்தைக் கொண்டுவர வேணும். அது தான் ஆரம்பநகர்வாய் இருக்கும். ஒரு வருசத்துக்கு ரெண்டு கண்காட்சியாவது செய்யவேணும். சமூகம் அதுக்கான ஆதரவை வழங்க வேணும் - எனத் தெரிவித்தார்.

படைப்பு மனநிலை எப்பவரும், எந்தக் கணத்தில வரும் என்று சொல்ல ஏலாது. திடீரெண்டு பற்றிவிட்டுப் போய் விடும். படைப்பாளி அதுக்கான மனநிலை யோட இருக்க வேணும். அப்பிடி இருந்தா அது உடனே தொற்றிக் கொண்டு விடும். கற்பூரம் போல ஒரு படைப்பாளி இருக்க வேணும். உள்ளுக்குள்ள படைப்பு எத்தனம் தோன்றி புலக்காட்சி புலப்படிமமாகி படைப்பாக வடிவெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பண்ணும் பரதமும்"



லண்டனில் இடம்பெற்ற கலைநிகழ்வு பற்றி ஒரு கண்ணோட்டம்

இசையினூடாக இறையுணர்வையும் கலையுணர்வையும் ஒருசேர உணர்ந்து அனுபவிக்க அருமையானதொரு வாய்ப்பு லண்டன் கலாரசிகர்களுக்குக் கிடைத்தது. 15 வருடங்களாக மிகத் தரமான நிகழ்வுகளைத் தொடர்ந்து அளித்துவரும் இரத்தினம் அமைப்பு- 'பண்ணும் பரதமும்' என்ற பெயரில் புதுமையான நிகழ்வொன்றை அண்மையில் லண்டன் வின்ஸ்ரன் சேர்ச்சில் கலை யரங்கில் ஒழுங்கு செய்திருந்தது.

லண்டனில் மிக நீண்ட காலமாகப் பல சமூக நலப் பணிகளில் பங்கு கொண்டு செயற்படுபவரான கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் தலைமையில் இயங்கும் 'இரத்தினம் அறக்கட்டளை', வழமை போலவே தாயகத்தில் மிகப் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களின் கல்வி, சுகாதாரம், சமூக மேம்பாடு உட்படப் பல்துறை சார்ந்த சமூக நலப் பணிகளுக்கு நிதி உதவியளிக்கும் நோக் குடனேயே இந்த நிகழ்ச்சியையும் ஒழுங்கு செய்திருந்தது.

தெய்வீகக் கலைகளான இசை, பரதம் ஆகிய கலைகளைப் பயிற்றுவிப்பதன் மூலம் அந்தக் கலைகளை மிகச் சிறப்பாக வளர்த்து வரும் நா.நாகராசா, திருமதி சகாதேவன் சிவதாரணி , திருமதி விஜயகுமாரி ஐங்கரன், திருமதி பிரேமலதா நிரஞ்சன், திருமதி பிரசாந்தி உதயபாபு, கௌசல்யா சத்தியலிங்கம் ஆகிய பிரபலம் பெற்ற ஆசிரியர்களின் கூட்டுத் தயாரிப்பில் அவர்களின் மாணவர்களே அந்த மதுரக் கலைகளை வழங்கி மகிழ்வித்தனர்.

தமிழ் மக்களின் சமய பண்பாட்டு மரபுக்கமைய கணேச வந்தனத்துடனும், ஆடற் கலைக்கு அதிபதியான ஆடல் வல்லானுக்கான கம்பீர நாட்டை ராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்த புஸ்பாஞ்சலியுடன் ஆரம்பித்த நிகழ்வு சங்கீத வித்துவான் சிவதாரணி சகாதேவனின் கூட்டிசையுடன் களை கட்டத் தொடங்கியது. மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல், கடம், மோர்சிங், தபேலா, ஆகிய அனைத்து இசைக் கருவிகளையும் ஒருசேர மிக அலங்காரமாக ஓரொழுங்கில் அமர்ந்து இசைத்ததன் மூலம் உண்மையில் இனம் புரியாதொரு இன்ப உலகத்துக்கு இரசிகர்களை அழைத்துச் சென்று விட்டது மட்டுமல்ல, வகை வகையான இசைக் கருவிகளைச் சீராக இயக்கப் பயிற்றுவித்த ஆசிரியரின் திறனும் பார்வையாளர்களை வியக்க வைத்தது. நிகழ்வில் அடுத் தடுத்து அலாரிப்பு, விநாயகர் துதி, முரளீதர கௌத்துவம், கிருஷ்ண நடனம் ஆகிய உருப்படிகளைச் சமர்ப்பித்த போது அவை சபையோரின் உற்சாகமான வரவேற்பைப் பெற்றமையை அவதானிக்க முடிந்தது.

இவற்றில் அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் மீது அளவையூர் ஸ்ரீ விஸ்வ பிரசன்ன என்பவரால் பாடப்பட்ட விநாயகர் துதிக்கான நடனம் பக்தி உணர்வை வெளிப்படுத்துவதில் மேலோங்கிக் காணப்பட்டது. ஆசிரியர் நாகராசாவின் மாணவி அச்சுதா தயாபரனின் வயலின் இசை, வயதில் மிக இளமையாக இருந்தும் பல மேடைகள் கண்ட முதிர்ச்சி பெற்ற கலைஞர்போல் மேடைக் கூச்சமோ எந்தவித பதற்றமோ இன்றி மிகச் சிறப்பாக வாசித்துச் சபையினரை வெகுவாகக் கவர்ந்து விட்டார். அடுத்து இடம்பெற்ற 'குயிலே, குமரன் வரக் கூவுவாய்; உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்' என்ற பாடலுக்கான பதம், பாடலின் ஓசைக்கு ஏற்ப நடனமும் ஒத்திசைந்து அமைந்து சபையினரைப் பரவசமடையச் செய்துவிட்டது. தொடர்ந்து கௌசல்யா சத்தியலிங்கத்தின் தயாரிப்பான 27 மாணவர்கள் பங்கு கொண்ட வயலின் இசை மிக நேர்த்தியாக அமைந்து, பலர் பங்கு கொண்டும் ஒரே சீராகப் பயிற்றுவித்த ஆசிரியையின் திறனையும் வெளிக்காட்டியது. இறுதியாக மோகன ராகத்திலும் இந்தோள ராகத்திலும் இடம்பெற்ற பிரேமலதா நிரஞ்சனின் தயாரிப்பான தில்லானா இரு உருப்படிகளும் நிகழ்வுகளில் மகுடம் போலமைந்தது என்பதைப் பார்வையாளர்களின் உற்சாகமான கரகோசம் எடுத்துக் காட்டியது. மொத்தத்தில் அன்றைய அரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து உருப்படிகளுமே மிகச் சிறப்பாக அமைந்து பங்கு கொண்ட கலைஞர்களின் சீரான தேர்ச்சியையும் அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களின் அபாரமான கடின உழைப்பையும் மிகத் துலாம்பரமாகவே வெளிப்படுத்திய நிகழ்வுகளாகவே காணப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாகப் பாரத வித்தியாபவன், பிரபல மிருதங்க ஆசிரியர் கலாவித்தகர் பாலச் சந்தரின் மிருதங்கம், ஆசிரியர் நா.நாகராசாவின் வயலின், மருத்துவர் இரா சனின் கெஞ்சிரா ஆகிய பக்க வாத்தியங்கள் ஒத்தமைந்து, நிகழ்வின் தரத்தை வெகுவாக உயர்த்தி, ஏறக்குறைய மூன்று மணித்தியாலத்துக்கு மேலான நேரம் எவ்வாறு கழிந்ததோ என்று வியப்புறுமளவுக்கு இரசிகர்களை நிகழ் வுகளுடன் ஒன்றிக்க வைத்து விட்டன என்றே கூறலாம்.

இறுதியாக நன்றியுரை நிகழ்த்திய இரத்தினம் அறக் கட்டளையின் இயக்குநர், இரத்தினம் நித்தியானந்தன், அன்னை திரேசாவின் கூற்றுக்கமையக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் மிகமிகப் பின்தங்கிய நிலையில் வாழும் எமது தாய்நாட்டு மக்களை இனங்கண்டு, குறிப்பாக நாட்டின் வருங் காலச் செல்வங்களான இன்றைய இளைஞர்களை இலக் காகக் கொண்டு, அவர்களின் மேம்பாட்டுக்கு எமது அமைப்பின் ஊடாகச் சில பணிகளைத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில்

வட்டு.இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் பரிசில் நாள் புத்தகக் கொள்வனவுக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஜீ.சி.ஈ சாதாரண தரம், மற்றும் உயர்தரம் ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள், போரினால் பாதிக் கப்பட்ட முல்லைத் தீவு மாவட்ட ஜீ.சி.ஈ சாதாரண, உயர்தர வகுப்புக் களைச்சேர்ந்தமாணவர்கள் ஆகியோரின் பரீட்சைப் பெறுபேற்றை உயர்த்தும் வகையிலான கல்விக் கருத்தரங்குகள் கொழும்பு பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் ஊடாக 'அன்னை இல்லம்' உப்புக் குளம், மன்னாரைச் சேர்ந்த 70 மாண வர்களின் கல்வித் தரத்தை மேம்படுத் தவென செயல் நூல்கள் கொள்வனவு. திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு தலைமைத்துவப் பயிற்சியும் கணினிப் பயிற்சியும் வழங்கல், தற்கால உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத நவீன விஞ்ஞானமான கணினி அறிவில் மிகப் பின்தங் கிய நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளை இனங் கண்டு அவர்களுக்குக் கணினிக் கல்வியைப் போதிக் கும் திட்டத்தின் கீழ் கோண்டாவில், கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 110 வரையான மாணவர்களுக்கு அந்தக் கல்வியைப் போதித்தல். ஜீ.சி.ஈ சாதாரண தரம், உயர் தரம் ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டிகள், கிடைத்தற்கரியனவும் தொன்மை வாய்ந்தனவுமான அரிய நூல்களை அழிய விடாது நிரந்தரமாகப் பதிவாக்கும் நோக்குடன் அவற்றைக் கணினியில் பதிவாக்குதல் எனப் பல்வேறு கல்வி நடவடிக்கைகளுக்கு இரத்தினம் அறக்கட்டளைதொடர்ச்சியாக நிதி உதவியளித்து வருகின்றது.

(24ஆம் பக்கம் பார்க்க...)



> "லண்டனில் மிக நீண்ட காலமாகப் பல சமூக நலப் பணி களில் பங்கு கொண்டு செயற்படு பவரான கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் தலைமையில் இயங்கும் 'இரத்தினம் அறக்கட் டளை' வழமை போலவே தாயகத்தில் மிகப் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களின் கல்வி, சுகாதாரம், சமூக மேம்பாடு உட்படப் பல் துறை சார்ந்த சமூக நலப் பணிகளுக்கு நிதி உதவி யளிக்கும் நோக்குட னேயே இந்த நிகழ்ச் சியும் ஒழுங்கு செய்யப் பட் டிருந்தது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிளிநொச்சியில் முழு நிலாக் கலைவிழா






வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில், முழுநிலாக் கலைவிழா சிறப்பாக நடைபெற்றது. மு.ப 9.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் முன்னதாக விருந்தினர்கள் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகளின் இனிய இசையுடன் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொண்டார். மேலும், விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப.அரியரட்ணம், முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலைத்தொடர்ந்து வரவேற்புரையை கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.அபிராமி நிகழ்த்தினார்.

கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம், குழு இசை, நடனம், கிராமிய நடனம்,நாடகம் எனப் பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கவிதை நூல் வெளியீடு





அண்மையில் கவிதாயினி சுபாவின் 'கவித் தூறல்கள்' கவிதை நூல் வெளியீடு மானிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு, செல்லமுத்து வெளியீட்டக இயக்குநரும், கனடா படைப்பாளிகள் உலக ஈழத்தேச ஒருங்கிணைப்பாளருமான யோ.புரட்சி தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி, பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து சிறப்பித்தார்.

சுடர்கள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து இறை வணக்கப் பிரார்த்தனையை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி மிதுர்சனா வழங்கினார். வரவேற்புரையை சிறீரங்க நாயகி வழங்கினார். கவிதை நூலை யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி வெளியிட்டு வைக்க, முதற் பிரதியைப் பண்டத்தரிப்பு கிராமிய வங்கியின் வங்கிச் சேவை முகாமையாளர் தெய்வேந்திரம் பெற்றுக்கொண்டார்.


நூலின் வெளியீட்டுரையை கவிஞரும், இலக்கிய விமர்சகருமான வரணியூரான் நிகழ்த்தினார். ஏற்றுரைகளைச் சங்கானை சைவப் பிரகாச வித்தியாசாலை ஆசிரியை அனுஷா ஈஸ்வரன், பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை பிரதி அதிபர் இராஜலட்சுமி இராஜசேகர் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையைப் பேராசிரியர் தி.வேல்நம்பி நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் சுபா வழங்கினார். விருந் தினர்களுக்கு நூலாசிரியரால் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

நூலின் பின் அட்டைக் குறிப்பைக் கனடாவில் வசிக்கும் கவிஞர் மாதகலான்(சபா அருள்சுப்பிரமணியம்) வழங்கியிருந்தார். வாழ்த்துரைகளை ஜேர்மன் வெற்றிமணி பிரதம ஆசிரியர் சு.சிவகுமாரனும், ஓய்வுநிலை பிரதி அதிபர் பாலஜெயந்தி விஜயகாந்தனும், திருமதி சௌடினியும் வழங்கியுள்ளனர்.நூலின் வடிவமைப்பை நேசகாந்தன் ஆக்கியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உடல் பற்றிய பொது அறிவு



- மனிதனின் சராசரி நாடித்துடிப்பு- நிமிடத்துக்கு 72 தடவைகள்
- சராசரி வெப்பநிலை- 98.4 O.F, $36.8^{\circ}C$
- மிக நீண்ட எலும்பு- தொடை எலும்பு
- மிக சிறிய எலும்பு- காதில் உள்ள எலும்பு
- எலும்புகள் அதிகம் உள்ள பகுதி- கைகள்
- எலும்புகளின் மொத்த எண்ணிக்கை- 206
- விலா எலும்புகளின் எண்ணிக்கை- 24
- மிக வன்மையான பகுதி- பல் எனாமல்
- மிகப் பெரிய உறுப்பு- கல்லீரல்
- மிகச் சிறிய சுரப்பி- தைரொய்ட்
- மிகப் பெரிய சுரப்பி- ஈரல்
- மிகப் பெரிய அங்கம்- தோல்
- உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி- நகம், மயிர்
- முதலில் இறக்கும் பகுதி- மூளையின் கலங்கள்
- குருதி வகைகள்- A. B. AB .O
- மிக வலிமையான தசைப் பகுதி- நாக்கு
- மூட்டுக்களின் எண்ணிக்கை- 230
- முதலில் உறங்கும் உறுப்பு- கண்கள்
- மென்மையான உறுப்பு- மூளை
- உடலில் வியர்க்காத பகுதி- உதடு
- உணர்வு அதிகமுள்ள கைவிரல்- சுட்டு விரல்
- ஒரு தடவை இதயம் துடிக்க எடுக்கும் நேரம்- 0.8 வினாடி
- தலை முடியின் உண்மையான நிறம்- வெள்ளை (மெலனின் எனும் பொருள் சேர்வதால் கறுப்பாகின்றது.)

# குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும்



மன்னர் கிருஷ்ண தேவராயர் எப்போதும் தனிக் குளியல் அறையில்தான் நீராடுவார். அந்த அறையில் வேறு எவரும் நீராடச் செல்லுவதில்லை.

ஒருநாள் நீராடி முடித்த மன்னர் பூசை முடித்து, காலை உணவு உண்ட பின்னர் அரச சபைக்குச் சென்றபோதுதான். தன் விரலில் அணிந்திருந்த நவரத்தின மோதிரத்தைக் காணவில்லை என்பதை உணர்ந்தார்.

அவர், தாம் அணியும் அணிகலன்களை இரவில் கழற்றி வைப்பார். அப்போதுகூட நவரத்தின மோதிரத்தைக் கழற்றுவதில்லை. அன்று நீராடும் அறையில் கழற்றி வைத்தது நினைவுக்கு வந்தது. உடனே அங்கு சென்றுபார்த்து வரும்படி மகாராணியை அனுப்பினார். அங்கு மோதிரம் அகப்படவில்லை. எவரோ எடுத்து விட்டிருந்தனர். அந்தப் பகுதியில் காலை முதல் மாறிமாறிக் காவலிலிருந்த காவலாளிகளை அழைத்து விசாரித்தார். எவரும் எடுக்கவில்லை என்றனர். அரசர் காவலாளிகளில் எவரோ ஒருவர் தான் அதை எடுத்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்தார். அவர்களிடம் உண்மையை எப்படி வரவழைப்பது? பலஆண்டுகள்பணியாற்றும்பலநல்லவர்களும்உள்ளனர். அந்தப்புரத்தில்காவல்காக்கும்பன்னிரண்டுகாவலாளிகளில்எவனோ ஒரு துரோகி இருக்கிறான். அவனைக் கண்டுபிடிப்பது எப்படி? வேறொரு மோதிரம் செய்து கொள்ளுவது என்பது மன்னருக்கு முடியாத காரியமல்ல! ஆனால், இப்படி ஒரு திருட்டைச் செய்த சாமர்த்தியசாலித் துரோகி யார்? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமே! மந்திரிகளை வரவழைத்து ஆலோசனை கேட்டார் மன்னர். மந்திரிகள் பன்னிரண்டு காவலாளிகளையும் சித்திரவதைச் செய்தால் உண்மைவெளிவந்து விடும் எனக் கூறினார்கள்.

ஒரு குற்றவாளிக்காக மற்றவர்கள் தண்டனை பெறுவதை மன்னர் விரும்பவில்லை. தெனாலிராமனை அழைத்து "உன் திறமையால் மோதிரத்தைத் திருடியவனைக் கண்டு பிடித்தால் உனக்கு அந்த மோதிரத்தையே பரிசாகத் தந்து விடுகிறேன். எனக்குத் தேவை மோதிரமல்ல மோதிரத்தைத் திருடியவன் தான்" என்றார். தெனாலிராமன் சற்று நேரம் சிந்தித்துவிட்டு இன்று மாலை கண்டு பிடித்து விடுகிறேன் – என்றான்.

அன்று மாலை அரண்மனை தனி அறையில் காளி தேவியின் சிலை வைக்கப்பட்டது. ஏக அமர்க் களமாக பூசைகள் செய்யப்பட்டன. பன்னிரண்டு காவலாளிகளையும் வரிசையாக நிற்க வைத்து "ஒவ்வொருவராக அறைக்குள் செல்லவேண்டும். காளிதேவியின்சிலை யின் காலடியில் வலது கரத்தை வைத்து நான் சத்தியமாக மோதிரத்தை எடுக்கவில்லை என்று கூறி விட்டு அடுத்த வாசல் வழியாக வெளி வர வேண்டும் எனக் கூறப்பட்டது.

காளிதேவி பிறகு கனவில் வந்து எனக்குக் குற்றவாளி எவரெனச் சொல்லிவிடுவாள்" எனவும் தென்னாலிராமன் கூறினான். காவலாளிகள் உள்ளே சென்று விட்டு வெளியே வரும் வாசலில் தெனாலிராமன் நின்றான்.

தெனாலிராமன் உள்ளிருந்து வரும் காவலாளிகள் ஒவ்வொருவரதும் வலதுகரத்தை முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். ஆறு காவலாளிகள் உள்ளே சென்று வெளியே வந்து விட்டனர். ஏழாவது காவலாளி வெளியில் வந்ததும் தெனாலிராமன் அவனது வலக்கையை முகர்ந்து பார்த்தான். சட்டென அவன் கையைப் பிடித்து "அரசே! இவன்தான் மோதிரத்தைத் திருடியவன்" என்றான். மற்றக் காவலர்கள் அவனைப் பிடித்துக்கொண்டனர். "காளிதேவி கனவில் வந்து சொல்லுவாள் என்றாய். இப்போது கையை முகர்ந்து பார்த்து விட்டுத் திருடன் என்கிறாயே?" என்று மன்னர் தெனாலிராமனிடம் கேட்டார்.

"காளிதேவியின் பாதத்தில் உயர்ரக நறுமணம் மிக்க வாசனைத் திரவியம் பூசி வைக்கப்பட்டுள்ளது. திருட்டில் ஈடுபடாதவன் துணிச்சலாகப் பாதத்தில் கைவைத்துச் சத்தியம் செய்வான். திருடியவன் நிச்சயமாகத் தொடமாட்டான். இது மனோதத்துவம். ஆறுபேர் காளிதேவியின் பாதத்தைத் தொட்டதால் அவர்கள் கையில் நறுமண வாசனை வந்தது "குற்ற வாளி யான இவன் பயந்து கொண்டு பாதத்தைத் தொடாமலேயே வந்துவிட்டான்" என்றான் தெனாலிராமன்.

"இவனைக் கொண்டு சென்று சிறையில் அடையுங்கள் மோதிரத்தைத் தரும்வரை சித்திரவதையை நிறுத்தாதீர்கள்" என்றார் மன்னர். நடுங்கிப் போன காவலன் கதறி அழுதபடி "நான்தான் மோதிரத்தை எடுத்தேன். வெளிவாசல்படி அருகே மண்ணில் புதைத்து வைத்துள்ளேன். இதுநாள்வரை உண்மை ஊழியனாக உழைத்த நான் இன்றுஒரு நிமிடம் சிந்திக்காமல் ஏற்பட்ட நிலையற்ற உள்ளத்தினால் திருடி விட்டேன்"என்று கதறினான். அவன் கூறியபடி மோதிரம் கிடைத்தது. அவனுக்கு இரக்கம் காட்டிய அரசர் சிறிது பொற்காசுகளை அவனுக்குக் கொடுத்து அவனை நாடு கடத்த உத்தரவிட்டார். தெனாலிராமனுக்கு நவரத்தின மோதிரத்தையும் ஆயிரம் பொற் காசுகளையும்பரிசுகக்கொடுத்தார் மன்னர்.



## வரலாற்றில் இன்றைய தினம்

1386 – நேபாளம் மற்றும் ஹங்கேரி அரசன் மூன்றாம் சார்ள்ஸ், புடாவில் படுகொலை செய்யப்பட்டார்.

1525 – ஸ்பானிஷ் ஏகாதிபத்திய படை, பிரெஞ்ச் படையை பவியாப் போரில் தோற்கடித்தது.

1739 – ஈரானிய ஆட்சியாளர் நாடர் ஷாவின் படைகள் இந்திய முகாலய பேரரசர் முகமட் ஷாவின் படைகளைத் தோற்கடித்தன.

1826 – அங்லோ - பர்மியப் போர் யண்டபோ ஒப்பந்தத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

1875 – ஆஸ்திரேலிய கிழக்கு கரைக்கு அப்பால் நீருக்கடியிலான பாறையில் போர்க் கப்பல் மோதி அமிழ்ந்ததில் உயர் நிர்வாக அதிகாரிகள் உட்பட 100 பேர் வரை சாவு

1881 – எஸ்.எஸ். ஹெறாதன் போர்க் கப்பல் இலி ஒப்பந்தத்தில் சீனாவும், ரஷ்யாவும் ஒப்பமிட்டன.

1945 – எகிப்திய பிரதமர் அஹமட் மாஹிர் பாஷா நாடாளுமன்றில் ஒரு சட்டவரைவைக் கொண்டு வந்த நிலையில் கொல்லப்பட்டார்.

1976 –கியூபாவின் தேசிய யாப்பு அறிவிக்கப்பட்டது.

1983 – அமெரிக்க காங்கிரஸின் விசேட ஆணைக்குழு இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போதான ஜப்பானியரின் சிறைப் பிடிப்புகளைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டது.

1989 – சாத்தானின் வேதம் என்ற நூலை எழுதிய சல்மான் ருஷ்டியை கொல்பவர்களுக்கு 3 மில்லியன் பரிசுத் தொகையை ஆயதுல்லா கொமெய்னி அறிவித்தார்.

2008 – ஏறத்தாழ 50 ஆண்டுகளாக கியூபாவின் ஜனாதிபதியாக இருந்த பிடல் காஸ்ரோ பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

2014 – உலகின் மூத்த மனிதர், ஒலிஸ் ஹேடஸ் சோமார் தனது 110 ஆவது வயதில் லண்டனில் சாவடைந்தார்.

1992 – மகாமகத் திருவிழா இடர் காரணமாக தனது 44 ஆவது பிறந்த தினத்தை ஜெயலலிதா கொண்டாடவில்லை.



## எண் பாட்டு

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஊதிப் பறக்கும் வண்டு

இரண்டும் ஒன்றும் மூன்று
எங்கள் விரலைப் போன்று

மூன்றும் ஒன்றும் நாலு
முன்னே செல்வான் வேலு

நாலும் ஒன்று ஐந்து
நாம் அடிப்போம் பந்து

ஐந்தும் ஒன்றும் ஆறு
அம்மா தருவாள் சோறு


ஆறும் ஒன்றும் ஏழு
ஆச்சி குடிப்பாள் கூழு

ஏழும் ஒன்றும் எட்டு
எனது சட்டை பட்டு

எட்டும் ஒன்று ஒன்பது
எண்ணத் தெரியும் ஐம்பது

ஒன்பதும் ஒன்றும் பத்து
ஓடிப் போகிறாள் முத்து.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியின் பரத அரங்கேற்றம்











யாழ். ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தில் பரதகலாவித்தகர் பாலினி கண்ணதாசனிடம் பரதம் பயின்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி தர்ஷனா அனுஷனின் பரத நாட்டிய அரங்கேற்றம், கடந்த 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலைப் பிரதி முதல்வர், கொக்குவில் கலாபவன அதிபர், கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் பிரதம விருந்தினராகவும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் துஷ்யந்தி துஷிதரன், உரும்பிராய் கலைக்கோவில் நாட்டியப் பள்ளி அதிபர் பத்மினி செல்வேந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை முன்னாள் விரிவுரையாளர் மா. சிதம்பரநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

அரங்கேற்ற நிகழ்வின் அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் - பரதகலாவித்தகர் பாலினி கண்ணதாசன், பாட்டு யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட், மிருதங்கம் - யாழ். பல்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர் க. கண்ணதாஸ், வயலின் இசைஞானசுரபி அ.ஜெயராமன் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ். புங்கன்குளத்தில் அமைந்துள்ள ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம், ஆசிரியை பாலினி கண்ணதாஸ், விரிவுரையாளர் கணேசசுந்தரம் கண்ணதாஸ் ஆகியோரால் நடத்தப்படுகின்றது. பாலினி மூத்த இசைக்கலைஞரான சங்கீதபூஷணம் ச. பாலசிங்கத்தின் புதல்வி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரங்கேற்றம் கண்ட செல்வி தர்ஷனா யாழ். ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அனுஷன் - சுராஜினி தம்பதியரின் ஏகபுதல்வி.

இந்த அரங்கேற்றம் பாலினியின் நட்டு வாங்கத்தில் யாழ். மண்ணில் இடம்பெற்ற முதலாவது அரங்கேற்றம் ஆகும்.

## நாடக நூல்கள் வெளியீடு







கலை இலக்கியப்பேரவையின் ஏற்பாட்டில் ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் கிணற்றங்கரை, மயிலிறகு என்ற இரண்டு நாடக நூல்களது வெளியீடு, கலை இலக்கியப்பேரவையின் கவி ஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 4.மணிக்கு சட்டத்தரணி தேவராஜா தலைமையில் இடம்பெற்றது. முதற்பிரதியை நூலாசிரியர் ஸ்ரீலேகா பேரின்பகுமார் வெளியிட, குழந்தை மசண்முகலிங்கம் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் நாடகத்துறை, இலக்கியத்துறையைச் சேர்ந்தவர்களும் மற்றும்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## தவக்காலத் தியானம்




எனக்குப் பலமுண்டு, பலவீனமும் உண்டு. என்னில் நன்மை உண்டு, தீமையும் உண்டு. எல்லையில்லா இருளில் மூழ்கி இருக்கின்றேன். நான் தவறுகளால் நிறைந்திருக்கின்றேன் தவறுகளுக்காகத் தண்டிக்கப்படுவேன் என்று எனக்குத் தெரியும். ஆனாலும், தொடர்ந்து தவறு செய்கின்றேன்.

மிகத் தந்திரமாக எனது தவறுகளை மட்டும் மறைத்துக் கொள்கிறேன்.

நான் ஆற்றும் நன்மைகளை உலகுக்கு உரத்து அறிவிக்கின்றேன். நான் செய்யும் மாபெரும் தவறுகளை என்னுள் மறைத்து விடுகிறேன். பிறர்முன் நல்லவனாய் நடிப்பதில் ஆனந்தம் கொள்கிறேன்.சாத்தான்கள் என்னைச்சுற்றி வட்டமடித்துக் கொண்டிருக்கின்றன. அலைக்கழித்து என்னை அடிமையாக்குகின்றன. மண்ணோடு என்னை இணைத்துவிட்டன. வேதனையும், வலியும் என்னைப் பிணைத்துக் கொண்டன. தினம் தினம் விழுகின்றேன்... அழுகின்றேன்... அலைக்கழிக்கப்படுகின்றேன்... நான் ஓர் எளிய ஏழை, ஏதுவும் எனக்குத் தெரியாது, வாய்ப்புக்கள், வசதிகள்எனக்கு இல்லை. என் எதிர்காலம் குறித்து நான் திட்டமிடவில்லை. பெரும் பாறையின்கீழ்க் கிடக்கும் சிறுகல் போல நானிருந்தேன். கைநீட்டி என்னைத் தூக்கி விட்டீர். மார்போடு அணைத்துக் கொண்டீர். வறுமையை அழித்து வழமையைக் கொணர்ந்தீர். அனைத்தையும் அள்ளித் தந்தது உன்பாசம்.

ஆயிரம் ஆயிரம் தடைகளில் இருந்து என்னைக்காப்பாற்றி இருக்கின்றீர். பொல்லாதவரின்பார்வையில் இருந்தும் அரக்கர்களின் அடக்கு முறையில்இருந்தும் விடுதலை தந்திருக்கின்றீர். உமது பார்வையில் நான் விலைமதிப்பில்லாமல் போகவில்லை. நான் இருப்பதும் இயங்குவதும் உம்மாலே தான்.... நான் வளர்வதும் வாழ்வதும் உம்மாலேதான். இத்தனைக்கும் மனமாற்றமே நன்றியின் அடையாளமாகும்.

## திருகோணமலையில் 'பாடசாலை உளவியல்' நூல் வெளியீடு




ஆசிரியர் அ.வா. முஹ்சீன் எழுதியுள்ள 'பாடசாலை உளவியல்' என்ற நூல் எதிர்வரும்28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு, 'நீங்களும் எழுதலாம்' ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில், திருகோணமலை, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சி. தண்டாயுதபாணி கலந்து கொள்கின்றார். கௌரவ விருந்தினர்களாக கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான ஜே. முகம்மது லாஹிர், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் என். விஜேந்திரன், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் அதிபர் அருட் தந்தை எஸ்.ஏ. பொன்சியன், திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் எஸ். பத்மசீலன், திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி அதிபர் திருமதி யூ. ஜோதிநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுகத்தை எஸ்.ஆர். தனபாலசிங்கமும், நூல் மதிப்பீட்டை அருட் தந்தை எஸ்.ஏ. பொன்சியனும் மேற்கொள்ளவுள்ளனர். முதற் பிரதியை கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான ஜனாப். ஜே. முகம்மது லாஹீர் பெற்றுக் கொள்ளவுள்ளார். விருந்தினர்களின் உரைகளின் பின்னர், நூலாசிரியர் ஏற்புரையை நிகழ்த்த நன்றியுரையை திருமதி. உ. பிரதீபா நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட, இலக்கிய ஆர்வலர்கள் பலரும், பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நூல் வெளியீடும் ஓராண்டு நிறைவு விழாவும்





மலையகத்தின் மீரியப்பெத்தை மண்சரிவின் தாக்கமும் அதன் எதிரொலியும் என்ற பொருளில் அமைந்த நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. ஆச்சிரம சுவாமி செ. மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க. நந்தகுமாரன், பருத்தித்துறை பிரதேச செயலர் த. ஜெயசீலன், கிளிநொச்சி ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீநிவாசன், யாழ். மக்கள் வங்கி ஓய்வு நிலை பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக பதுளை மலையக சிறுவர் இல்லக் காப்பாளர் ரெ.ம.கிருஸ்ணசாமி, ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றியத் தலைவர் கா. யோகேஸ்வரன், பண்டாரவளை இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் க. இராஜேந்திரம், கண்டி இந்து சுயம் சேவா சங்க உறுப்பினர் ந.லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை சைவமகா சபையின் செயலாளர் மருத்துவர் ப.நந்தகுமாரும், நூலின் வெளியீட்டுரையை சைவப்புலவர் நித்தியதசீதரனும், மதிப் பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் ச.லலீசனும் ஆற்றினர். ஆசியுரைகளை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வல்வை முத்துமாரி அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ தண்டபாணி தேசிகர், கந்தர்மடம் சிவகுருநாதபீட முதல் வர் சிவத்திரு வித்தியாசாகர சுவாமிகள் ஆகியோரும், நன்றியுரையைச் சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத் தலைவர் இ.கலியுகவரதன் சுவாமிகளும் ஆற்றினர்.

மலையகத்துக்கும் வடக்குக்கும் இடையேயான ஆன்மிகப் பாலத்தைக் கட்டியெழுப்பும் வகையிலும் கல்வியை வளம்படுத்தும் வகையிலும், சந்நிதியான் ஆச்சிரமத்துடன் அகில இலங்கை சைவ மாக சபை, வவுனியா சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் ஆகிய அமைப்புக்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. இந்தப் பணியில் மேற்படி நிறுவனங்கள் மலையக மக்களுக்கு கல்வி, மருத்துவம், யோகாசனம், அறநெறி மேம்பாடு, ஆன்மிக மேம்பாடு போன்றவற்றிலும் தமது பங்களிப்பை செய்து வருகின்றன. இதன் ஒரு கட்டமாக பதுளை மாவட்டத்தில் உயர் தரத்தில் விஞ்ஞானத்துறையில் படிப்பதற்கு வாய்ப்பில்லாத 13 மாணவர்கள், சைவமகா சபையினரால் அழைத்து வரப்பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கல்விச் செலவுகளை சைவமகா சபையும், உணவுச் செலவுகளை சந்நிதியான் ஆச்சிரமும் மேற்கொள்கின்றன.

இவற்றை வெளிக்கொணர்வதோடு, சந்நிதியான் ஆச்சிரம சுவாமி செ.மோகனதாஸ் தலைமையிலான குழு மலையகத்தில் மேற்கொண்ட பதினான்கு பயணங்களிலும் பெற்ற அனுபவங்களை ஆவணப் படுத்திப் பகிரும் நோக்குடன் நூல் வெளியீடும் ஓராண்டு நிறைவு விழாவும் முன்னெடுக்கப் பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கிற்கும் மலையகத்திற்கும் இடையிலான உறவைக் கட்டியெழுப்பும் வகையில் நிகழ்வுகள் அமைந்திருந்தன. மலையக இளைஞர்கள் வழங்கிய நடன, நாடக ஆற்றுகைகள் பலரையும் கவர்ந்தன. யாழ் மண்ணின் பல் வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த நூற்றுக்கணக்கானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின்போது உரையாற்றிய மலையக அன்பர்கள், அரசியல்வாதிகளின் பிரசன்னம் இல்லாதவரையில் இந்த உறவு பலமடையும் எனவும், அரசியல் மயப்பட்டவர்களே தமது சுயலாபம் கருதி இடம்சார்ந்த பிரிவினையை ஏற்படுத்தி விடுவார்கள் எனவும் கருத்துக்கூறினர்.

> “பதுளை மாவட்டத்தில் உயர் தரத்தில் விஞ்ஞானத்துறையில் படிப்பதற்கு வாய்ப்பில்லாத 13 மாணவர்கள் சைவமகா சபையினரால் அழைத்து வரப் பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கல்விச் செலவுகளை சைவமகா சபையும் உணவுச் செலவுகளை சந்நிதியான் ஆச்சிரமும் மேற்கொள்கின்றன.”







## “பண்ணும் பாதமும்”


(20ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எல்லாவற்றுக்கும் மேலாக ஆசியாவிலேயே மிகச் சிறந்த கூட்டுறவு வைத்தியசாலை எனப் பிரசித்தி பெற்ற மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை அண்மைக்கால உள்நாட்டுப் போரால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இன்று மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த வைத்தியசாலையில் நீரிழிவு நோய் நிலையம் ஒன்றை நிறுவி அதனை இரத்தினம் அறக்கட்டளை முழுமையாகப் பொறுப் பேற்று நடத்தி வருகின்றதென்றும், மகப்பேற்று அறைகள் திருத்தம், 25 தாதியர்களுக்குப் பயிற்சி அளித்தல், கணினிகள் கொள்வனவு என மூளாய் வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு மட்டும் இன்றுவரை 12 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறினர்.

நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். மாவட்ட மாணவர்கள் மிகமிக உயர்ந்த தரத்தில் குறிப்பாகப் பல்கலைக்கழக அனுமதியில் அதிக எண்ணிக்கையான இடங்களைப் பெற்று உயர் கல்வியில் சாதனை கள் நிலைநாட்டிய நிலை மாறி, பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் களின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் மிகமிகக் குறைந்து செல்கிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்த வடமாகாணக் கல்வியமைச்சு அதற்கான சில முக்கிய காரணங்களில், தாயகத்தில் நிலவும் பெண்களுக்கெதிரான வன்முறை, துன்பியல் போன்றவற் றின் கொடூரமான தாக்கமும் அவற்றால் உருவாகும் விரக்தி யும் உளப் பாதிப்பும், ஒரு காரணம் என அடையாளப் படுத்தியுள்ளது. இத்தகைய பாதகமான நிலையைப் படிப் படியாகப் போக்கும் நோக்குடன் உளவளப் பயிற்சி அளிப் பதற்கான [illegible] மூலமாக அந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக் கப்பட்டு, அதற்கான முன்னோடி நடவடிக்கையும் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. மகளிர் விமோசனத்துக்கான அந்தத் திட்டத்துக்கு அன்றைய கலைநிகழ்வின் மூலம் சேரும் பணம் யாழ்.வேம்படி பழைய மாணவிகள் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையூடாக வழங்கப்படுமென்றும் கூறி, இளமையிலேயே நவீன கல்வி வாய்ப்பு வசதிகளின்றி அங்கலாய்க்கும் ஏழைச்சிறார்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு எங்கள் முயற்சி ஒரு துளியேனும் பயன்படுமாயின், அதுவே ‘இரத்தினம் அமைப்பின்’ வெற்றியாகுமென்ற திடசிந்தையுடன் உங்கள் ஆதரவுடன் தொடர்ந்தும் செயற்படுவோமென்றும் எமது மனித நேயப் பணிகளுக்கு பேரூக்கம் அளித்து வரும் இசை, நடன, ஆசிரியர்கள், அவர்களின் மாணவர்கள், பக்க வாத்தியம் இசைத்தவர்கள், கலா ரசிகர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி கூறித் தன் உரையை நிறைவு செய்தார். லண்டன் அவைக்காற்றுக் கழகத்தைச் சேர்ந்த ஆனந்தராணி பாலேந்திரா தமது கம்பீரமான இனிமையான குரல் வளத்தால் மிகச் சிறப்பாக நிகழ்ச் சிகளைத் தொகுத்தளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகளுக்கான தளபாடம்



குழந்தைகளின் தொட்டிலாகவும், கட்டிலாகவும் உபயோகிக்கக்கூடிய தளபாடம் அறிமுகமாகியுள்ளது. தொட்டிலாகப் பயன்படுத்திய பின்னர், இதனைக் கட்டிலாகவும் மாற்றம் செய்ய முடியும். குழந்தையில் இருந்து 6 வயது சிறுவர்கள் வரை இதனைப் பாவிக்க முடியும். இது, 8,500 ரூபாவிலிருந்து 9,300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 50 | 80 | 40 | 60 | 70 | 30 |
| கரட் | 150 | 180 | 160-200 | 160 | 100 | 240 | 120 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 80 | 80 | 120 | 60 | 80 |
| பாகல் | 80 | 80 | 80 | 80 | 100 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 60 | 50 | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 80 | 80 | 60 | 70 |
| பூசணி | 80 | 100 | 60 | 60 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 50 | 50 | 40 | 40 | 50 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 50 | 40 | 50 | 60 | 60 | 45 | 40 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 20 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 100 | 120 | 100 | 160 | 300 | 120 | 200 |
| புடோல் | 60 | 80 | 50 | 40 | 50 | 80 | 30 | 60 |
| கோவா | 70 | 70 | 60 | 80 | 60 | 120 | 70 | 60 |
| வெண்டி | 100 | 70 | 60 | 60 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 70 | 80 | 80 | 80 | 100 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 140 | 140 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 50 | 50 | 40–50 | 50 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 120 | 160 | 120 | 120 | 200 |
| இராசவள்ளி | 150 | 100 | 140 | 100 | 140 | 160 | 100 | 75 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300-500 | 350 | 400 | 300 | 400 | 500 |
| பனங்கிழங்கு | 05 | 02 | 05 | 02 | 07 | – | 02.50 | 02 |

# பீட்ரூட் வடை



### தேவையானவை:

- பீட்ரூட் – 4
- வெங்காயம் (நறுக்கியது) – 1 கப்
- துவரம் பருப்பு 200 கிராம்
- காய்ந்த மிளகாய் – 6
- சீரகம் – அரைக்கரண்டி
- உப்பு, எண்ணெய் – தேவைகேற்ப

**செய்முறை:**

துவரம் பருப்பை ஒரு மணித்தியால நேரம் ஊறவைத்து, அதனோடு காய்ந்த மிளகாய், சீரகம் ஆகியவற்றைச் சேர்த்து வடைப் பதத்துக்கு அரைத்துக் கொள்ளவும்.

பீட்ரூட்டைத்துருவிச் சட்டியில் எண்ணெய் சேர்க்காமல் லேசாக வறுத்துக் கொள்ளவும்.

இதனோடு நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து இரண்டு நிமிடங்கள் வறுத்து உப்பு மற்றும் அரைத்த விழுதைச் சேர்க்கவும்.

தேவைபட்டால் தண்ணீர் சேர்த்து சிறு உருண்டைகளாகச் செய்து வடை போலப் பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும்.

## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 500 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 600 | 800 | – |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 450 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 250 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 200 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 400 | – | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 150 | 350 |
| நகரை | 150 | 300 | – | 200 | 450 | 200 | 350 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 300 | 250 | – |
| மதனம் | 100 | 250 | 180 | 300 | 300 | 300 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 200 | 50 | – |
| பாலை | 300 | 200 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 300 | 250 |




## எரிவாயுவை மிச்சப்படுத்த...

சமைக்கும்போது வேக வைக்க குக்கரைப் பயன்படுத்துவது சிறந்தது.

பாத்திரத்தில் வேக வைத்தால் அதனைத் தட்டுப் போட்டு மூடி வேக விடுவதால் எரிபொருள் மிச்சப்படும்.

காஸ் ஸ்டவ்வில் பொதுவாகச் சிறிய பேர்னரை அதிகமாகப் பயன்படுத்தினால் எரிபொருள் செலவு குறையும்.

6 மாதத்துக்கு ஒரு முறை காஸ் ட்யூப்பைப் பரிசோதித்து மாற்றுங்கள். அதில் கசிவு இருந்தாலும் எரிபொருள் வீணாகும். ஆபத்தையும் ஏற்படுத்தும்.



## நாளை

மாசி-13
வியாழக்கிழமை 25.02.2016
திதி: திருதியை பி.இ.05.21 வரை
நட்சத்திரம்: உத்தரம் ந.ப.12.02
ராகுகாலம்: 01.59-03.29 வரை
சுபநேரம்: 07.59-09.29 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர். உறவினர் வருகையால் செலவு கூடும்.

**இடபம்:** எளிதான பணிகூட சுமை போலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சுமார். சுயகௌரவத்துக்காகப் பெண்கள் செலவு செய்வர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள், உறவினர் மத்தியில் நற்பெயர் காண்பர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கடகம்:** சிலர் உங்களை ஏமாற்ற முயற்சிக்கலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மித வேகத்தைப் பின்பற்றவும்.

**சிங்கம்:** உங்களின் செயற்றிறன் கண்டு, மற்றவர்கள் வியப்படைவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் களை வாங்குவர்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆதரவு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பை உணர்ந்து செயல்படுவீர்கள். ஆதாயம் படிப்படியாக உயரும். பிள்ளைகளின் வழியில் திடீர் செலவு ஏற்படும்.

**துலாம்:** புதிய அணுகுமுறையால் வளர்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். ஆரோக்கியம் ப்லம் பெறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் உயரும். உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும்.


**தனுசு:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் வருமானம் காண்பீர்கள். வெளியூர் பயணத்தைப் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. மாணவர்களுக்கு படிப்பில் மட்டும் கவனம் தேவை.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவரும் கூட உதவி கேட்டு வருவர். தொழில் முன்னேற்றத்துக்கான வாய்ப்புத் தேடி வரும். மனைவியின் ஆலோசனை நன்மையளிக்கும். எதிர்பார்த்த பணக் கடன் விரைவில் கிடைக்கும்.

**கும்பம்:** கடந்த கால கடின உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய பொருள்கள் வாங்கி மகிழ்வர்.

**மீனம்:** ஆன்மிக விடயத்தில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். மாணவர்கள் தேர்வு நோக்கில் படிப்பர்.

## களமாட வருகிறான்
# கணிதன்






நடிகர் முரளியின் மகன் அதர்வாவின் நடிப்பில் உருவாகியிருக்கும் புதிய படம் 'கணிதன்'. கலைப்புலி எஸ்.தாணுவின் பிரம்மாண்டமான தயாரிப்பில், டி.என்.சந்தோஷ் இயக்கத்தில், கதாநாயகியாக கேத்ரீனா தெரேசா நடித்துள்ள இந்தப் படத்தில். கே.பாக்யராஜ், ஆடுகளம் நரேன், மனோபாலா, கும்கி அஸ்வின் ஆகிய பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி உலகமெங்கும் வெளியாகவுள்ள இந்தப் படத்தைத் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 450 திரையரங்குகளில் திரையிடப்போவதாக தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு தெரிவித்துள்ளார். சென்னையில் இந்தப்படத்தின் வெளியீட்டு உரிமையை எஸ்.பி.ஐ. சினிமாஸ் நிறுவனம் வாங்கியுள்ளது.

அதே நாளில் அருள்நிதி நடிப்பில் உருவாகியுள்ள 'ஆறாது சினம்' என்ற திரைப்படமும் வெளியாகவுள்ளது. அதேநேரத்தில், எஸ்.ஏ.சந்திரசேகர், பா.விஜய் நடிப்பில் உருவாகியுள்ள 'நையப்புடை' படமும் அதே திகதியில் வெளிவர உள்ளதாகத் திரை உலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எது எப்படியோ, பலரால் எதிர்பார்ப்புடன் பேசப்படும் மூன்று திரைப்படங்களும் ஒரே தினத்தில் போட்டியாகக் களம் இறங்குவது இரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த ஜெனரேஷனுக்கு நம்ம கஷ்டம் எல்லாம் எங்கே தெரியப் போகுது. ஒரு காலத்தில நாங்க மொபைல் போனில் 'S' டைப் பண்ண 7 ஆம் நம்பர் பட்டனை நாலு தடவை அமுக்குவோம்.

நான் எவரையும் நம்பி இல்லை என்று சொல்பவர்கள் திமிர் பிடித்தவர்கள் அல்ல. ஒரு வேளை எல்லோராலும் ஏமாற்றப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் இருக்கலாம்.

## புத்தி உள்ள மனிதன்

[illegible]



மனிதன் மாறிக்கொண்டே இருக்கிறான் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கணினியின் வடிவமைப்பு...




பேஸ் புக்கில் பிடித்தவை...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | 4 | | |
| 4 | | 1 | | | | | 8 | 3 |
| | 8 | | 5 | | | 1 | | 6 |
| 5 | | | | | | 8 | 7 | |
| 2 | 1 | | | | | | 5 | 4 |
| | 7 | 4 | | | | | | 2 |
| 1 | | 5 | | | 9 | | 3 | |
| 6 | 9 | | | | | 7 | | 5 |
| | | 2 | 8 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 7 | 6 | 8 | 5 | 3 | 4 |
| 6 | 3 | 5 | 4 | 9 | 1 | 7 | 8 | 2 |
| 7 | 4 | 8 | 3 | 2 | 5 | 1 | 6 | 9 |
| 2 | 6 | 4 | 8 | 1 | 9 | 3 | 7 | 5 |
| 5 | 9 | 1 | 2 | 7 | 3 | 8 | 4 | 6 |
| 8 | 7 | 3 | 5 | 4 | 6 | 9 | 2 | 1 |
| 3 | 8 | 6 | 9 | 5 | 4 | 2 | 1 | 7 |
| 4 | 5 | 7 | 1 | 3 | 2 | 6 | 9 | 8 |
| 1 | 2 | 9 | 6 | 8 | 7 | 4 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கின்றனர்). [illegible] நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



காதல் என்பதைப் பெண்ணிடம் காட்டாமல் போயிருந்தால் ஆண்களை பெண்கள் வேற்றுக்கிரக வாசியாகத் தான் பார்த்திருப்பார்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## அட்டவணைப்படுத்தப்படாத
## பதவியணி வெற்றிடத்தை நிரப்புதல் - 2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 01.01.2013ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமைவாகவும், உள்ளூராட்சி அமைச்சு செயலாளரது NP/05/01/US/Va.fl/App/06 இலக்க 23.10.2015 ஆம் திகதிய, NP/05/01/US/Cha.UC/04 இலக்க 14.01.2016 ஆம் திகதிய கடிதங்களுக்கமைவாகவும், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/1/ET/Un.Sche/Appoint/05/Chava UC ஆம் இலக்க 2015.10.29ஆம் திகதிய, NP/14/1/ET/Un.Sche/Appoint/12/Jaff (Chava UC)ஆம் இலக்க 2016.01.26ஆம் திகதிய கடிதங்களுக்கமைவாகவும் சாவகச்சேரி நக ராட்சி மன்றத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவியில் காணப்படும் வெற்றிடத்தை உரிய ஆட் சேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிப் பெயர் | வகுப்பு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளி | III | 02 |

சேவை நிபந்தனைகள்:

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று (03) வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்:

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மூலம் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப்பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (08.03.2016) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை:

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்ட தற்கமைவாக கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப் படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக் கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:

01. சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் ரூபா 50 இனைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப் படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப் பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ முன் வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரிய வரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
06. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத் திகதியான 08.03.2016ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள்:

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து(5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் கௌரவ ஆளுநரினால் அனுமதியளிக்கப் பட்டபடி தரம் 8/ ஆண்டு 9 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

PL1- 2006 A - Rs. 11730-10x120-10x130-10x145-12x160-17600

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
24.02.2016.

கா.சண்முகதாசன்
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(C/29512)(10.17.18.20)

---

# சௌள உபநயன பிரம்மோபதேச அழைப்பு



அநேக நமஸ்காரம்,
ஸவஸ்தி ஶ்ரீ நிகழும் மங்கலகரமான
மன்மத வருடம் மாசித்திங்கள்
12ஆம் நாள் (24.02.2016) புதன்கிழமை
உத்தர நட்சத்திரமும், துதியை திதியும்,
அமிர்த யோகமும் கூடிய முற்பகல் 11.05 மணிமுதல்
12.25 மணிக்குள் அமைந்த
இடப லக்ன சுபமுகூர்த்த வேளையில்

பாரத்துவார கோத்திரம்
மாதகல் நுணசை முருகன் தேவஸ்தானம்
சிவஶ்ரீ. சாம்பசிவ பாலசுப்பிரமணியக் குருக்கள்
ரதிரூபா தம்பதியரின்
பௌத்திரனும்

காசிப கோத்திரம்
அளகொல்லைப் பிள்ளையார் தேவஸ்தானம்
சிவஶ்ரீ.இரத்தின மகாலிங்கக் குருக்கள்
மதிவதனி தம்பதியரின்
தௌஹித்திரனும்

எமது ஏக புத்திரனுமான

## சிரஞ்ஜீவி வர்ஷாயுத சர்மாவுக்கு

சௌள, உபநயன பிரம்மோபதேசம் செய்ய நுணசை முருகன்,
அழகொல்லைப் பிள்ளையார், மீனாட்சி, கண்ணகை அம்மன் திருவருளும்,
தர்மசாஸ்தாகுருகுல அதிபர் சிவஶ்ரீ தாணு மஹாதேவக்குருக்களின் குருவருளும்,
பெரியோர்களின் நல்லாசிகளும் கூடியிருப்பதால் மேற்படி வைபவம்
"நுணசை முருகன் தேவஸ்தான மண்டபத்தில்" நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம் வருகைதந்து குமாரனை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மோபதேச குரு
"வேதாகம ஞான பாஸ்கரன்"
**தர்மசாஸ்தா குருகுல அதிபர்**
**சிவஶ்ரீ தாணு மஹாதேவக் குருக்கள் (இணுவில்)**

**வர்ஷா இல்லம்**
**நுணசை வீதி, மாதகல்.**
T.P.No: 077 1796742

**தாங்கள் நல்வரவை நாடும்**
**சிவஶ்ரீ.பால துஷ்யந்தக் குருக்கள் (கோபி)**
**ஶ்ரீமதி. சுவர்ணா தம்பதியர்.**

**(24.02.2016) புதன்கிழமை மதியம்**
**விசேட தவில் நாதஸ்வர இசைக்கச்சேரி நடைபெறும்**

**மாலை 4.00 மணிக்கு "ஸட்ஷபோன்" இன்னிசை நிகழ்ச்சி**
**எமது இல்லத்தில் இடம்பெறும்.**

**27.02.2016 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு**
**பிரணவ, ச்ரத்தா, மேதா பலாசகர்மா பூஜை நடைபெறும்.**

(C/29511)(10.17.20)

---

# 70ஆவது பிறந்த நாளில் நீங்கா நினைவுடன்

**தோற்றம்**
24 . 02 . 1946



**மறைவு**
27 . 11 . 2015

அமரர்

## தாமோதரம்பிள்ளை லோகநாதன் (ரமணா)

அப்பா! இன்று உங்கள் பிறந்தநாள்
எங்களுடன் நீங்கள் இல்லையே!
நெஞ்சு புகுறுதே உங்களைக் காணமுடியாது
என் உயிரில் கலந்த என் அன்பு தெய்வமே
உங்கள் பிரிவு எங்களுக்கு தாங்கமுடியவில்லையே
எங்களுடன் நீங்கள் சேர்ந்திருக்க
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து வாருங்கள் அப்பா...

யோ.லெ. அலெக்ஸ் நிக்சன்
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(69542)
(15,17,20)

**உங்கள் நினைவுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



**செல்லையா கந்தசாமி (செட்டியார்)**
**(ஓய்வு பெற்ற ஊழியர் - யாழ்போதனா வைத்தியசாலை)**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி கடந்த 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சின்னப்பு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் குகனேஸ்வரியின் (பவளம்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகராசா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான பூமணி, கோகிலாம்பாள் மற்றும் மகாலிங்கம், இரத்தி னாம்பாள் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் குகரூபன் (பிரான்ஸ்), குகரூபனா (ஜேர்மனி), குகதீபன் (ஜேர்மனி), குகசீலன் (கொழும்பு), குகசோபனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகினி (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (ஜேர்மனி), நளினி, திருமகள், நகுலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிருந்தா, அஸ்வின், லோஜன், லக்ஷ்மணன், கஜானன், நதீஷனா, நதீபனா, கவிஷன், கவிஷனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (25.02.2016) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**28, சின்னாலங்கண்டு ஒழுங்கை,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.** (69549)(15.17)
தகவல்: **குடும்பத்தினர்.**

---

**சபாபதி பசுபதி**
(ஓய்வுநிலை உதவிப் பதிவாளர்- பதிவாளர் திணைக்களம், அரச மொழிபெயர்ப்பாளர்)



தோற்றம்: 15.02.1930 மறைவு: 23.02.2016

அனலை தீவைப் பிறப்பிடமாகவும், பவானி பவனம் டச்சு றோட், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி பசுபதி (ஓய்வுநிலை உதவிப் பதிவாளர், அரச சத்திய பிரமாண மொழிபெயர்ப்பாளர்) நேற்று (23.02. 2016) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி-பைரவி தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பூபதியின் (பூமணி) அன்புக் கணவரும், திருமதி பவானி சுபசிறியின் (ஆசிரியை-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும், முத்துக்குமாரு சுபசிறியின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான இராசமணி சுப்பையா, சபாபதி சின்னம்மா, சபாபதி கோவிலான், சபாபதி கணபதி, பொன்னம்மா சபாபதி மற்றும் சபாபதி மாணிக்கம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, யோசேப், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02. 2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'பவானி பவனம்',**
**டச்சு வீதி, உடுவில்.** (69546) (10.20)
**தகவல்: குடும்பத்தினர்.**
0776242839 (மருமகன்)

## இனந்தெரியாதோரின் தாக்குதலில் கிராமசேவகரின் அலுவலகம் சேதம்

**வவுனியாவில் சம்பவம்**



வவுனியா, பெப்.24
வவுனியா மகாறம்பைக் குளம் 215ஏ கிராம சேவையாளரின் அலுவலகம் நேற்றுமாலை 4.30மணியளவில் இனந்தெரியாதவர்களின் தாக்குதலில் சேதமடைந்துள்ளது.
வழமையாக நேற்றுத் தமது பணிகளை நிறைவு செய்த பின்னர், கிராம சேவையாளரும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளரும் அலுவலகத்தை மூடிவிட்டுச் சென்ற குறுகிய நேரத்திற்குள் உட்புகுந்த இனந்தெரியாதவர்கள், போத்தல், கற்களைக் கொண்டு அலுவலகத்தின் யன்னல் கண்ணாடிகள் அனைத்தையும் நொறுக்கியதுடன், பிரதான கதவையும் உடைத்து உட்புகுந்து உபகரணங்களைச் சேதப்படுத்தியுள்ளனர்.
இந்தச்சம்பவத்தை குறித்த கிராமசேவையாளர், வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜாவுக்கு தெரிவித்ததையடுத்து, வவுனியா அரச அதிபர் எம். புஸ்பகுமார, சேதத்திற்குள்ளான கிராமசேவையாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.
குறித்த சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-5)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

**35 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறு**மதியுடைய ஹெரோயினுடன் பங்களாதேஷ் பிரஜையொருவர் கட்டுநாயக்க சர்வதேசவிமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
உளவுப் பிரிவினர் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப் பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்
பங்களாதேஷ் தலைநகரான டாக்காவிலிருந்து வருகை தந்த சந்தேக நபர் ஹெரோயினைத் தமது பயணப் பொதியில் சூட்சுமமாக மறைத்து வைத்துக் கொண்டு வந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்
குறித்த ஹெரோயின் 3.4 கிலோகிராம் எடையுடையது என தெரிவிக்கப்படுகின்றது.
சந்தேக நபரை 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாகப் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் குறிப்பிட்டனர். (து)

## கண்ணீர் அஞ்சலி




**தோற்றம்:** 19 . 02 . 1929
**மறைவு:** 17 . 02 . 2016

எமது தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்
**திருமதி கண்ணகி தயாசீலன்**
அவர்களின் மாமனார்
**கதிரிப்பிள்ளை நன்னித்தம்பி**

அவர்கள் கனடாவில் இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியகல்வியியலாளர் கழகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்**
**கல்லூரி கோப்பாய்.**
(69543)(10.17.20)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 01 . 10 . 1980
ஆண்டவன் அடியில் 04 . 03 . 2007

நயினை **கனகரெட்ணம் சுரேஸ்குமார்**
(அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம்)

எங்கள் இதயத்தில் என்றும்
நிறைந்து இருக்கும் அன்பு மகனே
எத்தனை ஆண்டுகள் போனாலும்
மறவாது ஆறாத்துயர் எம் மகனே
உடன் பிறந்த சோதரரே உருகிறதே எங்கள் மனம்
மாமாவே மாமாவே மீண்டும் எங்களிடம் வருவீர்களா?
எங்கள் சித்தப்பாவே எமக்கு அருகில் வாறதெப்போ?
எங்கள் மைத்துனரே என்றென்றும் மறவோம் ஐயா.
என் அன்பு பெரியப்பாவே
மீண்டும் வருவீர்களா ? இப்பூமிக்கு
உங்கள் ஆத்மா சாந்தி பெறவும்
அம்மாளின் பாதடியில் இன்புற்றிருக்கவும் வேண்டுகிறோம்.
[illegible]

**140, கண்டி வீதி,**
**கச்சேரியடி, யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்.**
(69551)(10.17)

## ஜேர்மனி, ஒஸ்ரியாவுக்கான ஜனாதிபதி பயணம் வெற்றி

**ரவி, சமரசிங்க, தயா கமகே கூட்டாகத் தெரிவிப்பு**

கொழும்பு,பெப்.24
ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் ஜேர்மனி மற்றும் ஒஸ்ரி யாவுக்கான பயணமானது இலங் கையின் அபிவிருத்தி, முதலீட்டு, பொருளாதாரத்தில் திருப்பு முனை யை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதியுடன், அந்தப் பயணத்தில் கலந்துகொண்ட அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மகிந்த சமரசிங்க, தயா கமகே ஆகியோர் தெரிவித்தனர்.
இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஜனாதிபதியின் ஜேர்மனி மற்றும் ஒஸ்ரியாவுக்கான பயணமானது வெற்றிகரமானதாக அமைந்துள்ளது. குறித்த இரண்டு நாடுகளிலும் ஜனாதிபதிக்குச் சிறந்த வரவேற்பு இருந்தது. ஜேர்மனிக்கும் இலங் கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகள் புதுப்பிக்கப்பட்டதுடன் அந்த நாட்டின் உதவித் திட்டங்களை இலங்கைக்குப் பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பமாக அமைந்திருந்தது.
அதேபோன்று ஒஸ்ரியாவின் நிறைவேற்றுத் துறையில் இருக்கும் ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி அந்தநாட்டுக்குச் சென்றார். ஜனாதிபதிக்கு அங்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஒஸ்ரியா எமது நாட்டுக்கு பல்வேறு உதவித்திட்டங்களை வழங்க முன்வந்துள்ளது.- என்றனர். (ர)

### செயல்முறைப்

இவ்வாறு அறிவித்துள்ளார் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன்.
இன்றைய தினம் வடக்கு மாகாணத்தில் நடைபெறும் அடைப்புப் போராட்டத்தை அடுத்தே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் இன்று நடைபெறும் செயல் முறைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சைக்கிளிலோ அல்லது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் உதவியுடனோ பரீட்சைக்குத் தோற்றுங்கள்.
எனினும் இன்றைய செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்குப் பிறிதொரு நாளில் செயல்முறைப் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் – என்றார்.
இதேவேளை, நாடளாவிய ரீதியில் ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் சங்கீதம் மற்றும் நடன மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை டிசெம்பரில் நடைபெற்றிருந்தது. அதன் செயல்முறைப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4)

### கோப்பாய்

வர்கள் என்ற சந்தேகத்தில் 3 பேரைக் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித் தனர்.
நேற்றுக் கைது செய்யப்பட்ட குறித்த மூன்று சந்தேகநபர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
கோப்பாயில் கடந்த வாரம் ஆறு வீடுகளில் இடம்பெற்ற தொடர் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள குறித்த மூவரிடமிருந்தும் எந்தப் பொருள்களும் மீட்கப்படவில்லை. எனினும் விசாரணைகள் தொடர்கின்றன என்றும் பொலிஸார் கூறினர்.
கைது செய்யப்பட்ட மூவரும் சுமார் 20 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் கோண்டாவில், உரும்பிராயைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், குறித்த சந்தேக நபர்கள் ஆரம்ப விசாரணைகளின் பின்னர், நீதிமன்றில் முற்படுத்தப்படலாம் என்றும் குறிப்பிட்டனர். (த-வ-4-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கில்

வவுனியாவில் கடந்த 16 ஆம் திகதி பாடசாலைச் சிறுமி ஒருவர் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், சிறுமியின் சாவுக்கு நீதி வேண்டியும், இனிமேலும் இவ்வாறான சாவுகள் இடம்பெறாமல் தடுக்கும் வகையிலும் வவுனியா மாவட்டத்திலுள்ள பெண்கள் அமைப்புக்கள், பிரஜைகள் குழு மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய வவுனியா மாவட்டத்தில் நேற்றைய தினம் மிகப் பெரியளவிலான கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் பல்வேறு பாடசாலைகளிலும் அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் இன்றைய தினம் அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆகியவற்றின் சேவைகளை நிறுத்தி அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைக்குமாறு, வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கமைய போராட்டத்துக்குத் தமது சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம், இந்தப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரின் முழு ஒத்துழைப்பைக் கோரியுள்ளதுடன், இன்று இடம்பெறும் செயன்முறைப் பரீட்சையைக் குழப்பவேண்டாம் என்றும் கேட்டுள்ளது.

மேலும், யாழ்.மாவட்டச் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில், தமது சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இன்றைய அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன், திருநெல்வேலிச் சந்தை இன்றைய தினம் இயங்காது என்று சந்தை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில், சகல தரப்பினரையும் இன்றைய அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் விடுத்துள்ள அறிக்கையில்,

மாணவியின் படுகொலையைக் கண்டித்து வடக்கு மாகாணத்தில் நடைபெறும் அடைப்பு நடவடிக்கைக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அனைவரையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை முழுமையாக மூடவேண்டும். பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட வேண்டும். அரச – தனியார் போக்குவரத்துச் சேவையினரும் ஓட்டோச் சங்கத்தினரும் தமது போக்குவரத்துச் சேவைகளை முழுமையாக நிறுத்தவேண்டும். அரச உத்தியோகத்தர்கள் அரச சார்பற்ற தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள் கடமைக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட வேண்டும். அனைத்துத் தரப்பினரும் எந்தவித பாகுபாடுமின்றி முழுமையான ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும் சிவநேசன் கேட்டுள்ளார்.

யாழ். வணிகர் கழகம் விடுத்துள்ள அறிக்கையில், காலை 8 மணி தொடக்கம் மு.ப. 10 மணிவரை கடைகளைப் பூட்டி அமைதியான முறையில் கண்டனத்தைத் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்த முடிவு, நேற்று மாலை 4.30 மணிக்கு வவுனியா பிரஜைகள் குழுவினால் மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமையவே எடுக்கப்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், நடைபெறவுள்ள அடைப்புக்கு எமது சங்கம் முழு ஆதரவை வழங்குவதோடு, அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் ஆளணியினர் மற்றும் மாணவர்கள் பாடசாலை வளாகத்தில் காலை இரண்டுமணி நேரம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், யாழ். பல்கலைக்கழக சமூகமும் இன்றைய அடைப்புக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. இதில் அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம் இன்று கற்கைச் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகள் ஆகியவற்றை விடுத்து அடைப்புக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளதுடன் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் ஆதரவு வழங்குவதாகக் கூறியுள்ளது. (த-வ-5-4-2)

## மகசினிலுள்ள

தயாபரன், செல்லத்துரை கிருபானந்தன், தி.மனோகரன், யோசப் செபஸ்தியான், சுப்பிரமணியன் கபிலன், இராசதுரை திருவருள் மற்றும் இரவீந்திரன் மதனி ஆகியோரே உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமது விடுதலை குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரையில், தாம் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும், நீண்டகாலமாக விசாரணைகளின்றி சிறைச்சாலைகளில் தங்கியிருந்து சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்துவரும் தாம் விடுதலையை வலியுறுத்தி உயிரைத் துச்சமென மதித்தே இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, எந்தவித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தம்மை உடனடியாக விடுதலைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். கரவெட்டி வடக்கு, கரணவாயைச் சேர்ந்த மதியரசன் சுலக்ஷன், நாவலப்பிட்டி, மக்கும்பரவைச் சேர்ந்த கணேசன் சந்திரன் ஆகிய இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-சி)

## போர்க்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1948 ஆம் ஆண்டு முதல் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குக் கடந்த காலங்களில் தீர்வுகள் காணப்படவில்லை. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே தேசிய அரசு உதயமானது.

குறிப்பாக, 1952 ஆம் ஆண்டில் சிங்கப்பூரை இலங்கைபோல் ஆக்குவார் என்று அந்த நாட்டுப் பிரதமர் கூறியிருந்தார். சிங்கப்பூரில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. ஆனால், நாம் அந்தப் பிரச்சினையை முகாமை செய்யவில்லை. இதனால் 30 வருட காலப் போர் ஏற்பட்டது.

ஐ. நா. மனித உரிமைகள் சபையினால் எம் மீது முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கவேண்டும். வடக்கு – கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். இதுதான் இறுதிச் சந்தர்ப்பம். நாட்டை அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இவற்றைச் செய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் தேசிய அரசுடன் இணைந்துள்ளனர். இதை நாம் வரவேற்கின்றோம் – என்றார். (த-வ-5)

## சூரியன்

காணப்படும் என்று, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.,

34 பாகையை அண்மித்ததான வெப்பநிலை நிலவும் என்றும், இது சில தினங்களுக்கு நீடிக்கும் என்றும் திணைக்களம் கூறியுள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் பெரும்பாலான பகுதிகளில் வழமையை விட அதிக வெப்ப நிலை காணப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தில் வழக்கத்தை விடவும், அதிகமாக ஒன்றரைப் பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.

அத்துடன், அம்பாந்தோட்டை, கட்டுகஸ்தோட்டை, மன்னார் மற்றும் திருகோணமலையில் வழக்கத்தை விட 3 பாகை செல்சியஸ் அதிக வெப்ப நிலை காணப்பட்டுள்ளது.

அநுராதபுரம், மட்டக்களப்பு, குருநாகல், மகாஇலுப்பல்லாம, புத்தளம், இரத்மலானை, மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் வழமையை விட அதிக வெப்ப நிலை பதிவாகியுள்ளது. இரவு நேர வெப்பநிலையும் வழக்கத்தை விட சுமார் 2, 3 பாகை செல்சியஸ் அதிகமாகவே காணப்பட்டுள்ளது. சூரியன் நேற்று மத்திய கோட்டில் உச்சம் கொடுப்பதால் சில தினங்களுக்கு வெப்பநிலை தொடர்ந்து உயர்வாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ-5-ரி4)

## மாணவி

வவுனியா அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களால், நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. பாடசாலைகளுக்கு முன்பாகக் கறுப்புப் பட்டி அணிந்து அவர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். அத்துடன் வீதிகளின் இருமருங்கும் மாணவர்கள் பதாகைகளை ஏந்திய வண்ணம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கிளிநொச்சியில், குறித்த மாணவியின் கொலையைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்கு உடன் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் வர்த்தகர்களால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்களால் மாணவியின் கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த 14 வயது மாணவி, கடந்த புதன்கிழமை வீட்டில் தனித்திருந்தவேளை, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுத் தூக்கில் தொங்க விடப்பட்டிருந்தார்.

(விரிவான தகவல்கள், படங்கள் 8 ஆம், 9 ஆம் பக்கங்களில்)

## அரசமைப்புச்

மாலை வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்டபோதும், திருத்தங்களை உள்வாங்கும் நோக்கில் வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது, முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பிக்குமாறு சபாநாயகர் அறிவித்தார்.

இதன்போது உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அமைச்சரவை உபகுழுவும் இதை ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போது மேலும் சில திருத்தங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, நாளை (இன்று) வாக்கெடுப்பு நடத்தாது பிறிதொரு நாளில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.எனினும், இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) விவாதம் இடம்பெறும். இதன்போது உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துகளும் உள்வாங்கப்படும் –என்றார்.

இதனைத் தொடர்ந்து, சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். இதன்போது அவர், உத்தேச திருத்தங்களையும் முன்வைத்தார். அவ்வேளை குறுக்கீடு செய்த ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க, திருத்தம் தொடர்பில் இன்னும் பேச்சு நடத்தப்படுகின்றது என்று பிரதமர் கூறுகின்றார். ஆனால், சபை முதல்வர் திருத்தங்களை முன்வைக்கின்றார். இது இறுதி திருத்தமா? அப்படியானால் நாளையே (இன்று) வாக்கெடுப்பு நடத்திவிடலாம் தானே – என்றார்.

அநுரகுமாரவின் இந்தத் தர்க்கத்தால் சபை முதல்வர் ஆத்திரமடைந்தார். இருவருக்குமிடையில் சிறிது நேரம் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அதன் பின்னர் உத்தேச திருத்தங்களையே முன்வைக்கிறேன் என்று சபை முதல்வர் குறிப்பிட்டார். (த-வ-5)

## ஞானசார

ஹோமாகம நீதிவான் ரங்க திசாநாயக உத்தரவிட்டார்.

குறித்த வழக்கில் சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் ஞானசார தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீதிமன்றை அவமதித்தமை தொடர்பான அவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பில் ஞானசார தேரருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு தொடர்பான பிரதியொன்று சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும் எனவும், வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் எனவும் நீதிவான் அறிவித்துள்ளார். (த-வ-5)

## அடுத்த

இலங்கைக்கு வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

இதனை நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் தெரிவித்தார் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தகேஹிகோ நகோ.

இரண்டு நாள் உத்தியோகபூர்வப் பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர், நேற்றுக்காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையில் கல்வி மற்றும் நீர்ப்பாசனத் துறைகளின் அபிவிருத்திக்காக, விசேட உதவிகளை வழங்க எதிர்பார்ப்பதாக தகேஹிகோ நகோ, ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கூறியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

இலங்கையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த விசேட ஒத்துழைப்புக்களை வழங்குவதாகக் கூறியுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், இலங்கை தற்போது புதிய முதலீடுகளுக்குச் சிறந்த இடமாக விளங்குவதாகவும் கூறியுள்ளார்.

ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் அற்று வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதனால் அனைத்து நிதியுதவிகளையும் நூற்றுக்கு நூறு வீதமும் உரிய வேலைத் திட்டங்களுக்கு இணைத்துக் கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்

இவை தொடர்பாகத் தான் தனிப்பட்ட முறையில் அவதானம் செலுத்துவதாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தகேஹிகோ நகோவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## வடக்கு

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசமைப்புச் சபையை நியமிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்கிறது. குறிப்பாக வடக்கில் 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர், இராணுவத்துக்காக குரல் எழுப்பியதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நல்லிணக்க பொறிமுறைக்கான செயலணியின் செயலாளராகவுள்ள பாக்கியசோதி சரவணமுத்து நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டவர். நாட்டுக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் வருவதற்கு காரணமாக இருந்தவர். இவரும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்.

அத்துடன், விமானப்படையின் ஜெட் விமானங்கள் அண்மையில் வடக்கு வான்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டன. இதற்கு அங்குள்ள இனவாதிகள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால், வடக்கு வான்பரப்பில் பயிற்சியில் ஈடுபட வேண்டாம் என விமானப் படைக்கு உத்தியோகபூர்வமற்ற ரீதியில் மறைமுகமாக உத்தர விடப்பட்டுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அரசமைப்பு மாற்றம் பற்றி பேசப்படுகிறது. பிக்குகள் – இராணுவத்தினர் – புலனாய்வாளர்கள் வேட்டையாடப் படுகின்றனர் – என்றார். (த-வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி காயம்


இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள ஆசிய கிண்ணப் போட்டித் தொடரில் இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி விஷயாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக பங்களாதேஷுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள டோனி தலைமையிலான இந்திய அணி, நேற்று முன்தினம் கடும் பயிற்சிகளில் ஈடுபட்டது. இதன்போது அணித் தலைவர் டோனி திடீரெனத் தசைப்பிடிப்புக்கு உள்ளாகியுள்ளார்.

இதனால், அவர் தொடரில் விளையாடுவது சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில், அவருக்கு மாற்று வீரராக குஜராத்தைச் சேர்ந்த விக்கெட்காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான பார்தீவ் படேல் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தேர்வுக்குழு கருத்துத் தெரிவிக்கையில்,
அணித்தலைவர் டோனியின் முதுகுப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால்பெரும் பாதிப்புகள் எதுவும் இல்லை. இருந்தபோதிலும், நாங்கள் முன்கூட்டியே சில ஏற்பாடுகளைச் செய்து வைப்பது சிறந்தது. ஆகையாலேயே பார்தீவ் படேல் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார் என அக்குழு தெரிவித்துள்ளது. (த)




# ஆசிய கிண்ணம் இன்று ஆரம்பம்; இந்தியா-பங்களாதேஷ் மோதல்

ஐந்து அணிகளின் பங்குபற்றலுடன் இன்று ஆரம்பமாகவுள்ள ஆசிய கிண்ண ரி-20 போட்டித் தொடரின் முதல் போட்டியில் பங்களாதேஷ் - இந்திய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

பங்களாதேஷில் நடைபெறும் இப்போட்டித் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் அணிகள் பங்கேற்றுள்ளன.

இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டி மிர்பூரில் இன்று நடைபெறவுள்ளதுடன், இலங்கை - ஐக்கிய அரபு இராச்சிய அணிகளுக்கிடையிலான போட்டி நாளைய தினம் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரானது இதுவரை காலமும் 50 ஓவர் கொண்ட போட்டியாகவே நடைபெற்றது. எனினும், முதன் முறையாக 20 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடத்தப்படுவது இதுவே முதல் தடவை.


இறுதிப் போட்டி மார்ச் 6ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து மார்ச் 9 ஆம் திகதி ரி-20 உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்ஜட் ஜாவிட் தலைமையில் ஐக்கிய அரபு இராச்சியம் அணி முதன் முறையாக ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்றுள்ளது.

இலங்கை அணியை லசித் மலிங்கவும், இந்திய அணியை டோனியும், பங்களாதேஷ் அணியை மஸ்ரவி முர்தஸாவும், பாகிஸ்தான் அணியை சயீட் அப்ரிடியும் வழிநடத்துகின்றனர். (த)

# ஆமிருடன் விளையாட ஆசை

## விராட் கோஹ்லி



5 வருடபோட்டித் தடைக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்குத் திரும்பியுள்ள பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிரின் பந்துகளுக்கு முகம்கொடுக்க ஆசைப்படுவதாக இந்திய துணை அணித்தலைவரும் அதிரடி வீரருமான விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிய கிண்ணப் போட்டித் தொடரில் பாகிஸ்தான் - இந்திய அணிகள் மோதவுள்ளன. இப்போட்டி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ள நிலையில், பாகிஸ்தான் அணி வலிமையானது. இருப்பினும் அதனை நாங்கள் மற்ற அணிகளை வீழ்த்துவது போன்று இலகுவாக வீழ்த்துவோம் என கோஹ்லி மேலும் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 27ஆம் திகதி மிர்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டி தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விராட் கோஹ்லியிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,
5 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் சிறப்பான முறையில் சர்வதேச அரங்குக்குத் திரும்பியுள்ள ஆமிர், அண்மைக்காலமாக அச்சுறுத்தும் வகையில் பந்து வீசி வருகிறார். அவரது பந்துகளை எதிர்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அத்துடன், பாகிஸ்தானுக்கு எதிராக மட்டுமல்ல, எல்லா அணிகளுக்கு எதிராகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவே இந்திய அணி விரும்புகிறது. எல்லா அணிகளையும் நாங்கள் ஒரேமாதிரிதான் அணுகுகிறோம். பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடும்போது நான் எந்தவொரு வித்தியாசத்தையும் உணரவில்லை. பாகிஸ்தான் அணி மிகவும் வலிமையானது. எல்லா அணிகளுக்கு எதிராகவும் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த விரும்புகிறோம். அதேபோல் தான் பாகிஸ்தானுக்கு எதிராகவும் சிறப்பாக விளையாட விரும்புகிறோம்.

நாங்கள் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். ஓர் அணியின் திறமை மீது நம்பிக்கை கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும் எனத்தெரிவித்துள்ளார். (த)

# றியல் மட்ரிட்-மலாகா போட்டி சமநிலையில்

தொடரின் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற றியல் மட்ரிட், மலாகா அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தன.

இப்போட்டியில், றியல் மட்ரிட் சார்பாக பெறப்பட்ட கோலை, போட்டியின் 33ஆவது நிமிடத்தில் டொனி குரூஸினால் அடிக்கப்பட்ட ப்ரீ கிக்கை தலையால் முட்டி றியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ கோலாக்கினார். எனினும் அவர் அப்பந்தை ஓப் சைட்இலிருந்தே பெற்றார் எனச் சர்ச்சை நிலவியிருந்தது. பின்னர், கிறிஸ்டியானோ றொனால்டோ வீழ்த்தப்பட்டதையடுத்து வழங்கப்பட்ட தண்டனை உதையை அவர் கோலாக்கத் தவறியிருந்தார். பின்னர், போட்டியின் 66ஆவது நிமிடத்தில் மலாகா அணியின் ராபுல் அல்பென்டோஸ், ஒரு கோலைப் பெற்று கோல் எண்ணிக்கையை சமப்படுத்தியிருந்தார்.

இப்போட்டியில், காயம் காரணமாக றியல் மட்ரிட் அணியின் கரிம் பென்ஸீமா, கரத் பேல் ஆகியோர் பங்கேற்காத நிலையிலும் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்ட ரபேல் வரானே ஆகியோர் பங்கேற்காத நிலையிலும் அவ்வணியின் பின்களம் பலமற்றதாகக் காணப்பட்ட நிலையில், கோல்காப்பாளர் நவாஸ் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார்.

இப்போட்டியின் முடிவில் 54 புள்ளிகளைப் பெற்றுள்ள றியல் மட்ரிட், லா லிகா புள்ளிகள் தரவரிசையில் மூன்றாமிடத்தில் இருப்பதுடன் 55 புள்ளிகளுடன் அத்லெட்டிகோ மட்ரிட் இரண்டாமிடத்தையும் 63 புள்ளிகளுடன் பார்சிலோனா முதலாமிடத்திலும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த)


# சமிக்கு வாய்ப்பு

இன்று ஆரம்பமாகவுள்ள ஆசிய கிண்ணம் மற்றும் ரி-20 உலகக்கிண்ணம் போட்டித் தொடர்களுக்கு பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் சமி மற்றும் துடுப்பாட்ட வீரர் சர்ஜீல் கான் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இரு தொடர்களுக்குமான பாகிஸ்தான் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் இடம்பெற்றிருந்த பாபர் அஸாம் மற்றும் ரூமான் ரயீஸ் ஆகியோர் பயிற்சியின் போது காயமடைந்தனர். இதனால் அவர்களுக்கு மாற்று வீரராக மொஹமட் சமி மற்றும் சர்ஜீல் கான் ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தேர்வுக் குழு நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

அதேவேளை, ரி-20 அணியில் மற்றுமொரு மாற்றத்தையும் பாகிஸ்தான் செய்துள்ளது. இப்திகார் அஹமட் நீக்கப்பட்டு அவருக்கு மாற்றீடாக காலித் லதீப் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

2015 மே மாதம் பாகிஸ்தான் அணிக்காக விளையாடிய சமி அதன் பின்னர் அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இந்நிலையில், அவர் மீண்டும் முக்கியமான இரு தொடர்களில் அணியில் இடம்பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். (த)




# வென்றது பார்சிலோனா




ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்றுவரும் லா லிகாத் தொடரின், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் பார்சிலோனா வெற்றி பெற்றுள்ளது.

பார்சிலோனாவுக்கும் லாஸ் பல்மாஸ் அணிக்குமிடையே இடம்பெற்ற போட்டியில், 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியின் ஆறாவது நிமிடத்தில், ஜோர்டி அல்பாவிடம் பந்தைப் பெற்ற லூயிஸ் சுவரேஸ், இந்தப் பருவகாலத்தில் 25ஆவது லீக் கோலைப் பெற்று, ஆரம்பத்திலேயே தனது அணிக்கு முன்னிலை வழங்கியிருந்தார். எனினும் அடுத்த நான்காவது நிமிடத்தில், லாஸ் பல்மாஸ் அணியின் ஜொனதன் வியாராசின் புத்திசாலித்தனமான பாஸ் மூலம் வில்லியன் ஜோஸ் பெற்ற கோலின் மூலம் கோல் எண்ணிக்கை சமமானது. எனினும் போட்டியின் 39ஆவது நிமிடத்தில், லயனல் மெஸ்ஸி, கோல்கம்பத்துக்கு அருகே இருந்து அடுத்த பந்து திரும்பிய நிலையில், அதை பார்சிலோனாவின் நேமார், தனது அணிக்காக, வெற்றிக்கோலாக்கியிருந்தார்.

இப்போட்டியில் பெற்ற வெற்றி மூலம், லா லிகாத் தொடரின் புள்ளிகள் தரவரிசையில், 63 புள்ளிகளுடன், புள்ளிகள் தரவரிசையில் அடுத்த இடத்திலுள்ள அத்லெட்டிகோ மட்ரிட், றியல் மட்ரிட்டை விட குறிப்பிடத்தக்களவான புள்ளிகள் வித்தியாசத்தை கொண்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சம்பியன் ஹென்றிஸுக்கு நேற்று பிரமாண்டமான வரவேற்பு








யாழ்ப்பாணம், பெப்.24
இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கொத்மலை சொக்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனான இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி கால்பந்தாட்ட அணிக்கும், மொறஸ் பிறிட்டினால் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 2015ஆம் ஆண்டுக்கான பிரபல நட்சத்திர விளையாட்டு வீரர் வாக்கெடுப்பில் தெரிவாகி முதலிடம் பிடித்த இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக வீரரும் யாழ்.பல்கலைக்கழக மாணவனுமான செபமாலை நாயகம் ஞானரூபனுக்கும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கல்லூரிச் சமூகத்தினால் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8மணிக்கு யாழ். நகரப் பகுதியிலிருந்து திறந்த வாகனம் மூலம் கால்பந்தாட்ட வீரர்கள் இளவாலை நோக்கி அழைத்து வரப்பட்டுப் பின்னர் இளவாலைச் சந்தியிலிருந்து கல்லூரி வரை பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு திறந்த வெளியரங்கில் கல்லூரியின் உப அதிபர் சத்திய வாணி தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அதிபர் அருட்திரு யேசுதாஸ் அடிகள், கால்பந்தாட்டப் பயிற்றுநர் டனிஸ்ரன் விஜயகுமார் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வீரனும் இலங்கைத் தேசிய கால்பந்தாட்ட அணி வீரனுமான சதீஸும் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2015ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிரபல நட்சத்திர வீரராகத் தெரிவாகிய இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணிவீரனும் யாழ்.பல்கலைக் கழக மாணவனுமான ஞானரூபனும் கௌரவிக்கப்பட்டார்.

கால்பந்தாட்ட வீரர்கள் அனைவரும் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சிவாணந்த ராஜா, இளவாலை மறைக்கோட்ட முதல்வரும் இளவாலைப் பங்குத்தந்தையுமான அருட்தந்தை யேசுரட்ணம் அடிகளார், வலிகாமம் கல்வி வலய கல்விப் பிரதிப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன், வலிகாமம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குலபாலன், உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான ஐ.சசிக்குமார் கே.கஜேந்திரன் ஆகியோர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.24
யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் 'பி' அணியை எதிர்த்து உடுவில் உதயசூரியன் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அரியாலை காந்தி அணியை எதிர்த்து மல்லாகம் ஆர்.டி.எஸ் அணி மோதவுள்ளது. (த-23)

யாழ்ப்பாணம், பெப்.24
வவுனியாவைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19ஆவது வருடமாக வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன் யூட் கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன.

அதில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சுப்பர் ஸ்ரார் அணியை எதிர்த்து அல்-மதார் அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது ஈஸ்வரன் அணி

யாழ்ப்பாணம், பெப்.24
வவனியா ரைவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19ஆவது வருடமாக வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன் யூட் கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக 11பேர் பங்குபற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் சி அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதிக் கொண்டது. அதில் ஈஸ்வரன் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## 53 ஓட்டங்களால் வென்று கிருஸ்ணபாரதி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.24
கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11பேர் பங்கு பற்றும் 6 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கிருஸ்ணபாரதி அணி 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிருஸ்ணபாரதி அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடியது கிருஸ்ணபாரதி அணி 6 பந்துப்பரி மாற்றம் நிறைவில் 3 இலக்கை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றொசாந் 53 ஓட்டங்களையும் சீலன் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் இளந்தென்றல்அணி சார்பில் பிரபு, தீபன், செந்துரன் ஆகியோர் தலா ஒரு இலக்கை வீழ்த்தினர்.

78 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இளந்தென்றல் அணியினர் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கையும் இழந்து 25 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் சுதா 9 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் கிருஸ்ணபாரதி அணி சார்பில் கோபி 4 இலக்கையும் சீலன் 2 இலக்கையும் வீழ்த்தினர். (த-23)

## நியூஸ்ரார்-அராலி அண்ணா இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம், பெப்.24
சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் துணைவி நியூஸ்ரார் அணி, அராலி அண்ணா அணி ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் மூளாய் வளர்மதி அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் துணைவி நியூஸ்ரார் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் அராலி அண்ணா அணியை எதிர்த்து மூளாய் ஐயனார்அணி மோதிக் கொண்டது. இதில் அராலி அண்ணா அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (த-23)




## அராலி சரஸ்வதி ம.வி அணி இரு பிரிவுகளில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 24
சங்கானைக்கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17 வயதுப் பிரிவுகளின் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்களில் அராலி சரஸ்வதி மகாவித்தியலாய அணி சம்பியனானது. அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதிக் கொணடது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியலாய அணி 35:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம் பெற்ற 15 வயதுப்பிரிவுப் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 25;0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுனைட்டெட் அணிக்கு செல்கிறார் மொரின்ஹோ

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பயிற்சியாளரான லூயிஸ் வான் காலை, செல்சியின் முன்னாள் பயிற்சியாளரான ஜொஸ் மொரின்ஹோ பிரதியீடு செய்வார் என இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மிலனின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இன்டர் மிலனின் பயிற்சியாளராகவும் முன்னர் பணிபுரிந்த ஜொஸ் மொரின்ஹோவை உணவக மொன்றில் சந்தித்து விட்டு வெளியேறும் போதே, இன்டர் மிலன் கழகத்தின் முன்னாள் தலைவரான மஸ்ஸிமோ மொரட்டியின் சகோதரியான பெடி மொராட்டியே, மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். (நி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.